

09

# ஜே. ஆர். சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
24-2-1996
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
24-2-1996
LIBRARY

471046

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24-2-1996
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜே. ஆர். சிந்தனை

தொகுப்பு

**ஹக்மன பி. எம். பியசேன**

*சிங்கள மூலத்திலிருந்து மொழியாக்கம்*

*சீராக்கம்*

**எம். கே. ராகுலன்**

*ஒருங்காக்கம்*

**பிரேமதிலக மாபிற்றிகம**

*ஜே. ஆர். ஜயவர்தன கலாசார நிலையம்*
191, தர்மபால மாவத்தை
கொழும்பு - 7, இலங்கை.

474046

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Na hi verena verāni - sammantī' dha kudācancam*
*Averenaca sammanti - esa dhammo sanantano.*

**ANGER IS CONQUERED BY LOVE**

Hatreds never cease through hatred in this world; through love[1] alone they cease. This is an eteral law[2] .

ISBN 955-9269-02-X

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PREFACE

In 1993, the former President of Sri Lanka, His Excellency J. R. Jayawardena opened the J.R. Jayawardena Cultural Centre in Colombo. The centre houses His Excellency's Books, Memoirs and Gifts from Statesmen and World Leaders presented to him while He is in Office as President.

His Excellency had been a long standing association with the late Ven. Karandana Sri Jinaratana Nayaka Maha Thera who was the founder monk of the Asokaramaya Buddhist Vihara in Colombo. This Book contains the Sayings of His Excellency's 65 years of his political and social services in the island.

His Excellency's secretary Mr. W. M. Mapitigama has kindly requested me to put into print the "J.R.'s Thoughts" authored by M.P. Piyasena into the Tamil Language. Therefore, I take great pleasure in fulfilling Mr. W.M. Mapitigama's humble request. I hope the readers will find the contents of the book both interesting and thought provoking.

***By Ven. E. Dhamma Siddhi***

10, July 1995
Kuala Lumpur.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைச் செல்வர் - ஜே.ஆர்
# தேசிய சிந்தனைகள்
## முதலாவது அத்தியாயம்

(1) தமது வாக்குகள் மூலம் புரட்சியை ஏற்படுத்தும் உரிமையை நாம் மக்களுக்கு அளிக்கின்றோம்.

(2) எந்த குலத்திற்கோ பரம்பரைக்கோ அல்லது முன்னணிக்கோ கட்டுப்படாமல் எல்லோருக்கும் ஒரேமாதிரியான நீதியை வழங்குவது எனது நோக்கமாகும்.

(3) மக்களின் பொது உடைமையான வானொலி மூலம் எதிர்க்கட்சியினரது குரலையும் ஒலிபரப்புவதே ஜனநாயகத்தின் உயர்ந்த பண்பாகும்.

(4) வெற்றியும் தோல்வியும் நமக்கு நன்கு பரிச்சயமானவை. அவை எமக்கு மாத்திரம் உரியவை அல்ல, நாம் எட்டு - பதின்மூன்று போன்ற குறைந்தளவு தொகுதிகளையும் பெற்றோம். அதேபோன்று அதிகளவு தொகுதிகளையும் பெற்று வெற்றி வாகை சூடி உச்சநிலையையும் அடைந்தோம்.

(5) நமது அரசியல் கொள்கைகளுக்கு எதிராக உள்ளவர்களோடு மாத்திரமல்லாது, நமக்கு மறைவாய் உட்பகை வளர்ப்பவர்களையும் வெளிக்கொணர்ந்து அவர்களுடனும் நாம் போராட வேண்டும்.

(6) நாட்டையும் மக்களையும் முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்லும் பெரியோர்கள் எப்பொழுதும் நாட்டுக்கும் மக்களுக்கும், முன்மாதிரியாய் வாழவேண்டும்.

(7) நேர்மை, பண்புடைமை, ஒழுங்கு, இறுமாப்பின்மை, செயல்திறன் ஆகிய சிறந்த குணங்கள் கொண்டவர்களே மக்களின் தலைவர்களாக வரத் தகுதி வாய்ந்தவர்கள்.

(8) எமது அரசாங்கத்தின் கீழ் சுவீகரிக்கப்பட்ட காணிகளை - நாம் மீளளிக்க மாட்டோம். ஆனால் அதன் நிர்வாகத்தை நல்ல முறைக்குக் கொண்டு வருவோம்.

(9) மக்களின் ஆணையை, நாட்டுக்கு சேவை செய்ய வேண்டுகின்றேனேயல்லாமல், மக்களின் பொதுப் பணத்தைச் செலவழித்து உல்லாசமாக உலகம் சுற்றித் திரிவதற்கல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sponsored by: JANET HOU AH CHING

(10) எல்லா வேற்றுமைகளையும் மறந்து ஒற்றுமைப் பாதையில் சகோதர மனப்பான்மையுடன் ஒன்ருகச் செயல்பட்டால் மாத்திரமே நாட்டையும் தேச மக்களையும் முன்னேற்றலாம்.

(11) உங்கள் யாவரதும் எதிர்காலம் சுபீட்சமடைய வேண்டுமென்ற உறுதியான குறிக்கோளுடன் நான் செயற்படுகின்றேன்.

(12) ஆட்சியாளர்கள் முதலில் அறநெறியைக் கடைப்பிடித்தால்தான் குடிகளும் தரும வழியில் நீதியோடு வாழ்வார்கள். இன்றேல் நாடும் மக்களும் அழிவதைத் தடுக்க முடியாது.

(13) எனது தலைமையிலான அரசாங்கம் ஒருநாளும் தவருன வழியில் செல்வதற்கு நான் ஒருபோதும் இடமளிக்க மாட்டேன்.

(14) ஏழ்மையினுல் வாடி வதங்கும் இலட்சக்கணக்கான நாட்டு மக்களை அந்நிலையினின்றும் மீட்டு அவர்களுக்குரிய நிலைமையை பெற்றுக் கொடுப்பதே நோக்கமாகும்.

(15) தனிநபர்களிடையே மாத்திரமன்றி பலவித குழுக்களிடம் காணபப்படும் வேறுபாட்டுணர்வுகளை மறந்து, யாவரும் ஒன்றுபட்டுச் செயல்பட்டால்தான் நாடு முன்னேற்றமடையும்.

(16) விவேகமும் ஆற்றலும் செயற்திறமுமுள்ள இளைஞர் சமுதாயமே இன்று எங்களுக்கு அவசியமானது. இவர்கள் எமது கட்சியின் முன்னேற்றத்துக்கு மட்டுமன்றி நாட்டின் முன்னேற்றத்திற்கும் அத்தியாவசியமானவர்கள்.

(17) நிலப் பிரபுத்துவத்திற்கும் பெருந்தோட்ட ஏகாதிபத்தியத் திற்கும் இடைப்பட்டு அல்லலுற்ற அப்பாவி கிராம மக்களைப் பற்றிய சிந்தனை இன்றுபோல் எனக்கு அன்றும் இருந்தது.

(18) நற்குணமுள்ள மக்களின் ஆசிபெற்ற அரசுக்கு இந்நாட்டின் பிரச்சினைகளைத் தீர்ப்பது கஷ்டமல்ல.

(19) ஆட்சியாளர்களைப் பதவி ஏற்றுவதும் பதவியை இழக்கச் செய்வதும் மக்களின் வாக்குகளே.

(20) பயங்கரவாதத்தின் மூலம் ஆட்சிப் பீடமேறிய அரசின் கீழ் மக்கள் சுதந்திரமாக வாழ முடியாது.

(21) முற்காலத்தில் நமது நாட்டின் சௌபாக்கிய ஸ்தானமாக விளங்கியது இராஜரட்டையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
Sponsored by: JANET HOU AH CHING

(22) நிலப் பிரபுத்துவ முறையையோ அல்லது முதலாளித்துவ முறையையோ மேலும் வளர்க்க முயலும் எவரையும் நாம் அனுமதியோம்.

(23) மக்களின் வாக்குகளைப் பெற்று பாராளுமன்றம் செல்லும் யாவரும் மக்கள் தங்களின் எஜமானர்கள் என்பதை மறக்கலாகாது.

(24) பிரதமர் தமது பதவிக்குரிய நற்குணங்களைப் போற்றிக் காக்க வேண்டும். இன்றேல் நாட்டின் ஜனநாயகம் அழிந்துவிடும்.

(25) ஐக்கிய தேசியக்கட்சி (ஸ்ரீகொத்த) கடந்த இருபது வருடகாலமாக ஜனநாயகத்தை மதித்து போற்றிப் பாதுகாத்துக்கொண்டே வருகிறது.

(26) யார் என்மீது குரோதம் கொண்டாலும் நான் யார் மீதும் குரோதம் கொள்ள மாட்டேன்.

(27) மகாவலித் திட்டத்தின் பெருமை டீ.எஸ். சேனநாயகா விலிருந்து அதனைச் செயற்படுத்தி வரும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்களுக்கு உரித்தாகும்.

(28) இன்று எம்முடன் சேர்ந்திருக்கும் இலட்சக்கணக்கான மக்கள் தமக்கு நல்ல எதிர்காலம் கிடைக்குமென ஆவலுடன் எதிர்நோக்குகின்றனர்.

(29) கட்சியில் யாராவது ஒழுங்கற்ற முறையில் செயல்படின் அவருக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கையெடுக்கும் உரிமை கட்சிக்கு உண்டு.

(30) தோற்றாலும் வென்றாலும் நாம் எப்பொழுதும் மக்களை பழிவாங்கவோ அல்லது அவர்கள் மீது ஆத்திரப்படவோ மாட்டோம்.

(31) மக்களினால் எமக்கு தோல்வி அல்லது வெற்றி ஏற்படினும் நாம் அவர்களை ஒரே மாதிரியாகவே கௌரவிப்போம்.

(32) வெகு விரைவில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு உருவாகும் புதிய முகம் எதிர்காலச் சரித்திரத்தில் "மகாஜன வம்சம்" என்ற பெயரில் திகழும்.

(33) இந்நாட்டில் அமைக்கப்படவிருக்கும் ஐ.தே.க. அரசாங்கம் துன்பப்படுகின்ற, உழைக்கின்ற, ஒடுக்கப் பட்டுள்ள மக்களுக்கே முற்றாக உரிய அரசாங்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
Sponsored by: JANET HOU AH CHING

(34) நாங்கள் எப்பொழுதாவது மக்களுக்கு இன்னல் விளைவிக்கவும் இல்லை. அவர்களின் சுதந்திரத்தைப் பறிக்கவும் இல்லை.

(35) நான் தலைவராக வந்த காலத்திலிருந்து ஒற்றைக் கையினால் மாத்திரமன்றி, இரு கரங்களினால் உழைக்கின்ற பாட்டாளி மக்களின் முன்னேற்றத்திற்குப் பாடுபடத் தீர்மானித்துள்ளேன்.

(36) இலங்கை தேசிய சங்கமும், சிங்கள மகா சபையும் ஒன்றுபட்டுப் போராடியதன் பயனாக, அன்னியரின் ஆட்சிக்கு உட்பட்டு அடிமைப்பட்ட மக்களாக வாழ்ந்த எங்களுக்கு திரும்பவும் தலைநிமிர்ந்து சுதந்திரமாய் வாழும் நிலைமை ஏற்பட்டது.

(37) அரசியல் கட்சிகளைப் பற்றிய நல்ல அனுபவத்துடனும் உணர்வோடும், கட்சிக் கொள்கைகளைப் பற்றி ஆராய்ந்து பார்த்தல் எமது தேசியக் கடமையாகும்.

(38) அரசியல் எதிரிகளைப் பழிவாங்குதல் இழி செயலாகும். நான் அதிகாரத்துக்கு வந்தால் எனது எனது அரசியல் எதிரிகளையும் மற்றவர்களைப் போலவே அன்போடு நடத்துவேன்.

(39) சாதி, சமயம், குலம், இனம் ஆகியவற்றால் எந்தப் பிரஜைக்கும் அநீதி ஏற்பட நாம் இடமளிக்கமாட்டோம்.

(40) சிரமப்பட்டு தகுந்த பலனை அடையப் பாடுபடும் திறமையுள்ள எவரையும் எந்தவொரு நிலைக்கும் ஊக்குவிப்பதே எமது கொள்கையாகும்.

(41) வெவ்வேறு அரசியல் கோட்பாடுகளையும் வேறுபாடுகளையும் மறந்து நாம் பிறந்த நாடு எல்லாவற்றிலும் சிறந்ததெனக் கருதி தாய்நாட்டைக் காப்பது ஒவ்வொரு பிரஜையினதும் கடமையாகும்.

(42) சமூக அபிவிருத்திக்கும், முன்னேற்றத்திற்கும் ஏற்ற கருத்துக்களைச் சுதந்திரமாக வெளியிடுகின்ற தலைவர்களுக்கு மக்களின் மதிப்பு எப்பொழுதும் கிடைக்கும்.

(43) ஆபத்தை விளைவிக்கும் விமர்சனங்களிலிருந்து விலகியிருப்பது விவேகமுள்ள எதிர்க்கட்சியின் கொள்கையாக இருக்க வேண்டும்.



Sponsored by: JANET HOU AH CHING
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(44) எதிர்கட்சிக்கு முறைப்படி மரியாதை அளித்து அவர்களுடைய கருத்துகளுக்கும் செவி சாய்ப்பது புத்தி யுள்ள அரசொன்றின் கடமையாகும்.

(45) கட்சி விட்டு கட்சி மாறி அரசியலில் ஈடுபடும் அரசியல் பாம்பாட்டிகளைப் பற்றி மக்கள் கவனமாக இருக்க வேண்டும்.

(46) அரசியல் அதிகாரத்தை பிச்சையெடுக்கும் செயல்களே என்று எண்ணி நாம் எப்பொழுதும் அதனைக் கைவிட வேண்டும்.

(47) அரசியலில் இனபேதம் எழுப்புவது, நாட்டில் நாம் பின்னோக்கி அடி வைத்தல் போலாகும்.

(48) பொருள், சொத்து இருக்கிறவர்களுடைய சனத் தொகையிலும் பார்க்க இல்லாதவர்களுடைய எண்ணிக்கை மிகவும் அதிகமாகும். தேசிய ஒத்துழைப்பு என்பது இருக்கிறவர்கள் இல்லாதவர்களுடனும், விவசாயிகள் காணிச் சொந்தக்காரர்களுடனும், தொழிலாளர், முதலாளிமார்களுடனும் ஒத்துழைத்து செயற்படுவதாகும்.

(49) எதிர்காலத்தில் நமது கட்சியை வெறும் பேச்சினால் அல்லாமல், நமது கோட்பாடுகளை நடைமுறைப்படுத்தும் செயல்களினால் அளவிடத் தக்கதாக செயற்படுவோம்.

(50) இந்நாட்டில் பொதுமக்களுக்கு காணி இல்லாமை, ஏழ்மை, பசியால் வாடுதல் என்பவற்றை அடியோடு ஒழிக்க வேண்டுமானால், வெளிநாட்டவர்களுடைய ஆட்சிமுறை அனைத்தையும் கைவிட வேண்டும்.

(51) மக்களுடைய வாக்குகளினால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதி ஒரு தெய்வம். ஆகையால் அவரிடம் தெய்வ குணங்கள் இருக்க வேண்டும்.

(52) மக்கள் பிரதிநிதிகளாகிய நம்முடைய பொறுப்பு எவ்வளவு பாரதூரமானதோ அதுபோல, மக்கள் நம்மேல் வைத்திருக்கும் நம்பிக்கையும் அவ்வளவு பாரதூரமானதாகும்.

(53) மக்களுடைய தீர்ப்பை ஏற்றுக்கொள்ள விரும்பாத சட்ட விரோத அரசாங்கத்தை நடத்துவதற்கு ஓர் அரசாங்கம் முயற்சி செய்தால், அவர்களுடைய காதுகளைப் பிடித்து வெளியே தள்ளும் உரிமை நாட்டின் இறைமையைக் கொண்ட மக்களுக்கே உரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
Sponsored by: JANET HOU AH CHING

(54) நமக்கு நாமே பாதுகாப்பு ஆவதைத் தவிர, மற்றவர்களின் துணையை தேடாதிருப்போம். உண்மையை நிலைநிறுத்தி நாம் நமக்கே உண்மை ஒளி ஏற்றுவோம்.

(55) பிறரால் ஒருவனை நல்லவனுக்க முடியாது.

(56) சூழலின்படி ஒருவன் நல்லவனுகவும் தீயவனுகவும் மாற முடியும்.

(57) ஒருவனது நல்ல சூழலும், அவனது நல்ல நண்பர்களும் இருக்கும் வரை அவன் நல்வழியில் செல்வானே அன்றி, தீய வழியில் செல்ல மாட்டான்.

(58) எமது சிங்கள சமுதாயம் பெரிய விருட்சம் போன்று தொன்மையானது.

(59) தமக்கு மாறுபாடான சூழலை எதிர்நோக்க முடியாத காரணத்தினுல் பலவித பிராணிகள் வாழ முடியாமல் போனமை சரித்திரத்தில் இடம்பெற்றுள்ளது. அதேபோல் இன்றைய மனிதனும் கொடிய சூழலினுல் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளான். இது மனிதனுல் ஏற்பட்ட சூழ்நிலை என்றே சொல்ல வேண்டும்.

(60) பிற நாடுகளிலிருந்து மலிவாகவும், சுலபமாகவும் அரிசியைப் பெறும் எல்லா சந்தர்ப்பங்களிலும், எமது விவசாயிகள் வேளாண்மையை அபிவிருத்தி செய்வதற்குப் பதிலாக முற்ருக அவ்வேலையைக் கைவிடுகிருர்கள்.

(61) பிற நாட்டிலிருந்து கிடைக்கும் சோற்றை உண்பதைவிட, நம் நாட்டில் அரிசியை அதிக விலை கொடுத்து உண்பது இலாபம்.

(62) இலங்கை தன்னிறைவடைவது அரசாங்கத்தின் முயற்சியால் மாத்திரம் இயல்வதன்று. இது இலங்கை மக்கள் யாவரும் சேர்ந்து தீர்க்க வேண்டிய பிரச்சினையாகும்.

(63) சர்வாதிகாரிகளையும் சர்வாதிகார ஆட்சி முறையையும் நான் வெறுக்கின்றேன்.

(64) உலோபத்தனத்தையும் குரோதத்தையும் அறியாமையையும் அகற்றி ஆட்சியாளராவது உலகத்தில் கிடைக்கக்கூடிய மிகவும் சிறந்த பதவியாகும்.

(65) இன்றைய உலகில் உள்ள சூழ்நிலையை அடிப்படையாக வைத்து நல்ல நாட்டையோ நல்ல சமுதாயத்தையோ



Sponsored by: JANET HOU AH CHING
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்க முடியாது. யாருக்கும், எதற்கும், பயனற்ற சமூகத்தையும் நாட்டையும் உருவாக்க இச்சூழ்நிலை வழி கோலுகின்றது.

(66) சுறுசுறுப்பான மனிதனால் நல்ல வழியில் சென்று நன்னிலை அடைய முடியும். அப்படிச் செய்யும் அறிவு பலருக்கு இல்லை.

(67) வாழ்க்கைப் பிரச்சினை எம்மில் பலருக்கு முக்கிய விடயமாகும். எனினும் இப்பிரச்சினையைத் தீர்க்க, காலத்தையும் வாழ்வையும் ஒதுக்குபவர்கள் மிகச் சிலரே.

(68) எமது வாழ்க்கைப் பிரச்சினையைத் தீர்க்க வழியமைக்கும் சக்தியும் பலமும் எம்மிடம் உண்டு.

(69) ஆளுபவர்கள் மாத்திரமன்றி ஆளப்படுபவர்களும் பேராசையையும் மற்றவர்களின் பொருள் மீது உள்ள ஆசையையும் நீக்கினால் நாம் எதிர்பார்க்கும் மிகச்சிறந்த குடியரசு தானாகவே ஏற்படும்.

(70) அரசை மாற்றுவதை, நாட்டைஆளுவதை அல்லது ஒரு கண்டத்தை ஆளுவதை விட, மனத்தை அடக்குதல் கடின மானது. மனதை அடக்குவதாவது தனது மனத்தை தான் விரும்பியபடி கீழ்ப்படியச் செய்தலாகும்.

(71) உயர்ந்த ஆட்சியை அமைக்கும் வழி உயர்ந்ததாகும் சிறந்ததாகவும் இருக்க வேண்டும்.

(72) மனிதனுடைய ஞானத்திற்குத் தேவையான பல அந்தரங்கமான விடயங்கள் அறிஞர்களுடைய புத்திமதியின்படி தீர்க்கப்படலாம். ஆனால் அந்தப் புத்திமதி அவர்களுக்கிடையே வசிக்கும் எங்களுக்கு எல்லையில்லாத சமுத்திரத்தில் காணும் அலைகளுக்கும் இரையாபவர் போன்ற உணர்ச்சியைத் தரும்.

(73) இன்று வாழும் பழைய பரம்பரைக்குரிய நாங்கள், இறந்த காலத்தைப் பற்றிச் சண்டையிடுகிறோம்.

(74) வீடு எரியும்பொழுது, அங்கு நுழைந்து தீக்குக் காரணம் ஏது என்று ஆய்வது முட்டாள்தனமாகும்.

(75) அதிகாரம் பெற்றவர்கள் கூட சுபீட்சத்தின் வாசலை அடைய எல்லோருடைய உதவியையும் ஒத்துழைப்பையும் பெற நினைக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

(76) நாங்கள் அபிவிருத்தியடையாமல் இருந்தால் அழிந்து போவோம்.

(77) பல ஆண்டுகள் உபயோகித்த செல்லக் குதிரையை மாற்றம் செய்வது சுலபமான காரியம் அல்ல. ஆனுல் நம்முடைய செல்லக் குதிரைகளின் மீதிலேயே மீண்டும் பிரயாணம் செய்யாமல் அவை இன்றைய காலத்துக்கு ஏற்றவையா என்று படித்த மக்களாகிய நாம் சிந்தித்துப் பார்ப்போம்.

(78) புதிய வழிகளே உபயோகித்து அமைதியான சமூக வாழ்வை அடைய, எந்த நாட்டிலும் கணிசமான காலப் பகுதியில் கஷ்டங்களே அனுபவிக்க வேண்டும் என்பது சர்வ சாதாரண உண்மையாகும்.

(79) ஒரு நாட்டை அபிவிருத்தி செய்வது ஒரு பக்கம் மட்டுமே பார்த்துச் செய்யக்கூடிய வேலேயல்ல.

(80) ஒருவர் கருத்தினுல் சிவப்பாகவோ நீலமாகவோ பச்சையாகவோ இருந்தாலும் அவரையும் ஒரு மனிதனுகக் கருதி அவருக்கும் ஒரு தொழில் கிடைக்கச் செய்ய வேண்டும்.

(81) உற்பத்தியை விநியோகம் செய்வதில் ஏகபோக உரிமையை அரசாங்கத்தின் கையில் ஒப்படைக்கின்ற ஏகாதிபத்தியத்தை நாம் கடுமையாக எதிர்ப்போம்.

(82) ஒரு பக்கத்தில் அரசின் ஏகபோக உரிமையும் தனிப் பரிபாலனமும், மற்றப் பக்கத்தில் ஒருசில செல்வந்தர்களின் உரிமைக்குரலும் பரிபாலனமும் நடப்பதை நாம் எதிர்பார்ப்போம்.

(83) உலகில் எந்த நாட்டிலேனும் புரட்சி ஏற்பட்டால் அந்தப் புரட்சிக்குப் பின் அந்நாட்டில் ஏகாதிபத்தியம் பிறக்கும்.

(84) எந்தக் கட்சிக்கோ மனிதனுக்கோ தலேவருக்கோ குலத்திற்கோ சமயத்திற்கோ அல்லது நிறத்திற்கோ அல்லாமல் தமது முன்னேற்றத்திற்கும் நாட்டின் முன்னேற்றத்திற்கும் எப்படி வாக்குரிமையைப் பாவிக்க வேண்டுமென மக்களுக்குத் தெரியும்.

(85) ஒருவர் விழுந்த பின்தான் எழும்ப முயல்வார்.

(86) அரச யந்திரத்தைவிட, பொது மக்களினுல் தான் நாட்டை முன்னேற்ற முடியுமென்ற நம்பிக்கை எமக்குண்டு.



Sponsored by: JANET HOU AH CHING
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(87) பொது நன்மையைக் கருதி அரசினுல் ஏற்பாடு செய்யப் படுகின்ற திட்டங்களுக்கு நாம் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும்.

(88) நேர்மையான அரசியல்வாதியின் கடமை யாதெனில் நாட்டிற்கு முதலிடமும் கட்சிக்கு இரண்டாம் இடமும் தமக்கு மூன்றும் இடமும் கொடுப்பதாகும்.

(89) நடந்த காலத்தில் ஜனநாயகத்தைக் காப்பாற்ற நாம் எடுத்த முயற்சி சரித்திரத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதொன்ருகும்.

(90) நாம் எப்பொழுதும் ஒழுங்காக வேலே செய்வதோடு, ஒழுங்கு தவறின் ஆட்சி செலுத்த முடியாது.

(91) அரசைப் பொறுப்பேற்றவர்கள் எப்பொழுதும் ஒழுக்கமுள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

(92) இலங்கை மக்களுக்குச் சுதந்திரமாக வாழ வழியமைப்பது நமது குறிக்கோளாகும்.

(93) பொதுமக்கள் எப்பொழுதும் அரசுடன் ஒத்துழைத்தால், ஆட்சி செய்தல் சுலபமானது.

(94) நான் அகிம்சை மூலம் புரட்சி செய்பவன்.

(95) பொதுமக்களிடையே அகிம்சை முறையை ஊக்குவிப்பது எமது கட்சியில் முக்கிய குறிக்கோளாகும்.

(96) கடமைக்கு தலே வணங்குவதும் மதிப்பளிப்பதும் உயரிய இலட்சணமாகும்.

(97) தேர்தலின் பின் எல்லா வேறுபாடுகளேயும் மறந்து நாட்டின் முன்னேற்றத்திற்கு பாடுபட எல்லா மக்களும் ஒன்றுபட வேண்டும்.

(98) நாட்டில் வைத்தியசாலேகளே நடத்த கொள்கை தேவையில்லே. அதற்கு அவசியமானது, மருந்துகளேயும் வைத்தியர்களேயும் பெற்றுக் கொடுப்பதேயாகும்.

(99) தேசிய அரசுப் பேரவை தனியார் வீடோ அல்லது தவறணேயோ அல்ல, அது ஒரு பரிசுத்தமான தலமாகும்.

(100) அரச பேரவை உறுப்பினர் பதவியின் பெருமையைக் காக்க முடியாதவர்கள் தேர்தலுக்கு முன்வரக்கூடாது.



Sponsored by: JANET HOU AH CHING

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(101) பல்வேறு இன மக்களிடையே உள்ள பிரச்சனைகளை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்காமல், பலாத்கார வழிகளைப் பின்பற்றினுல் பிரச்சனைகள் பெருகிக்கொண்டே போகும்.

(102) மக்களுக்குத் தேவையானவற்றை அரசு அளிப்பதன் மூலம் தார்மீக சமுதாயத்தை உருவாக்க முடியும்.

(103) மக்களின் வாக்கைப் பெற்றுவிட்டு, அதன்பின்னர் சமுதாயத்திலே உள்ள செல்வந்தர்களை மேலும் செல்வந்தர் களாக்காமல், வறியவர்களுக்குக் கைகொடுத்து அவர்களை வசதியுள்ளவர்களாக்குவது எமது முக்கிய கடமையாகும்.

(104) சனநாயக முறைக்கு விரோதமில்லாத முறைகள் எந்த நாட்டில் இருந்தாலும் அவற்றை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

(105) இந்நாட்டு மக்கள் என் குடும்பம். அவர்களை முன்னேற்றுவது எனது ஒரே இலட்சியமாகும்.

(106) உயர்ந்த இடத்திலிருந்து மக்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குவது உயர்ந்த ஆட்சியாளரின் கடமையாகும்.

(107) மேலைத்தேய நாடுகளில் செயற்படும் ஏதாவது ஒரு ஆட்சிமுறை, கீழைத்தேய நாடுகளுக்கும் பொருத்தமென எண்ணுவது தவருகும்.

(108) கண்டியிலுள்ள மகுல் மடுவத்தின் முன்னுல் இறக்கப்பட்ட சிங்கக் கொடியை மீண்டும் அதே இடத்தில் 1948ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆம் திகதி ஏற்றிய அன்றிலிருந்து இன்று வரையும் தேசாபிமானமுள்ள சிங்கள மக்கள் யாபேரினதும் இதயத்தில் நிலைநிற்க வேண்டிய சரித்திர முக்கியத்துவம் பெற்ற ஒன்ருகும்.

(109) இலங்கை மக்கள் சுதந்திரம் பெற முன்னணி வகித்த அதி உத்தம டீ.எஸ். சேனநாயக்கா இலங்கைச் சரித்திரத்தில் மறுமலர்ச்சிக்கு முதல்வராவார்.

(110) ஒருவரது பலம், குலம் அல்லது சமயம் போன்ற காரணங்களைப் பார்க்காமல் அவரது அறிவையும், ஆற்றலையும் மட்டுமே கருத்திற்கொண்டு அவருக்கு முதலிடம் கொடுப்பவர்கள் நாம் என்பதை உறுதியாகக் கூறலாம்.

(111) மக்களின் வாக்குகளினுல் தேர்ந்தெடுக்கப்பட்டு அரசப்



Sponsored by: JANET HOU AH CHING
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரவைக்குச் சென்ற உறுப்பினர்களின் உயர்ந்த நடத்தையில்தான் அச்சபையின் பெருமை தங்கியுள்ளது.

(112) அரசியல்வாதிகளின் பரம்பரைச் சொத்தாக இலங்கையை ஒப்படைக்க எமது அறிவுள்ள மக்கள் தயாராக இல்லை.

(113) பொறுப்பற்ற நபர்களின் எண்ணப்படி செயற்பட இடம் கொடுத்தால் எந்த அரசியல் கட்சியும் அழிவுப்பாதையில் செல்வதைத் தடுக்க தவிர்க்க முடியாது போய்விடும்.

(114) அரசு என்பது மக்களுக்கு சேவை செய்ய அர்ப்பணிக்கப் பட்ட ஸ்தாபனமாகும்.

(115) அரசின் அங்கத்தவர்களும் அமைச்சர்களும் நேர்மையுடன் வாழ முற்பட வேண்டும்.

(116) அதிகாரத்தில் இருப்பதற்கு நீதி நேர்மையற்ற செயல்களைச் செய்தல் தற்காலிகத் திருப்தியாகும்.

(117) தார்மீக ஆட்சியாளரின் சொல்லும் செயலும் எப்பொழுதும் நேர்மையாக இருத்தல் வேண்டும்.

(118) அரசாங்கத் தலைவர்களின் துர்நடத்தையாலும், பிடிவாதப் போக்கினாலும் எந்தச் செழிப்பான நாட்டுக்கும் இருள் மயமான காலம் ஏற்படலாம்.

(119) அதிகாரமும் கீர்த்தியும் பெருகப் பெருக, பணிவான தன்மையைப் பெருக்குவது புத்தியுள்ள மனிதனின் இலட்சணமாகும்.

(120) அதிகாரத்தினால் மயங்குவது போன்ற பயங்கரமான நிலை மூன்று உலகத்திலும் கிடையாது.

(121) பொதுக் தேர்தலொன்றில் நாம் ஈடுபடுவது உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் போட்டிக்கேயன்றி சண்டையிடுவதற்கும் இரத்தம் சிந்துவதற்கும் அல்ல.

(122) மக்களின் கருத்துக்கு நாம் ஒவ்வொருவரும் மதிப்பளிக்க வேண்டும்.

(123) அரசியல் வேறுபாடு காரணமாக மக்களிடையே பூசல்களை ஏற்படுத்துவது முட்டாள்தனமாகும்.

(124) எந்தவிதமான சர்வாதிகார முறையும் இலங்கைக்கு ஏற்றதல்ல.



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org Sponsored by: JANET HOU AH CHING

(125) ஆட்சியாளரின் கடமை யாதெனில், அதிகாரம், கீர்த்தி ஆகியவற்றில் மயங்காமல் மக்களின் கருத்துக்கு மதிப்பளித்து நியாயமான ஆட்சியை நடத்துதலே ஆகும்.

(126) பலாத்காரத்தினுலும் சண்டித்தனத்தாலும் மக்களின் வாக்குகளைப் பெற முடியாது.

(127) மக்களுக்கு விரோதமாகச் செயற்படும் சனநாயகவாதிகளை மக்கள் அழித்துவிடுவார்கள். அதைத் தடுக்க எந்தச் சக்தியாலும் முடியாது.

(128) மனித சுதந்திரத்தைக் காப்பாற்றுவதற்காக என் உயிரை அர்ப்பணிப்பதற்கு சந்தர்ப்பம் ஏற்படின், அதுவே நாட்டுக்கு நான் புரியும் பாரிய சேவையென கருதுகிறேன்.



Sponsored by: JANET HOU AH CHING
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயிகள் - தொழிலாளிகள் பற்றிய சிந்தனைகள்

## இரண்டாவது அத்தியாயம்

1. 1958ஆம் ஆண்டு சிறிய அளவில் ஆரம்பித்த எமது தொழிற்சங்க இயக்கம் இன்று நாடு பூராவும் வியாபித்துள்ளது. அந்த ஒவ்வொரு பிரிவினதும் பொதுமக்கள் உட்பட எனது ஒத்துழைப்போடும் நாங்கள் அமைக்கும் அரசாங்கத்தினை எல்லோருக்கும் நியாயமான அரசாங்கமாக அமைப்பேன் என நான் உறுதி கூறுகிறேன்.

2. இந்த நாட்டில் தொழிற்சங்க இயக்கத்தைப் பலம் பெறச் செய்வதும் அதன் மூலம் திருப்தியடையும் தொழிலாளர் வர்க்கத்தை உருவாக்குவதும் மிக முக்கியமானதென்பதை நாம் பூரணமாக ஏற்றுக் கொண்டுள்ளோம்.

3. வேலை செய்யும் மக்களின் சாதாரண உரிமைகளை முறையாகப் பாதுகாப்பதற்கு உறுதியளிப்பதோடு, தொழிலின்மையை நீக்கி, ஒவ்வொருவரினதும் தகைமைக்கேற்ப இந்நாட்டில் சகலருக்கும் தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதும் எமது கடமையாகும்.

4. வேலை செய்யும் பொதுமக்களைக் கஷ்டத்திலிருந்து மீட்டு அவர்களுக்கு சுபீட்சத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு எண்ணியுள்ளேன்.

5. தொழிற்சங்க மட்டத்தில் சேகரிக்கப்படும் பணத்தை அத்தொழிலாளர்களின் முன்னேற்றத்துக்காக பயன்படுத்த வேண்டும்.

6. நான் போராடுவதும், பலத்தைப் பயன்படுத்துவதும், நம்பிக்கை வைத்திருப்பதும் ஒரு ரூபாவைக் கொண்டு அங்கத்துவம் பெற்றுள்ள விவசாயிகளினதும், தொழிலாளர்களினதும் கருத்தை பூர்த்தி செய்வதற்கேயாகும்.

7. விவசாயிகளினதும், தொழிலாளர்களினதும், பொது மக்களினதும் எண்ணங்களிற்கேற்ப ஐ.தே. கட்சியின் அரசியல் அமைப்பைக் கட்டியெழுப்புவது எனது நோக்கமாகும்.



Sponsored by: JANET HOU AH CHING
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. நாம் பாடுபடுவது சிறு கூட்டத்தினரைப் பாதுகாப்பதற்தகு அல்ல. விவசாயிகள், தொழிலாளர்கள் உட்பட இலங்கையின் அதிகப்படியான மக்களுக்கு சமாதானம், சுபீட்சம், சௌபாக்கியம் போன்றவற்றைப் பெற்றுக் கொடுப்பதேயாகும்.

9. ஒவ்வொரு தொழிலுக்கும் ஒவ்வொரு தொழிற்சங்கம் என்ற அடிப்படையில் அமைத்து அத்தொழிற்சங்கங்களை அரசியல் சார்பற்ற முறையில் இயங்கச் செய்வதே எமது நோக்கமாகும்.

10. அரசியல் கட்சிகளில் கைப்பொம்மைகளாக தொழிற்சங்கங்களை அமைப்பதினால் பாராளுமன்ற உறுப்பினர் முதல் அமைச்சர் வரையிலான எல்லா அரசியல்வாதிகளினதும் அடிமைகளாக தொழிலாளர்கள் வாழ வேண்டியேற்படும்.

11. தொழிற்சங்க இயக்கத்தைச் சரியான முறையில் செயற்படுத்துவதற்கு அவை அரசியல் ஆதிக்கங்களிலிருந்து தவிர்க்கப்படுதல் வேண்டும்.

12. எமது அரசின் கீழ் விவசாயிகளையும், தொழிலாளர்களையும் நிர்வாக சேவையின் பங்காளர்களாகச் சேர்த்துக்கொள்வது எமது உத்தேசமாகும்.

13. தொழிலாளர்களின் முதுகில் சவாரி செய்து அரசியல் இலாபம் பெறுவதை நான் அனுமதிக்க மாட்டேன்.

14. வேலை செய்யும் மக்கள் அரசியல் கலப்பற்ற சுதந்திரத் தொழிற்சங்க இயக்கங்களை நடத்தினால் அது தேசத்திற்கு ஆற்றும் சேவையாகும்.

15. எனது தலைமையில் உருவாகும் அரசின் முழு அதிகாரமும் விவசாயிகளையும் தொழிலாளர்களையும் சாரும்.

16. கிளப்காரர்களையும், தோட்டச் சொந்தக்காரர்களையும், வீட்டுச் சொந்தக்காரர்களையும், வியாபாரிகளையும் நான் ஒரு சதத்துக்கேனும் மதிக்க மாட்டேன். எனது கௌரவம் அனைத்தும் தேசத்துக்காகச் சேவை செய்யும் விவசாயிகளையும் தொழிலாளர்களையுமே சென்றடைகின்றது.

17. விவசாயிகளும் தொழிலாளர்களும் எங்களைச் சூழ்ந்திருப்பது வருங்கால சௌபாக்கியத்தின் அறிகுறியாகும்.



Sponsored by: JANET HOU AH CHING
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. உழைப்பைப் பயன்படுத்தும் ஊழியர்களுக்கு அவரவர் ஆற்றல்களுக்கேற்ப உரிய சம்பளம் வழங்கப்பட வேண்டும்.

19. தொழிற்சங்கங்களின் நோக்கம் ஊழியர்களுக்குச் சேவை செய்வதாகும்.

20. ஒவ்வொரு தொழிலுக்கும் ஒவ்வொரு தொழிற்சங்கம் இருந்தால் போதுமானது.

21. பெரும் நிலச்சொந்தக்காரர்களுக்கோ, எஜமான வர்க்கத்துக்கோ அல்லாமல் பாடுபட்டு உழைக்கும் விவசாயிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் சேவை செய்வதே எனது குறிக்கோளாகும்.

22. நீதிக்காகப் போராடும் ஊழியர்களின் போராட்டத்துக்கு எமது உதவியும் ஒத்துழைப்பும் தவருமல் கிடைக்கச் செய்வதேயல்லாமல் அவர்களின் எஜமான வர்க்கத்தைப் பாதுகாப்பது எமது குறிக்கோளல்ல.

23. அன்று வெளிநாட்டவர் ஒரு சிலருக்கு மாத்திரம் இருந்த அதிகாரத்தை இன்று மந்திரிமார் கைப்பற்றிக்கொண்டு வியர்வை சிந்தி வேலை செய்யும் ஏழை விவசாய தொழிலாள மக்களின் உழைப்பைச் சுரண்டுவதை நாம் பூரணமாக எதிர்க்கின்ரேம்.

24. ஜனநாயகக் கோட்பாடுகளுக்கேற்ப ஏழை விவசாய - தொழிலாள மக்களின் நலனுக்காக நாம் எதிர்காலத்தில் முறையான சட்டதிட்டங்களை வகுப்போம்.

25. நிலமற்ற மக்களுக்கு சிறு நிலத்துண்டுகளைப் பெற்றுக் கொடுத்தல், அவற்றில் பயிர் செய்வதற்கு விவசாயிகளுக்கு எல்லா வழிகளிலும் உதவியளித்தல் என்பன தேசிய அபிவிருத்திக்காகச் செய்யவேண்டிய முக்கிய நடவடிக்கைகளாகும்.

26. விவசாய தொழிலாள மக்களுக்கு இலங்கையின் அரசியல் வரலாற்றில் அழியாப் பெயரைப் பெற்றுக் கொடுப்பதற்காக நாம் நடத்தும் போராட்டத்திற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியமாகும்.

27. எமது நாட்டின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் அடிப்படைக் காரணமாக அமைவது இந்நாட்டில் வேலை செய்யும் தொழிலாள பெருங்குடி மக்களின் சக்தியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sponsored by: JANET HOU AH CHING

28. இலங்கையின் முக்கிய அரசியற் கட்சிகளின் கீழ் இயங்கும் தொழிற்சங்கங்கள் ஜனநாயகக் கருத்துக்களை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

29. தொழிலாளர் பெருங்குடி மக்களின் ஒத்துழைப்புடன் எதிர்காலத்தில் புது யுகத்தை ஏற்படுத்துவதே எமது நோக்கமாகும்.

30. ஒரேவிதமான தொழிலைச் செய்பவர்கள் மத்தியில் முரண்பாடான பல தொழிற்சங்கங்கள் செயற்படுவது எப்பொழுதும் தொழிலாளிக்கே பாதகமாக அமையும்.

31. ஒரு தொழிற்சங்கம் தமது நியாயமான உரிமைகளுக்காகப் போராடும்போது அப்போராட்டத்தை தடை செய்வதற்கு வேறொரு தொழிற்சங்கம் செயற்படும் பாதக நிலையை மட்டுப்படுத்த முரண்பாடற்ற ஒரேவிதமான தொழிலைச் செய்பவர்களைக் கொண்ட பலம் வாய்ந்த ஒரு தொழிற்சங்கத்தினால் மட்டுமே முடியும்.

32. குறிப்பிட்ட ஒருசிலரிடம் மட்டும் பணம் குவியும்போது இருக்க இடமின்றி, உண்ண உணவின்றி மக்கள் கஷ்டப்படுவது பெரும் அநியாயமாகும். இந்த நிலையை மாற்றியமைப்பது எனது நோக்கமாகும்.

33. எமது நாட்டின் முன்னேற்றத்துக்கும் அபிவிருத்திக்கும் அடிப்படைக் காரணமாக இருப்பது, இந்நாட்டில் வேலை செய்யும் தொழிலாள பெருங்குடி மக்களின் உழைப்புச் சக்தியாகும்.

34. வேலை செய்யும் தொழிலாளர்களின் ஒத்துழைப்புடன் எதிர்காலத்தில் இலங்கையில் புது யுகத்தை ஏற்படுத்துவதே எனது நோக்கமாகும்.

35. பொதுவுடைமை என்பது சொத்துக்களை பொது நுகர்வுக்காக ஒப்படைத்தலாகும்.

36. தொழிலாளர்களின் உரிமைகளுக்குச் செவிசாய்க்கும் சனநாயக அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு சகல பேதங்களையும் மறந்து உழைக்கும் தொழிலாள மக்கள் எம்மைச் சூழ்ந்து கொள்ள வேண்டும்.

37. முதலாளித்துவம் என்பது சொத்துக்களையும் பொருள் வளங்களையும் சொந்த உரிமையின் கீழ் வைத்திருபதாகும்,

38. ஐ.தே.க. தொழிலாளர்களின் கட்சியாகும்.



Sponsored by: JANET HOU AH CHING
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39. ஐ.தே.க. தொழிலாளர்களின் போராட்டத்தைக் காட்டிக் கொடுக்கும் கட்சியல்ல.

40. இன்று எமது தொழிற்சங்க இயக்கம் ஐ.தே. கட்சியின் ஒரு பிரதான அங்கமாக அமைந்துள்ளது.

41. 1943ல் களனியில் சட்டசபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர், இந்நாட்டின் நிலங்கள் மக்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டுமென அரச சட்டசபையில் பிரேரணை கொண்டு வந்தவன் நானே.

42. நிர்வாகிகளுக்கும் ஊழியர்களுக்கும் இடையிலுள்ள இடைவெளியை நீக்குவதற்கு இ.போ.ச. போன்ற சபைகளுக்கு ஊழியர்களையும் நியமிக்க வேண்டும்.

43. அரசின் அனுசரணையின் கீழுள்ள கூட்டுத்தாபனங்களை முன்னேற்றுவதற்கு தொழிலாளர்களினதும் ஏனைய ஊழியர்களினதும் உதவியைப் பெற வேண்டும்.

44. உழைக்கும் மக்களின் சேவைக்கு வேதனம் தேவைப்படுவது போன்று, தாம் செய்யும் சேவையைப் பற்றியும் நாட்டைப் பற்றியும் அவர்கள் மனதில் பொறுப்புணர்ச்சியும் இருத்தல் வேண்டும்.

45. ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற்சங்கம் என்ற அடிப்படையில் தொழிற்சங்கம் அமைப்பதினால், அந்தத் தொழிலாளிகள் வேலையில் ஈடுபட்டிருக்கும் நிலையங்களின் நிர்வாகத்திற்காக அவர்களின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்வது மிகவும் சுலபமாகும்.

46. தொழிற்சங்கங்களை வெளி அரசியல் நிர்வாகத்திலிருந்து அகற்றுதல், பொதுவுடைமை நாடுகளின் தொழிற்சங்க முறையை ஜனநாயக நாட்டில் நடைமுறைப்படுத்தும் முறையாகும்.

47. தொழில் நிலையங்களின் நிர்வாகத்திற்காக தொழிற்சங்கங் களைச் சேர்ந்த ஊழியர்களை நிர்வாகப் பணிப்பாளர் நலன்புரி சபை, உத்தியோகத்தர் போன்றவற்றுக்கு நியமிப்பதனால் திறமையும் உற்பத்திச் சக்தியும் பெருகி, பொருளாதாரமும் முன்னேற்றமடையும்.

49. தேசியமய நிறுவனங்களின் இலாபம் நிறுவன ஊழியர்களுக்கும் தேசத்துக்கும் சொந்தமானது.

50. தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு தொழிலாளர்களின் ஒற்றுமை மிக முக்கியமாகத் தேவைப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
Sponsored by: JANET HOU AH CHING

# பொதுமக்கள் நலன் குறித்த சிந்தனைகள்

UNIVERSITY OF PERADENIYA 24-2-1996 LIBRARY

## மூன்றும் அத்தியாயம்

1. பொதுமக்கள் கௌரவமளிக்க வேண்டியது நாம் விரும்பும் அரசியற் கட்சிக்கே அன்றி, தனியாருடைய நிறம், உதிரம் செல்வாக்கு என்பவைகட்கு அல்ல.

2. பொதுமக்களின் துன்பங்கள் விருப்பு, வெறுப்புக்கள் போன்றவை பற்றி எமக்குப் போதிய விளக்கம் உண்டு.

3. மக்களால் தெரிவு செய்யப்பட்ட சட்டரீதியான அரசைக் கவிழ்ப்பதற்கு நாம் ஒருபோதும் செயற்பட மாட்டோம்.

4. இளம் பரம்பரையின் புத்திக் கூர்மையும் சக்தியையும் ஒன்றிணைத்து, அவர்கள் தன்மானத்துடன் வாழ்வதற்கு வழிவகுப்பது எனது நோக்கமாகும்.

5. இன்று இராசரட்டையில் ஏற்பட்டுள்ள புத்துணர்வுக்குப் பாத்திர மானவர் டீ.எஸ். சேனநாயக்கா அவர்கள் என்பதை நாம் மறந்துவிடலாகாது.

6. இராசரட்டையின் மக்களுக்குச் சௌபாக்கியத்தைப் பெற்றுக் கொடுக்கும் புனித எண்ணத்துடனேயே நாம் மகாவலித் திட்டத்தை ஆரம்பித்துள்ளோம்.

7. ஆட்சியாளர், அதர்ம நெறியிற் செல்லும்போது இயற்கையும் மாற்றம் பெறும்.

8. டீ. எஸ். சேனநாயக்கா அவர்களினதும் டட்லி சேனநாயக்கா அவர்களினதும் சுதந்திர சிந்தனைகளை நான் தொடர்ந்தும் முன்னெடுத்துச் சொல்வேன்.

9. இலங்கைக்குச் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்காகப் போராடிய தலைவர்களுள் டீ. எஸ். சேனநாயக்கா அவர்களின் பெயர் என்றும் அழியாது நிலைக்கும்.

10. பிரதமர் டீ. எஸ். சேனநாயக்கா அவர்கள் இராசரட்டையில் காடுகளை அழித்து, பெருந்தெருக்களை அமைத்து, குளங்கள் வாய்க்கால்களைக் கட்டுவித்து, விவசாயக் குடியேற்றத் திட்டத்தை ஆரம்பித்து மக்களை இராசரட்டையில் குடி



Sponsored by: JANET HOU AH CHING
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யேற்றுவிடின், மகாவலி நீரைத் திசை திருப்பி இராசரட்டைக்கு அனுப்புவதின் பெறுபேற்றை அனுபவிப்பதற்கு எமக்குச் சந்தர்ப்பம் கிடைத்திராது.

11. தேசியமயமாக்கிக்கொண்ட காணிகளைப் பொதுவுடைமை களாக்குவது பாராளுமன்ற பரிபாலனத்துக்குட்படுத்துவது சமூகவுடைமையல்ல.

12. எல்லோருக்கும் வயிறு நிறைய உணவும், நல்ல உடையும், வசிப்பதற்கு வீடும் பெற்றுக் கொடுப்பது எமது பிரதான நோக்கமாகும்.

13. உங்களது தலைவராக நான் தேர்ந்தெடுக்கப்பட்டது என்னுடைய தேவைக்கல்ல. உங்களுக்குச் சேவை செய்வதற்காகும்.

14. பொதுமக்கள் தேர்ந்தெடுக்கும் ஆட்சியாளர் நாட்டுக்கும் மக்களுக்கும் முன்மாதிரியான முறையில் பணி செய்ய வேண்டும்.

15. நாம் இன்று முன்னையதைவிட நாட்டிலே துன்பம் அனுபவிக்கும் மக்களை அண்மித்து அவர்களுடன் முன்னே செல்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

16. சமயக்கோட்பாடு, நீதி, தர்மம், மொழி, கலாசாரம் என்பவற்றிற்கு இடமளித்து, இன பேதம், மத பேதம், குல பேதம் போன்றவற்றிற்கு உட்படாது சனநாயகத்தைக் காத்து நாட்டைப் பரிபாலிப்பது எனது நோக்கமாகும்.

17. பொதுமக்களின் பாதுகாப்பையும் நாட்டில் சமாதானத்தையும் ஏற்படுத்துவதற்கு நியமனம் பெற்றுள்ள பொலிஸ் அதிகாரிகள் பக்கச் சார்பின்றியும், கட்சி பேதமின்றியும் ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் சனநாயக அடிப்படையில் நேர்மையாகக் கடமையாற்ற வேண்டும்.

18. 44 ஆண்டுகளாக நாம் அனுபவித்துவரும் பொது சன வாக்குரிமையை எமது பிள்ளைகளுக்கும் பேரப்பிள்ளைகளுக்கு மாகப் பாதுகாத்து வைப்பது எமது பிரதான கடமையாகும்.

19. இலங்கை வரலாற்றின் தேசிய வீரர்களுள், காலஞ்சென்ற டீ. எஸ். சேனநாயக்கா அவர்களின் பெயர் முதன்மையாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

20. டீ. எஸ். சேனநாயக்கா அவர்கள் நாட்டின் அபிவிருத்திக் காகக் குடியேற்றத் திட்டங்களை ஆரம்பிக்கவில்லையெனின், இன்று நாடு பட்டினிக்குள்ளாகி இருக்கும்.



Sponsored by: JANET HOU AH CHING
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. பாராளுமன்றப் பிரதிநிதிப் பதவியிலிருந்து தாளுகவே இராஜிஞமாச் செய்பவர்கள் இக்காலத்தில் மிகக் குறைவு.

22. காடுகள் செறிந்து குடியேற்றங்களின்றிப் பாழடைந்து போயிருந்த இராசரட்டையில் செழிப்பான பூமி மதிப்பைப் புரிந்துகொண்டு இராசரட்டைக்கு இந்நாட்டு ஆறுகளின் நீரைத் திரும்பவும் பெற்றுக் கொடுத்து இந்நாட்டில் விவசாயப் புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்காக 20ஆம் நூற்ருண்டில் எடுத்துக்கொண்ட பெரும் முடிவுக்குரிய கௌரவம் டீ. எஸ். சேஞநாயக்கா அவர்களையே சாரும்.

23. டீ. எஸ். சேஞநாயக்கா அவர்கள் இலங்கையின் அபிவிருத்திக்காக ஆற்றிய சேவையைப் பரிபாலகர் என்ற முறையில் நோக்குமிடத்து, இலங்கையில் இருந்த உயர் மட்ட அரசியல்வாதிகளுள் ஒருவராக கௌரவத்துடன் நினைவு கூரப்படல் வேண்டும்.

24. இந்நாட்டின் பிரதமராகப் பதவி ஏற்க எனக்கு வாய்ப்புக் கிடைத்தால், மக்களின் பிரதான ஊழியன் என்ற முறையில் நாட்டுக்கும் மக்களுக்கும் சாதாரண நீதியை நிறைவேற்றக் கூடிய முறையில் ஆட்சி புரிவது எனது உத்தேசமாகும்.

25. அரசாங்கத்தை அமைப்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிடமோ, சமசமாஜக் கட்சியிடமோ போவதற்கு ஒரு தேவையும் இல்லை. அதற்காக நான் பொதுமக்களிடம் மாத்திரமே செல்வேன்.

26. சொந்தக் குரோதத்திஞலோ கோபத்திஞலோ சர்வஜன வாக்குரிமையைப் பயன்படுத்தாதிருப்பது பெரும் குற்றமாகும்.

27. இந்த காணிப் புனரமைப்புத் திட்டத்தின் பிதா, அன்று காணி அமைச்சராகக் கடமையாற்றிய டீ. எஸ். சேஞநாயக்கா அவர்களே.

28. முறைகேட்டையும், அநீதியையும் கண்டவிடத்து அவற்றை அழித்து, பொதுமக்களின் உரிமையைப் பாதுகாக்கும் விதத்தில் கருமமாற்றுவதற்கு நாம் ஒருபோதும் பின்னிற்க மாட்டோம்.

29. மகாவலித் திட்டத்தைப் பற்றி இன்று யார் என்ன பேசிஞலும் முதன் முதலாக மகாவலியைப் பற்றி எண்ணியவர் காலஞ்சென்ற டீ. எஸ். சேஞநாயக்கா அவர்களே.



Sponsored by: JANET HOU AH CHING
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. நான் ஒரு சர்வாதிகாரியல்ல. எனினும் சில கருமங்களில் நாட்டினினதும், மக்களினதும் நன்மை கருதி முடிவுகளைத் தனியே எடுக்க நேரிடும்.

31. டட்லி செனநாயக்கா அவர்களின் அரசியல் கோட்பாடுகள் பற்றி நான் அறிந்துள்ள அளவிலே அறிந்தவரும் அதேபோல் பின்பற்றுகிறவரும் வேறு யாரும் இன்று இலர்.

32. இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு மாத்திரமின்றி இலங்கை மண்ணில் இருந்து மக்களுக்குப் பெற்றுக் கொடுக்கக்கூடிய ஆகக் கூடுதலான பிரயோசனத்தையும், விவசாயப் புரட்சியையும் ஏற்படுத்தி உணவில் நாட்டைத் தன்னிறைவு பெற வழிவகுத்து நாட்டின் செல்வங்களையும் வளங்களையும் ஒரே அளவில் பகிர்ந்தளிப்பதற்குச் செயல்பட்ட முன்மாதிரியானவர் என்ற முறையில் டட்லி சேனநாயக்கா அவர்களுக்கு எமது கௌரவம் உரித்தாக வேண்டும்.

33. இலங்கைவாழ் மக்களை ஒன்றுசேர்த்து ஒற்றுமையாக்கி அவர்கள் சந்தோஷமாகவும் சமாதானமாகவும் வாழ்வதைப் பார்க்க விரும்பிப் பிரார்த்தனை புரிந்த நேர்மையான தலைவர் காலஞ்சென்ற டட்லி சேனநாயக்கா அவர்களே.

34. கௌரவ டட்லி சேனநாயக்கா அவர்கள் மேற்கொண்ட வேலைத்திட்டத்தை மேலும் கொண்டு செல்வது இந்நாட்டின் சௌபாக்கியத்தை எதிர்பார்த்து சனநாயகத்தையும், சுதந்திரத்தையும் மதிக்கும் எல்லாப் பிரஜைகளினதும் நோக்கமாக இருத்தல் வேண்டும்.

35. நாட்டையும் மக்களையும் சௌபாக்கியத்துக்காக இட்டுச் செல்ல முழு வாழ்வையும் அர்ப்பணித்த காலஞ்சென்ற தலைவர் டட்லி சேனநாயக்கா அவர்கள் சிறந்த நோக்கங்களை மேலும் முன்னெடுத்துச் செல்வது எனது தூய எண்ணமாகும்.

36. மக்களின் எண்ணங்களாலும் ஆசிகளினாலும் புத்துயிரூட்டப் பெற்ற மக்களின் இலட்சியங்களினால் கூர்மையாக்கப்பட்ட அபேட்சகர்களை உங்களது அபேட்சகர்களாக நியமித்தல் எமது ஒரே உத்தேசமாகும்.

37. பதவியில் ஒட்டிக் கொண்டிருப்பது என்பது பெற்றுக் கொண்ட ஓர் ஆசையாகும். பழக்கத்தினால் அது இனிமையானது எனக் கருதவும் சில நபர்கள் கற்றுக் கொள்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sponsored by: JANET HOU AH CHING

38. மக்கள் எம்மீது வைத்துள்ள நம்பிக்கைக்கேற்ப நாம் இதயபூர்வமாக நேர்மையாகச் செயல்படுவோம்.

39. சுநத்திர சனநாயக மக்கள் கூட்டத்தின் பிரதிநிதிகளாகிய நாம் ஒருவரிடமும் வேஷமின்றி வலமோ இடமோ திரும்பாமல் எமது விருப்பம் போல் உலகை வழிப் படுத்துவதற்கு நேராக முன்சென்று எமது ஒத்துழைப்பையும், சக்தியையும் மனிதவர்க்கத்தின் அபிவிருத்திக்காகப் பயன்படுத்துவதற்கு எண்ணம் கொண்டுள்ளோம்.

40. மக்கள் விரும்பினுல், இந்நாட்டுக்கு அறிவுள்ள நிலையான முற்போக்கு அரசாங்கம் ஒன்றைப் பெற்றுக்கொடுப்பதற்கு எத்தனிக்கும் நன்கு திருத்தியமைக்கப்பட்ட ஒரு கட்சி என்ற முறையில் இன்று நாம் மக்களின் முன்வருகிறோம்.

41. குறிக்கோளைக் கௌரவிக்கின்ற அரசியல்வாதிகளினுல் அமைக்கப்படும் அரசாங்கம் உண்மையிலேயே உத்தமமான அரசாங்கம் ஆகும். கட்டுப்பாடுள்ள பிரஜைகளிடத்தில் அத்தகைய அரசாங்கத்திற்கு தானுகவே ஒத்துழைப்பு கிடைக்கும்.

42. விஞ்மானிகள் லௌகீக நோக்குடையவர்கள் லௌகீகத்தின் மூலம் மனிதனுக்கு அழியாச் சுகத்தை ஒருநாளும் தேட முடியாது.

43. விஞ்ஞானிகளும் அரசியல்வாதிகளும் ஒத்துழைத்து மனித இனத்தின் நலனுக்காகச் சேவை செய்யவேண்டும்.

44. கால்மாக்ஸைப் பின்பற்றுவோர் மனிதனுடைய உள்ளத்தை மாற்றுவதற்குத் முயலமாட்டார்கள்.

45. மனித வாழ்க்கையின் நன்னடத்தை மாக்சியவாதிகளுக்குத் தேவைப்படாது. நற்பண்புகளை வெறுத்தொதுக்கும் இம்மக்கள் பொருளாதார அடிப்படையை மாற்றியமைக்க எடுக்கும் முயற்சியின்போது நற்பண்புகளைக் கருத்திற் கொள்வதில்லை.

46. சமாதானத்தையும் சுபீட்சத்தையும் பெற்றுக்கொள்வதற்கு நாட்டின் ஆட்சி பலத்தை சர்வாதிகாரி ஒருவருக்குப் பெற்றுக் கொடுப்பது அவசியமல்ல.

47. மாக்ஸியவாதிகளின் நோக்கங்கள் ஒழுக்கநெறி மீது அமையவில்லையாதலால் குற்றம் புரிவது கூட நீதியென்று காட்டி மக்கள் சமுதாயத்தை மாற்றியமைக்க அவர்கள்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org
Sponsored by: JANET HOU AH CHING

கைக்கொள்ளும் ஒரே முறை - "சாகசச் செயல்முறை" என்று கொள்ளப்படும்.

48. மாக்ஸியவாதிகளின் புரட்சிக் கொள்கையைச் செயற்படுத்த எத்தனிக்கும் உலகநாடுகளிலும் கூட இவர்களுடைய படிப்பினைகளுக்கு நேர்மாருன கருத்துக்கள் எழுந்துள்ளனவேயன்றி அவை நிலைத்ததில்லை.

49. எம்மிடையே அதிக அளவு தேசியப்பற்று தென்படுவதற் கில்லாமை வருந்தக்கூடியதாகும். எம்மிடம் இருக்கவேண்டடியது இனபேதம், குலபேதம் என்பன அல்ல. தேசியப்பற்றே ஆகும்.

50. வாழும் வரை நாட்டுக்கும் மக்களுக்கும் சேவை செய்வது எனது நோக்கமாகும்.

51. மக்கள் சமுதாயத்திலுள்ள சகல அலுவல்களிலும் இன்று அரசியல் புகுந்துள்ளது.

52. உலகை ஆட்சி செய்யும் அரசியல்வாதிகள் அவர்களின் சகோதர மக்களுடைய வாழ்க்கையை சரியான முறையில் அமைப்பதற்கு முயற்சியெடுக்கிருர்கள்.

53. "தன் கையே தனக்குதவி", ஒரு தெய்வமும் எனக்குத் துணையாக நிற்காது. பரிவோ, காணிக்கைகளோ எமக்குத் துணையாகாது. மனிதனே மனிதனின் வருங்காலத்தை வளப்படுத்திக்கொள்ள வேண்டும்.

54. காணி, சொத்துச் சுகங்களைப் பரிபாலிக்கும் முறையற்ற செயலிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் வழியை, அரசியல்வாதிகள் சட்டங்களினுல் ஏற்படுத்தலாம்.

55. சமுதாய அமைப்பின் கேட்டினுல் மனிதனுள் உதிக்கக்கூடிய துர்க்குணங்கள் காரணமாகச் சமுதாயத்துக்கு இடையூறு ஏற்படாவண்ணம் அம்மனிதனுடைய சுபாவத்தை மாற்றும் சக்தி நல்ல கோட்பாடுகளை முறையாகக் கடைப்பிடிக்கும் அரசியல்வாதிக்கு உண்டு.

56. மனிதவர்க்கத்தின் லௌகீக நலன்களுக்கு விஞ்ஞானத்தால் ஏற்படும் பெரும் சேவையை நான் பெரிதாக மதிப்பதுடன் விஞ்ஞானிகள் என் மனதை விசேடமாகக் கவர்ந்துள்ளனர். அவர்கள் உண்மையையே தேடி வாழ்க்கையிலும் செயலிலும் பலனைக் கருதாது அல்லது அதன்மேல் பற்றில்லாது அறிவாளிகளாக விளங்குவதே அதற்குரிய காரணமாகும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Sponsored by: JANET HOU AH CHING

57. செல்வந்தன் ஒருவனுக்கு அல்லது சாதாரண தொழிலாளி ஒருவனுக்கு அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் ஆசையும் ஆவலும் உண்டாவது மனித இயல்பாகும்.

58. இந்நாட்டில்பூரண மனித சுதந்திரம் பாதுகாக்கப்படல் வேண்டும்.

59. நாம் ஓர் அரசாங்கத்தை அமைப்பது பாராளுமன்றப் பிரதிநிதியாகும் அல்லது அமைச்சர் ஆகும் அபிலாசயுடன் அல்ல. பள்ளத்தில் விழுந்து கிடக்கும் நாட்டு மக்களைக் காப்பாற்றும் நேர்மையான எண்ணத்துடனுகும்.

60. அரசியல் எதிரியாயினும் பொதுத்தேர்தலின் பின் எமது அன்பு நண்பன் என்ற முறையில் அவனை ஏற்று அரவணைத்தல் வேண்டும்.

61. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சார்ந்தவராயினும் கம்யூனிஸ்ட் கொள்கையைப் பின்பற்றுபவராயினும் அவர்கள் எமது நண்பர்கள் என்பதை மறக்கக்கூடாது.

62. அதிகாரமும் புகழும் கிடைக்கக்கிடைக்க பணிவுத்தன்மை பெறல் புத்திமானின் இலட்சணமாகும்.

63. இன்று நமது நாடு எதிர்நோக்கியுள்ள கடும் பிரச்சனைகளை அறிவுடனும் புத்திக்கூர்மையுடனும் எதிர்நோக்கும் அளவிற்கு இலங்கை மக்கள் முன்னேற்றமடைந்துள்ளனர்.

64. நாடும் மக்களும் முன்னேற்றமடைவதாயின் அந்நாட்டு மக்களின் சுகாதாரத் தரம் நன்ருக அமைய வேண்டும்.

65. எமக்கு ஆட்சி அதிகாரம்கிடைத்தால், அந்த அதிகாரத்தால் உந்தப்பட்டு மக்களை மறக்கமாட்டோம்.

66. நாட்டின் பிரதமர் தார்மீகம் பேணுபவராயின், தேசியப் பேரவையும் நாடும் செழிப்படையும்.

67. நாட்டின் சகலருக்கும் நீதி வழங்கல் சமனுக இருக்க வேண்டும்.

68. அதிகாரத்தால் உந்தப்பட்டு அமைச்சர் பதவியைப் பாதுகாத்துக் கொள்வது அல்ல; மக்கள் கருத்துக்களுக் கேற்ப அரசாங்கத்தை அமைத்து சர்வசாதாரணமாக ஆட்சி முறை ஒன்றை நாட்டில் ஏற்படுத்துவதே அமைச்சர்களின் கடமையாக இருக்க வேண்டும்.

69. ஒவ்வொருவருக்கும் தமது ஆற்றலுக்கு அமைந்த கொடையொன்றுக்கு உரிமை உண்டு.



457046
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sponsored by: JANET HOU AH CHING

70. தேசிய திட்டங்களின் பிரதான இலட்சியமாக இருக்கவேண்டியது, மக்களின் நலன்கள் என்பதை ஆட்சியாளர் மறக்கக்கூடாது.

71. ஒரு நாட்டை முன்னேற்றுவதற்கு, ஆட்சியாளர் களிடையேயும், மக்களிடையேயும் ஒழுக்க நெறிகள் இருக்க வேண்டும்.

72. மக்களின் தேவைகளை அரசாங்கம் நிறைவு செய்யும்போது தார்மீக சமுதாயம் உதயமாவது இயற்கையாகும்.

73. ஒரு தலைவனுக்குத் தம்மைப் பின்பற்றுபவர்களைச் சிறந்த வழியில் இட்டுச்செல்ல சக்தியும் புத்தியும் இருக்கவேண்டும்.

74. இலங்கையில் வசிக்கும் தமிழ், முஸ்லிம் மக்கள் சிங்கள மக்களுடன் சேர்ந்து நாட்டை முன்னேற்ற முன்னணியில் நின்று செயற்பட வேண்டும்.

75. நாட்டில் நீதியும் சமாதானமும் பாதுகாக்கப்படும் விதத்தில் எனது கட்சிக்காரர் செயற்படுவாராயின் அது எனக்களிக்கும் உயர்ந்த கௌரவமாகும்.

76. சிறந்த கல்வியறிவும் அரசியல் அனுபவங்களும் இல்லாத நாட்டில் நிலவும் சனநாயக அரசு அதன் நோக்கங்களை ஏற்காத கட்சியொன்றில் சதா விமர்சிக்கப்படுமாயின் அந்த அரசு தனது வேலைத்திட்டத்தை செயற்படுத்த முடியாது.

77. பதவியில் இருக்கும் ஓர் அரசாங்கத்தை நீக்கி அதற்குப் பதிலாக வேறு ஓர் அரசைத் தேர்ந்தெடுக்கும் சட்டபூர்வமான ஒழுங்குமுறையைச் சனநாயகத்தினால் ஏற்படுத்திக் கொள்ளலாம்.

78. சனநாயகத்தைப் பாதுகாக்கும் நிறுவனங்களைச் சக்திபெறச் செய்வதும் விரிவடையச் செய்வதும், எதிர்க்கட்சிக்குச் சட்டபூர்வமாகக் கிடைக்க வேண்டியவற்றையும் வேறு வசதிகளையும் செய்து கொடுப்பது அரசின் கடமையாகும்.

79. ஒரு துளி இரத்தம் கூடச் சிந்தாமல் எமது ரம்மியமான இலங்கைத்தீவுக்குச் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கும் அவ்வாறு பெற்ற சுதந்திரத்தின் பலனை பொருளாதார ரீதியில் பொதுமக்களின் கையில் சேர்ப்பதற்கும் டீ. எஸ். சேனநாயக்கா அவர்கள் செய்துள்ள சேவை அளப்பரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sponsored by: JANET HOU AH CHING

80. டீ. எஸ். சேனுநாயக்கா அவர்களுக்கு எம்மால் அளிக்கக் கூடிய பெரிய கௌரவம் எதுவெனில்; அவர் ஆரம்பித்த பொருளாதார அரசியல் சமூக கலாசாரப் புரட்சிகளை வெற்றிகரமாக்குவதற்கு எம்மை அர்ப்பணித்தல் ஆகும்.

81. இந்நாட்டு மக்களுக்கு பிரித்தானிய ஏகாதிபத்திய வாதிகளிடமிருந்து சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ள ஏதுவாயிருந்தது, டீ. எஸ். சேனுநாயக்கா அவர்களின் தலைமையின்கீழ் நடத்திய சுதந்திரப் போராட்டமாகும்.

82. இலங்கை மக்களின் இதயங்களில் டீ. எஸ். சேனுநாயக்கா எனும் பெயர் என்றும் நிலைத்திருக்கும்.

83. டீ. எஸ். சேனுநாயக்கா அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட ஐ.தே.க.யின் கொள்கைகளும் செயற்திட்டங்களும் இன்றைய தேவைகளுக்கேற்ப மாற்றப்பட்டுள்ளன.

84. மந்திரியாயினும் அமைச்சராயினும், பிரதமராயினும் மக்களின் பிரதான ஊழியனுக இருக்க வேண்டும்.

85. முன்னுள் பிரதமர் டட்லி சேனுநாயக்கா அவர்களால் நாட்டுக்கான சேவையும் அவரின் உரிமையும் ஒரு குடும்பத்துக்கோ தனிநபருக்கோ சொந்தமானதல்ல.

86. காலஞ்சென்ற டட்லி சேனுநாயக்கா அவர்களுக்கு அளிக்கும் உயரிய கௌரவம் மனித சுதந்திரத்தைப் பாதுகாத்துக் காப்பாற்றிக் கொடுப்பதாகும்.

87. சொந்தச் செல்வாக்கு பெருமை புகழுக்கு அடிமையாகாமல் நாட்டினதும் பொதுமக்களினதும் நலனுக்காகவே சேவைசெய்த டட்லி சேனுநாயக்கா அவர்கள் உற்ருர் உறவினர்களுக்குப் பிழையான வழியில் உதவி புரியவில்லை.

88. மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு போன்ற உத்தம புருஷர்கள் மக்களால் எப்போதும் போற்றப்படும் மக்கள் தலைவர்களாவர்.

89. நாம் பதவிக்கு வந்த பின்னர், அரசாங்கத்தினதும், எதிர்க்கட்சியினதும் பிரசாரத்திற்கு ஒழுங்கு வசதிகள் செய்து கொடுப்போம்.

90. ஒரு நாட்டின் வானெலிச் சேவையினுல், இனத்தை முன்னேற்றுவது போன்று அழிவுக்கும் வழிவகுக்கலாம்.



Sponsored by: JANET HOU AH CHING
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

91. டீ. எஸ். சேனநாயக்கா அவர்களுடைய தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியை உண்மையான சனநாயகக் கட்சியாக எதிர்காலங்களிலும் முன்னேற்றிச் செல்வது எமது இலட்சியமாகும்.

92. அரசாங்கம் தவறான வழியில் நடக்கும்பொழுது மக்களும் குற்றம் செய்தல் ஆச்சரியமல்ல.

93. வெற்றி, தோல்வி ஆகிய இரண்டிலும் நாம் சனநாயகத்துக்குத் தலை வணங்குதல் வேண்டும்.

94. ஒரு நாட்டின் காவல் தெய்வம் செய்தித்தாள் ஆகும்.

95. செய்தித்தாளின் சுதந்திரத்தை அழிப்பது சனநாயகத்தை அழிப்பது போன்றதாகும்.

96. மக்களின் சொத்தான வானொலி மூலம் எதிர்க்கட்சியினருடைய குரலையும் மக்கள் கேட்கச் செய்வது சனநாயக முறையின் சிறந்த இலட்சணம்.

97. ஒருவனுடைய முயற்சி, விவேகம், நேர்மை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு, தொழில், உத்தியோகம் அல்லது அதிகாரம் வழங்குதல் ஐ.தே.க.யின் நோக்கமாகும்.

98. டட்லியுடைய உரிமையைப்போல் ஜே.ஆர். ஜயவர்தனவுடைய உரிமையும் ஒரு குடும்பத்துக்கு அல்லது ஓர் ஆளுக்குக் கொடுக்காமல் அதைத் தேசியமயமாக்குவது எனது அபிலாசையாகும்.

99. நமது வாழ்வு அல்லது தாழ்வு வாக்காளர்களுடைய கையில்தான் இருக்கிறது.

100. இலங்கையும் இந்தியாவும் சனநாயக முறையின் தொன்மைமிக்க காவல் தெய்வங்கள்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org
Sponsored by: JANET HOU AH CHING

# சரித்திரத்தைப் பேணும் சிந்தனைகள்

## நான்காம் அத்தியாயம்

1. கொழும்பு தெற்குத் தொகுதியிலிருந்து இராஜினுமாச் செய்து ஆயிரம் சவால்களுக்கு மத்தியில் திரும்பவும் நான் போட்டியிட்டது பொதுமக்களின் உன்னதமான புள்ளடியின் சக்தியைப் பாதுகாப்பதற்காகும்.
2. வாக்கைப் போன்று சிறந்த பொருள் மக்களுக்கில்லை.
3. நாம் போராடிப் பெற்றுக்கொண்ட சர்வஜன வாக்குரிமையை உரிய முறையில் பாவிக்கும் உத்தமமான உரிமையை வரலாற்றின் இல்லாதவாறு பாராட்ட எங்களால் மட்டுமே முடியும்.
4. வாக்குரிமை இல்லாத இடத்தில் உள்ளது பயங்கர சூழ்ச்சி யாகும். அதனுல் ஏற்படுவது பயங்கரவாதமாகும்.
5. எந்தவொரு சட்டவிரோத அல்லது அரசியல் யாப்புக்கு முரணுன அரசைக் கவிழ்க்கும் உரிமை பொதுமக்களைச் சாரும்.
6. ஊழல்கள் இல்லாத அதிகாரத்தைத் துர்ப்பிரயோகம் செய்யாத நியாயமான ஆட்சியை எனது தலைமையில் அமைக்கும் அரசினுல், பொதுமக்களுக்குப் பெற்றுக் கொடுப்பதே எமது நோக்கமாகும்.
7. சனநாயக சமூகத்தில் வாழும் நாம் எதிர்பார்ப்பது சனநாயக அமைப்பு முறையாகும். எனினும், சர்வாதிகார நாட்டில் இருப்பவர்கள் எதிர்பார்ப்பது வேறென்றையாகும்.
8. 1948 ஆம் ஆண்டு இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்திருக்காவிடில் இன்று கோலாகலத்துடன் நடத்தும் குடியரசு தினம் ஒருபோதும் ஏற்பட்டிருக்க மாட்டாது.
9. சனநாயக அரசியல் அமைப்பு முறையினுள் அரசியல் கோட்பாடுகளையும் ஒழுக்காற்றுக்களையும் பின்பற்ற வேண்டும். இவைகள் கடைப்பிடிக்கப்படாவிடில் சனநாயக முறைக்கு அபாயம் ஏற்படுதல் நிச்சயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
Sponsored by: JANET HOU AH CHING

10. மேலிடங்களில் இருப்பவர்கள் மீது சந்தேகம் ஏற்பட்டால் சனநாயகக் கோட்பாடுகள் வளர்ச்சியடைய மாட்டா.

11. மேலிடங்களில் இருப்பவர்கள் உரிய முறையில் செயற்படுவது சுதந்திரமாக இயங்கும் செய்திப் பத்திரிகைகள் இருப்பதனுலாகும்.

12. அரசாங்கம் பொறுப்பேற்றுக்கொண்ட சொத்துக்களின் நிர்வாகம் பொதுமக்கள் கையிலேயேயன்றி, தேசியப் பேரவை பிரதிதிகளினதும் அதிகாரிகளினதும் கையில் இருப்பதை நாம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்.

13. அரசாங்கத்தை விமர்சனம் செய்யும் பொதுமக்களின் உரிமையையும் சுதந்திரத்தையும் பாதுகாப்பது சனநாயக அரசின் தலையாய கடமையாகும்.

14. நாம் விரும்பிய கட்சியை பதவியில் அமர்த்துவதற்கும், தாம் விரும்பிய பிரதமரைத் தேர்ந்தெடுப்பதற்கும் பொது மக்களுக்குள்ள உரிமையை அழிப்பதற்கு யாராலும் முடியாது.

15. ஏதோ ஒரு முறையில் மாக்ஸியவாதிகள் இந்நாட்டில் அதிகாரத்திற்கு வந்தால் எமது சனநாயக சுதந்திரம் புதைக்கப்பட்டுவிடும்.

16. பொதுமக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமாயின் சனநாயக ஆட்சி முறையை எமது உயிரைப் போன்று பாதுகாக்க வேண்டும்.

17. பொதுமக்களின் ஒத்துழைப்பிலேயே சனநாயக சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

18. "சிரிக்கொத்த"வை மேலும் விருத்தி செய்து அதை ஒரு "சீதேவி" ஆக்கி, சனநாயகத்தை வழிபடும் தலமாக மாற்றுவது எனது நோக்கமாகும்.

19. சனநாயக அடிப்படையில் அரசை நிறுவுவதே எமது முக்கியமான முதற் தேவையாகும்.

20. பொதுமக்களின் ஆற்றல்கள், திறன்கள், ஒழுக்கம், சிந்திக்கும் திறன் ஆகியன நாட்டின் இறைமையைப் பாதுகாப்பதனுலேயே பேணப்படலாம்.

21. ஓர் அரசாங்கத்தை அமைப்பதற்கும், நீக்குவதற்கும் பொதுமக்களுக்கு அதிகாரம் இருப்பதோடு, அமைத்த அரசாங்கத்தை விமர்சிக்கும் சுதந்திரமும் பொதுமக்களையே சாரும் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org
Sponsored by: JANET HOU AH CHING

22. சனநாயக சுதந்திரம் என்பது ஆதிக்கத்திற்கு அப்பாற்பட்டு கருத்துக்களை வெளியிடும் நிர்வாக முறையாகும்.

23. சனநாயக நாட்டில் சனநாயக ஆட்சி இருக்க வேண்டும். அவ்வாறில்லாவிடில் அது சர்வாதிகார நாடாகும்.

24. சனநாயக அரசியல் முறையைப் பாதுகாப்பது மிகவும் பாரதூரமான கடினமான செயலாகும்.

25. பொதுமக்கள் அளித்த ஐந்தாண்டுக்கான ஆணைக்கேற்ப 1975ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதி பதவியிலிருந்து விலகுவதற்கு அன்று கட்சியின் தலைவராக இருந்த டட்லி சேனநாயக்கா அவர்கள் மக்களுக்குக் கொடுத்த வாக்கை மேற்கொண்டு அதைச் செயலில் காட்டிய ஒருவன் உலகிலேயே நான்தான்.

26. இவ்வுலகில் பொதுமக்களின் நலன்களைப் கருதும் ஆட்சி முறையே அதி உன்னதமான சனநாயக முறையாகும்.

27. காலத்திற்குக் காலம் அரசாங்கத்தை மாற்றுவது சனநாயகத்தின் அடிப்படைக் கோட்பாடு.

28. நீதிமன்றம் சுதந்திரமாக இயங்கும் நிலையுடையதாக இருத்தல் வேண்டும்.

29. நீதிமன்றத்தின் சுயாதீனத்தைப் பாதுகாப்பதும் அரசாங்கத்தின் அடிமைகள் கைப்பொம்மைகள் ஆகாமல் இருப்பதும் நீதிமன்றத்துடன் தொடர்புள்ள சகலரினதும் கடமையாகும்.

30. அதிகாரத்தை அரசாங்கத்தின் கையில் சிறப்படுத்தலோ வரப் பிரசாதம் பெற்ற சிலருக்கு உரிமையாக்குவதோ சனநாயகம் அல்ல.

31. வயல்நிலம், சேனைநிலம், காடுகள் விலங்குகள் ஆகிய இயற்கை வளங்களை வாழ்க்கையின் பெரும் கொடைகளாகக் கருதுதல் வேண்டும்.

32. சனநாயகம் நான்கு பகுதிகளை உள்ளடக்கியது. குடியுரிமை, குடிகளின் சமவுரிமை, அரசியற் சுதந்திரம், அரசியற் சமவுரிமை என்பனவே அவைகளாகும்.

33. சனநாயகத்தின் அடிப்படை அம்சங்களைப் பயன்படுத்தி மனித சுதந்திரத்தை அழிப்பதற்கு இடமளித்தல் சனநாயகமன்று.



Sponsored by: JANET HOU AH CHING
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34. நாட்டில் சமாதானமும் அமைதியும் அழிவுறும் முறையில் பொதுமக்களைத் தூண்டுவதற்கு ஏதுவாயுள்ள கருத்துக்களை வெளியிட இடமளிப்பது சனநாயகக் கோட்பாடுகளுக்கு முரணாகும்.

35. வாழ்க்கையை நடத்துவதற்குத் தாம் விரும்பும் தொழிலில் ஈடுபடும் சுதந்திரம் சனநாயக சமுதாய அமைப்பின் ஓர் அம்சமாகும்.

36. சுதந்திரத்தின் பெறுமதியை நன்கு விளங்கிக் கொள்வோர் சுதந்திரத்தை அனுபவிக்கும் மக்கள் அல்லர். அதை அனுபவியாதவர்களே.

37. 1970 பொதுத்தேர்தலில் நமது கட்சி தோல்வியடைந்தமைக்குரிய ஒரு காரணம். ஐ.தே.கட்சி, காணி உடைமையாளரான பணக்காரர்களுக்கும் சில குடும்பத் தொகுதிகளுக்கும் மட்டுமே சொந்தமான கட்சியென வாக்காளர் நம்பியமையென நான் உணர்கின்றேன்.

38. தனிப்பட்ட பணக்காரர்களுக்குப் பதிலாக உத்தியோகத்தரின் சர்வாதிகாரத்தை நாம் உருவாக்க மாட்டோம்.

39. சுதந்திரம் நமது பிறப்புரிமை. அது நமது விடாமுயற்சியால் பெற்றுக்கொள்ளப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டிய அதிசிறந்த பொருளாகும்.

40. குடும்ப வாதத்தையும் சண்டித்தன வாதத்தையும் அழிக்கும் சக்தி மக்களுடைய வாக்கிற்கே உரியது.

41. பொதுத்தேர்தலொன்றில் அரசியல் கட்சியொன்று தோல்வியடைந்து அரசாங்கம் கவிழ்வதும் சனநாயக ஆட்சியுள்ள நாட்டு மக்களுக்கு ஆச்சரியமான விடயம் அன்று.

42. நமக்கெதிரான ஆட்சியொன்று விழும்போது ஐ.தே.கட்சி போன்ற சனநாயகக் கட்சியொன்று இல்லாவிட்டால் நாட்டின் நிர்வாகம் மாக்ஸியவாதிகளின் கைக்குப் போக இடமுண்டு.

43. வேட்டியணிந்து சிங்களம் பேசும் நம்மைப்போன்ற சாதாரண மக்களுக்கு நாடாளுமன்றம் புகுவதற்கு இடம் கொடுப்பது வாக்குப் பலம் ஆகையால் அந்த வாக்குரிமையைக் காப்பாற்றுவது நம்முடைய கடமையாக இருக்க வேண்டும்.



Sponsored by: JANET HOU AH CHING
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

44. செய்தித் தாள்களின் சுதந்திரம் அழிந்துவிட்டால், வாக்குரிமையும் அழிந்துபோக இடமுண்டு.

45. அமெரிக்காவிலிருந்து அல்லது ரஷ்யாவிலிருந்து பண உதவி பெறுகிற காரணத்தினுல் நம்முடைய சுதந்திரத்தைக் கையளிக்க அல்லது தாரைவார்த்துக் கொடுக்க நாம் ஒருபொழுதும் தயாராகவில்லை.

46. பாராளுமன்றம் சென்று ஒரு வருடந்தானும் மக்களுக்குப் பணிபுரிவது மேலும் ஐம்பது வருடம் வாழ்வதைவிட மேலானது.

47. செய்தித்தாள் சுதந்திரம் சனநாயக அரசின் ஒரு பகுதியென்று கூறுவதை எவரும் மறுக்க முடியாது.

48. சுதந்திரமாகப் பேசுதல், சுதந்திரமாகக் கூட்டம் நடத்துதல், சுதந்திரமாகக் கருத்துக்களை வெளியிடுதல் என்பனவற்றை எந்த நாட்டிலுமுள்ள சனநாயக ஆட்சி முறையிலும் தடுக்க முடியாது.

49. சனநாயக முறையில் விருப்பமோ, அன்போ இருந்தால் நாம் செய்தித்தாள்களின் சுதந்திரத்தைக் காப்பாற்ற வேண்டும்.

50. பல்வேறு சுதந்திர சனநாயக முறைத்திட்டங்கள் பிறப்பதற்கு வாக்குப்பலம் உதவியாக இருக்கும்.

51. சுதந்திரச் செய்தித்தாள்கள் இல்லாமல் இன்றைய உலகத்தின் சனநாயக ஆட்சிமுறை நடைபெற முடியாது.

52. நான் சனநாயக முறையில் நடக்கும் நிறுவனங்களில் பூரண நம்பிக்கை வைத்திருக்கிறேன்.

53. சனநாயக முறையிலான அரசாங்கம் மூலம் சௌபாக்கியம் பெறலாம்.

54. ஏகாதிபத்தியக் கொள்கை, பிரித்தானியாவிலிருந்து வருவதாயினும் ரஷ்யாவிலிருந்து வருவதாயினும் நாம் அதற்கெதிராக இருக்க வேண்டும்.

55. நமது இலங்கை மக்கள் பயமின்றி வாழ விரும்பினுல், பிழைகளைத் திருத்துவதற்கும் சனநாயக முறை அரசியலை செயற்படுத்துவதற்கும் கற்றுக்கொள்ள வேண்டும் என்பது என் கருத்தாகும்.

56. சனநாயக வாழ்க்கை முறைப்படி பிரஜை ஒருவர் தனது விருப்பத்தின் பேரில் ஏற்றுக்கொண்ட கொள்கைகளின்படி செயற்படுவதற்குப் பூரண சுதந்திரம் உண்டு.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org
Sponsored by: JANET HOU AH CHING

57. இரத்தஞ் சிந்தாமல் பொதுத்தேர்தல் மூலமாக ஐந்து தடவைகள் எதிர்க்கட்சிக்கு ஆட்சிப் பொறுப்பைக் கொடுத்து அரசாங்கத்தைத் தோல்வியுறச் செய்து பாராளுமன்ற சனநாயக ஆட்சி முறையின் சுதந்திரத்தை உச்சநிலையில் உபயோகித்த இலங்கை மக்கள், இந்திய மக்களையும் விட ஒருபடி முன்னேறியுள்ளார்கள்.

58. சனநாயக அரச முறையின் முக்கியமான அம்சமாக எதிர்க் கட்சிகள் செயற்படுவதற்கும், எதிர்கருத்துக்களை வெளியிடுவதற்கும், பொதுத்தேர்தல் மூலம் ஆட்சி பலம் பெறுவதற்குமான உரிமை எதிர்க்கட்சிக்கு இருத்தல் வேண்டும்.

59. சனநாயக அரசமுறையைச் சிறப்பாகச் செயற்படுத்த தேசத்துக்கு முக்கியத்துவம் கொடுத்தல் அத்தியாவசிய அம்சமாகும்.

60. பொதுத்தேர்தல் ஒன்றினல் நடைபெறும் புரட்சி இரத்தம் தோயாத புரட்சியாக விளங்குவது மக்களின் பாக்கியமே.

61. பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் சனநாயக ஆட்சி முறைகளைவிட இந்நாட்டிலேயே பிறந்து வேரூன்றிய சனநாயக முறை இந்நாட்டுக்குச் சிறந்தது.

62. கணிசமான காலம் ஆட்சியிலிருந்த அனுபவமிக்க சனநாயக அரசுகளும் கூட தமது கொள்கைகளுக்கெதிரான வழியில் போய் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டிய நிலை ஏற்படும். ஆகையால் புதிய ஆட்சிகளுக்கு விசேட கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டிய நிலையுண்டு.

63. இலங்கையில் இன்று ஏற்பட்டிருக்கிற அரசியல் நிலைக்கு ஏற்ப பொறுப்பில்லாத அழிவுப் பாதையில் சென்று கொண்டிருக்கும் எதிர்க்கட்சியும் சனநாயக முறைக்கு தீங்கு செய்யும்.

64. ஆட்சியிலுள்ள அரசாங்கத்தை வீழ்த்தி அதற்குப் பதிலாக வேறு அரசைத் தேர்ந்தெடுக்க மக்கள் எடுக்கும் முயற்சியை அரச துரோகச் செயலாக நினைக்க முடியாது.

65. தொழில், வீடு, உடுப்பு ஆகிய மூன்று பிரச்சினைகளைப் பற்றி செயற்படும்போது அரசாங்கமொன்றுக்கு அரசதுறை போன்று தனியார் துறையிலும் பூரண ஒத்துழைப்பு அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Sponsored by: JANET HOU AH CHING

66. சிறந்த நிர்வாகத்தின்கீழ் தனியார்துறை நடவடிக்கைகள் நடைபெறுமாஞல் அத்துறைக்கும் நாட்டின் அபிவிருத்திக்கு வேலை செய்ய இடம் கொடுப்பது பிழையல்ல.

67. சனநாயக முறையான சமூகத்தினுள் அரசாக்கத்துறைக்கும் தனியார் துறைக்கும் இடம் இருக்க வேண்டும்.

68. பொது உடைமையிலும் நிர்வாகத்திலும் உறுதியான நம்பிக்கை வைக்கிருேம்.

69. சனநாயக முறையான அரசு இந்நாட்டில் இருந்தால் எந்த நிறமுள்ள உடையணிந்து கொண்டும் வீதிகளில் நடக்கும் சுதந்திரம் எமக்கு இருக்க வேண்டும்.

70. சனநாயக முறை இருக்கும் வரை வாக்கு மூலம் புரட்சி செய்யலாம். அப்படிப்பட்ட புரட்சியின் பின் ஆபத்தான சர்வாதிகாரி ஒருவர் தோன்றமாட்டார்.

71. வாக்குரிமை இருந்தால் அல்லது எதிர்க்கட்சி இருந்தால் அல்லது வெவ்வேறு அரசியல் கருத்துக்கள் பரவியிருந்தால் நாட்டின் சர்வாதிகாரி ஒருவர் தோன்ற இடமிராது.

72. தேசம் முன்னேற வேண்டியது சுதந்திரத்துடனேயாகும்.

73. அரசாங்கம் தனியார் துறைகளினுலும் நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி அடையச் செய்யவேண்டும். சனநாயக முறையின் சுதந்திரம் உறுதிப்படுத்தப்படுவது நமது பொறுப்பாக இருக்க வேண்டும்.

74. உலகத்தில் எந்த சனநாயக ஆட்சியுள்ள நாட்டிலாவது அவசரகாலச் சட்டம் நடைமுறையிலிருந்தால் அவசரகாலம் நீங்கிய உடனே மக்கள் சனநாயக முறையிலான உரிமைகளே அனுபவிக்க வேண்டும்.

75. சுதந்திரத்தை அழித்து அரசாங்கமொன்றை அமைக்க நாம் எதிர்பார்க்க மாட்டோம்.

76. அனைத்துலகத்திலும் உண்மையை விடச் சக்தியுள்ள ஆயுதம் வேறு இல்லை.

77. ஆளப்படும் மக்கள் ஆட்சியாளர்களுடைய கைப்பந்தாகி விட்டால் மக்களுக்குள்ள ஒரேயொரு பாதுகாப்பு சத்தியாக்கிரகம் ஆகும்.

78. சனநாயக சுதந்திரத்திற்கு வரையறையில்லை.



Sponsored by: JANET HOU AH CHING
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

79. சனநாயக ஆட்சிமுறையில் காணப்படும் விசேட அழகு என்னவென்றால் சிந்தித்தல், விசாரித்தல் விமர்சனம் செய்தல் ஆகியவற்றின் சுதந்திரம் பொதுமக்களுடைய உரிமையாக இருத்தலேயாகும்.

80. பொதுமக்கள் எப்பொழுதும் எவ்வித குடும்ப பலத்துக்கும் அடிமைகளாக இருக்கக்கூடாது.

81. சமூகத்தில் வாழும் மற்றவர்களைச் சுரண்டி வாழாமல் தனது முயற்சிகளின் நற்பயனை அனுபவித்துச் சுகமாக வாழப் பூரண உரிமை மனிதனுக்கு இருத்தல் வேண்டும்.

82. ஒழுக்கமுள்ள பரம்பரையை ஆக்குவது அல்லது அழிப்பது போல, நமது சுதந்திரத்தை ஆக்குவதற்கும், அழிப்பதற்கும் சக்தியுள்ள உத்தமமான பலமுள்ள பொருள் வாக்குப் பலம் ஆகும்.

83. எனது நிர்வாகம் மக்கள் அடிமைகளைப் போல் ஆட்டிப்படைப்பது அல்ல. அவர்களையும் அரசாங்கத்தின் பங்காளர்களாக நினைத்து ஆட்சி புரிவதே எனது நோக்கமாகும்.

84. நாட்டின் மக்களுக்குச் சேவை செய்வதற்காகவே ஒருவருக்குப் பிரதமர் பதவி கிடைக்கிறது. அவ்வாறன்றி இராணுவம், பொலிஸ் ஆகியவற்றின் பாதுகாப்புடன் மக்களின் விருப்பங்களை அழிப்பதற்காக அல்ல.

85. மக்களுடைய விருப்பத்தின்படி எந்தக் கட்சிக்கு ஆட்சி உரிமை போனாலும் குற்றமில்லை. ஆனால் நமக்கு அவசியத் தேவை என்னவென்றால் பேச்சுச் சுதந்திரமும் விமர்சனம் செய்யும் சுதந்திரமும் ஆகும்.

86. சிறந்த தலைவர்களினால் நமக்கு அறிமுகம் செய்யப்பட்டுள்ள சனநாயக முறையில் சுதந்திரம் கலந்த சோஷலிசப் பாதையயினூடாக நமது நாட்டை மறுமலர்ச்சி பெறச் செய்யலாம்.

87. காலத்துக்குக் காலம் நடக்கும் பொதுத்தேர்தல் மூலமாகச் சண்டை இல்லாமல் ஆட்சியை மாற்றுமுரிமையும் சந்தர்ப்பமும் மக்களுக்கு இருத்தல் வேண்டும்.

88. பேச்சு, பிரசுர வெளியீடு, எதிர்க்கட்சி அமைப்பு, சுயாதீன நீதிமன்றம் ஆகியவற்றின் சுதந்திரம் நம்மிடம் இருக்க வேண்டிய சிறந்த செல்வமாகும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org
Sponsored by: JANET HOU AH CHING

89. சனநாயக அரச முறையில் வேறொரு முக்கியமான அம்சம் என்னவென்றால் தேசத்துக்கு முக்கியத்துவம் கொடுத்தல் ஆகும்.

90. நமது சனநாயக முறைப்படி தேசிய அரசுப் பேரவை மக்களால் நியமிக்கப்பட்ட சர்வாதிகார சபையல்ல.

91. தான் பலத்தோடு இருக்க முயற்சி செய்யும் அதே நேரத்தில் தன்னிடமுள்ள அதிகாரத்தை அநீதியாக உபயோகித்தல் சனநாயகத்தைச் சுரண்டுதல் எனலாம்.

92. 1970ஆம் ஆண்டுக்குப்பின் மக்களுடைய விருப்பத்தின்படி அவர்கள் விரும்பிய உறுப்பினர் ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் சந்தர்ப்பம் தோன்றியது. அதற்கு மூலகாரணம் நமது தலைமையிற் செய்த "சத்தியாக்கிரகம்" ஆகும்.

93. இந்நாட்டு மக்களுடைய கஷ்டங்களுக்காகவும் துன்பங்களுக்காகவும் நாம் சிறைச்சாலைக்கு மட்டுமல்ல, தூக்குமரத்துக்கும் போகத் தயாராக இருத்தல் வேண்டும்.

94. சனநாயக முறைப்படி மக்களுடைய சுதந்திரக் கருத்துக்களையும் செய்தித்தாள் சுதந்திரத்தையும் பேணி இலங்கையை ஆட்சி புரிவது எனது எதிர்பார்ப்பாகும்.

95. அரசாங்கத்திடமிருந்து மக்கள் எதிர்பார்க்கும் சேவை அம்மாதிரியாக நடவாதபோது மக்களே அந்த அரசை கவிழ்ப்பது சகஜம்.

96. இலங்கையை அரசியல்வாதிகளுடைய பாரம்பரிய சொத்தாகக் கொடுப்பதற்கு நமது விவேகமுள்ள மக்கள் தயாராக இல்லை.

97. இன்று இலங்கையில் சனாதிபதிக்குக்கூட இல்லாத அதிகாரம் இந்நாட்டு மக்களுக்கு உரிமையாக உள்ளது. அதுதான் மக்களின் வாக்குரிமை.

98. மக்கள் தேர்ந்தெடுக்கும் அரசியல் கட்சிக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப அவர்களுடைய தலைவர்களைத் தேர்ந்தெடுத்தல் வேண்டுமேயன்றி இரத்த உறவினரோ பரம்பரையில் பிறந்தவர்களோ என்ற முறையில் அல்ல.

சுபம்.



Sponsored by: JANET HOU AH CHING
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக சோஷலிச சிந்தனைகள்

## ஐந்தாம் அத்தியாயம்

1. சோஷலிசமும், சனநாயகமும் ஒன்றிணைந்து உருவாக்கும் புதிய அரசினால் மாத்திரமே மனிதன் மனிதனைச் சுரண்டுதலை ஒழிக்கலாம்.

2. மாக்சிஸத்தினால் சனநாயகத்தினூடாக சோஷலிசத்தை செயற்படுத்துதல் முடியாது.

3. அரசியலுக்காகப் பொதுமக்களின் உரிமையைப் புதைக்கும் சோஷலிசத்தை நாம் அனுமதிக்க மாட்டோம்.

4. சோஷலிசம் கற்பனைப் பொருள் ஒன்றல்ல, அது இந்நாட்டு மக்களின் உயிரூட்டப்பட்ட சக்தியாகவும் அமையவேண்டும்.

5. பொதுமக்களின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதுடன், சோஷலிச சமுதாயத்தை உருவாக்குவதும் எமது நோக்கமாகும்.

6. ஊழியர்களின் உழைப்பின் பயனாய்க் கிடைக்கும் உற்பத்தியின் பூரண இலாபத்தை முதலாளிமார் மாத்திரம் அனுபவிப்பது சனநாயகமல்ல.

7. உழைப்பை வழங்கும் சகலருக்கும் அவர்களின் சேவைக்கேற்ப ஊதியமும், இலாபத்தின் ஒரு பங்கும் உரித்தாக வேண்டும்.

8. நாட்டின் உற்பத்தி நிறுவனங்களின் உற்பத்தி வளங்களைப் பகிர்ந்தளிக்கும் உரிமை குறிப்பிட்ட சிலருக்கு மாத்திரம் இருக்கக்கூடாது.

9. நாட்டின் உற்பத்தி வளங்களின் உரிமை மக்களுக்கு இருக்க வேண்டும்.

10. பொருளாதார பலத்தைப் போன்று, மற்ற உரிமைகளும் குறிப்பிட்ட சில குடும்பங்களுக்கிடையே பகிர்ந்தளிப்பதை நான் விரும்ப மாட்டேன்.

11. சாதி, சமய, குல, பேதங்களினால் தனிநபர் உரிமைகள் அழிக்கப்படுவது நியாயமற்ற செயலாகும்.



Sponsored by: JANET HOU AH CHING
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. ஆட்சியாளர் முறைகேடான செயல்களில் ஈடுபடும்போது அவர்களுக்கெதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதற்கு மாக்ஸிய நாடுகளில் இடமில்லை.

13. எமது சோஷலிசத்துக்கும், இடதுசாரிகளின் சோஷலிசத்துக்கும் இடையிலுள்ள வேறுபாடு எதுவெனில், எமது சோஷலிசம் சனநாயகச் சட்டகத்தினுள் நின்று செயல்படுவதாகும்.

14. உற்பத்தி வழங்கும், உற்பத்தி நிறுவனங்களும், முதலாளித்துவ அரசின் கீழோ கூட்டுத்தாபனங்களின் கீழோ இருக்கக் கூடாது.

15. எனது ஒரே குறிக்கோள், சனநாயக சோஷலிசத்தை உரிய முறையில் கடைப்பிடிப்பதாகும்.

16. மக்களை விரக்தி நிலைக்கு உள்ளாக்கி, சிறு கூட்டத்தினரிடையே செல்வம் பகிர்ந்து கொள்ளக்கூடிய முறையை ஏற்படுத்துவது சோஷலிசம் ஆகாது.

17. நாட்டின் வளங்களை மக்களிடையே சமமாகப் பகிர்ந்தளிப்பதும், மக்களுக்குச் சுகபோக வாழ்வளிப்பதுமே சோஷலிசமாகும்.

18. சோஷலிச ஆட்சியென்பது, சமுதாயத்தின் பொதுமக்களைக் கொண்டு ஆட்சி நடத்துவதாகும்.

19. தனிநபர் ஆட்சி சோஷலிசம் ஆகாது.

20. தனியார் துறைக்கும் நாம் இடமளிப்போம். அரச முதலாளித்துவத்திற்கும், தனிநபர் சிலரிடம் செல்வம் தேங்கி இருப்பதற்கும் இடமளிப்பதை நாம் எதிர்க்கின்றோம்.

21. பெரியவன் சிறியவனைச் சுரண்டுவது சோஷலிசம் ஆகாது.

22. எமது ஒரேயொரு நோக்கம் நாட்டு மக்களின் மனித உரிமைகளைப் பாதுகாத்து சனநாயக சமுதாயத்தை உருவாக்குவதாகும்.

23. இலங்கையின் உற்பத்திப் பொருட்களை விநியோகிக்கும் இயக்கத்தில் சில்லறை வியாபாரிக்கு முதலிடத்தை அளித்து, தனியார் துறையின் உரிமைகளைப் பாதுகாத்துக் கொடுப்பது சனநாயக அரசாங்கத்தின் நோக்கமாக இருத்தல் வேண்டும்.

LIBRARY 24-2-1996



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Sponsored by: JANET HOU AH CHING

24. சகல மக்களுக்கும் ஒரேவிதமாகப் பிரயோசனமடையக்கூடிய முறையில் உற்பத்தியைப் பகிர்ந்தளித்தால், சொத்துக்களும், சுதந்திர உரிமைகளும் அதே விதமாகப் பகிர்ந்து செல்லும்.

25. பொதுமக்களின் அபிலாஷைக்கும், நாட்டின் நலன் கருதியும் பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரத்தை மீண்டும் வலோத்காரமாக ஒருமுகப்படுத்தல் ஒருபோதும் முடியாத கருமமாகும்.

26. இலங்கைக்கு ஒருபோதும் முதலாளித்துவம் பொருந்தாது.

27. சகல தொழில்களின் நோக்கமும், எதிர்பார்த்தலும் தமது தொழில் உரிமைகளேப் பாதுகாத்தல் என்பதை ஆட்சியாளரர் மறந்துவிடக்கூடாது.

28. பொருளேச் சொந்தமாக்கிக் கொள்ளும் சுதந்திரத்தை சகலருக்கும் சமமான முறையில் பாதுகாத்துக் கொடுப்பது சனநாயக சோஷலிசத்தின் நோக்கமாகும்.

29. பொதுமக்களே உற்பத்தி, விநியோகம், பரிமாறிக் கொள்ளல் போன்றவற்றின் உரிமையாளர்களாகவும், முகாமையாளர் களாகவும் ஆக்குவது எனது இலட்சியமாகும் - கொள்கை யாகும்.

30. மனிதனுல் மனிதன் சுரண்டப்படுவதற்கு அனுமதியளிக்கும் சமுதாயத்தை தொடர்ந்து பேணுவதற்கு எந்தவகையிலும் நாம் இடமளிக்க மாட்டோம்.

31. தேர்தற் தொகுதிகளில் அரசியல் அதிகாரம், குறிப்பிட்ட சில குடும்பங்களிடம் மாத்திரம் அடிமைப்படுதற் கிடமளியாமல், பொதுமக்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

32. தற்போது நடைமுறையிலிருக்கும் சமுதாய அமைப்புமுறை சதாகாலமும் நிலவினுல், சாதாரண மக்களின் தரம் வளர்ச்சியடையாது. அது இல்லாமற் போனுல் அதிலிருந்து எதிர்பார்ப்பது தற்போதுள்ள சமுதாய அமைப்பு முறைக்கு பதிலாக உரிய சமுதாய அமைப்பு முறையைத் தோற்றுவிப்பதாகும். நாம் இம்முறையை நோக்கிச் செல்ல வேண்டும்.

33. புரட்சிகரமான முறையை விட, சிரமமான அமைப்பு முறையில் சோஷலிச புரமைப்புக்கு, உலகம் கட்டுப்படும் என்பதை அண்மைக்காலச் சரித்திரத்திலிருந்து அறியலாம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org
Sponsored by: JANET HOU AH CHING

34. ஒருவனின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய முறையிலான சமுதாயத்தை அமைப்பதற்காக, ஒருவனுல் மற்றவனின் உழைப்பு உறிஞ்சப்படுவதைத் தவிர்த்து வறுமையைப் போக்குவதற்கு முயற்சித்தல் வேண்டும்.

35. பொதுமக்கள் தேர்ந்தெடுத்த பாராளுமன்றத்திற்கு கூடுதலான அதிகாரமிருப்பின், சோஷலிச ஆட்சி முறையையெனினும் உருவாக்கலாம்.

36. சோஷலிச ஆட்சி முறையை அமைப்பதற்கு புரட்சியொன்று அவசியமில்லை.

37. எமது நாட்டில் ஏற்படுத்தும் சோஷலிச முறை வெளிநாட்டு முறையைப் பின்பற்றி அமைந்ததாக இருக்கக்கூடாது.

38. சனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதுடன் இலங்கையில் சோஷலலிச முறையைக் கட்டியெழுப்புவது கடினமானதொன்றல்ல.

39. இதுவரை பிறக்காத எதிர்காலச் சந்ததியினருக்கு சோஷலிச ஆட்சியைப் பெற்றுக்கொடுக்க தற்போது வாழ்கின்ற கோடிக்கணக்கான மக்களைப் பலியிடுவது ஒருபோதும் பொருந்தாது.

40. மக்கள் மத்தியில் வர்க்கபேதத்தை ஏற்படுத்துவதும், பொருள் தானியம், ஐசுவரியம் உள்ளவர்கள் மீது பொருமையை வளர்த்து பண்பை அழித்தலும் அவர்களைப் போராட்டத்துக்குத் தூண்டிவிடும் என்பதை ஒரு பௌத்தன் என்ற முறையில் நான் நன்கு உணருகிறேன்.

41. சோஷலிசம் மாக்சியத்துக்கு முன் தோன்றியதாகும். அதை அவர் மறந்தாலும் உலகம் மறக்காது.

42. மாக்ஸிசம் என்பது பௌதீக மாற்றத்தையும் பொருளாதார உறுதியையும் அடிப்படையாகக் கொண்டு கால்மாக்கினுல் புரட்சிவாதம் அல்லது கம்யூனிஸ்ட் வாதத்திற்கேற்ப அமைக்கப்பட்ட வழி முறையாகும்.

43. மாக்சியவாதி, சோஷலிசவாதியாக வேண்டியது, அது மாக்சின் போதனையில் ஒரு அம்சமாக இருப்பதனுலாகும்.

44. ஒரு பௌத்தன் சோஷலிசவாதியாகலாம். மற்றவனின் குறைநிறைகளைப் பூரணப்படுத்தும் மக்கள் சமுதாயத்தை உருவாக்குவதற்காக, ஒருவனுல் மற்றவனின் உழைப்பு



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org
Sponsored by: JANET HOU AH CHING

உறிஞ்சப்படுவதைத் தவிர்த்து, வறுமையைப் போக்குவதற்கு அவன் முயற்சியெடுத்தால் மாத்திரமே அவன் சோஷலிச வாதியாகலாம்.

45. தனியார் துறைகளைத் தேசீயமயப்படுத்த வேண்டியது பொது மக்களின் நலன்களுக்காகவன்றி ஒரு சிலரின் நன்மைக்காக அல்ல.

46. பௌதிகவாதத்தில் உண்மையில்லை என்பதை உலகத் தாருக்கு உணர்த்தியவாறு முன்னேற்றமடைந்துள்ளது.

47. மனமும், பொருளும், கால்மாக்சிற்கும் அவரைப் பின்பற்றுவோருக்கும் ஒரு பிரச்சினையாக இருந்தபோதிலும் ஒரு பௌத்தருக்கு அப்படியல்ல. ஏனெனில் இவையிரண்டும் வேறென்றல்லாது நான்கு தாதுப்பொருட்கள் அந்தந்த அளவுகளில் உள்ளடக்கும் என பௌத்த சமயம் கற்பிப்பதனாலாகும்.

48. பண்புகளைப் பற்றிய தமது கருத்துக்கள் காரணமாக மாக்சியவாதிகள் எல்லா சமயங்களினதும் பகைவரானார்கள்.

49. சோவியத் ருஷ்யாவின் சமயம் பற்றிய அழிவு நிலையை மனித வரலாற்றில் வேறு எதனோடும் சமப்படுத்திக் கூறமுடியாது.

50. கிரமமான அல்லது அகிம்சையான அல்லது சித்தாந்தமான எந்த ஒரு சமயத்துக்கும் மாக்சிஸம் முழு விரோதமானதாகும்.

51. சிறந்த சமயங்களில் அடங்கியிருக்கும் உயர்ந்த கருத்துக்களை மறந்து மாக்சிஸத்திலுள்ள சில அம்சங்களை விபரிப்பவர்களுடன் நாம் சண்டையிட மாட்டோம்.

52. சிறந்த சமய ஸ்தாபர்களின் கற்பித்தல்களுக்கு மாக்சிஸம் முரணானது என்பதை உணர்ந்துகொண்டபின், எந்த ஒரு பௌத்த, கிறிஸ்தவ, இந்து முஸ்லிம், பக்திமானுக்காவது மாக்சியவாதியாக முடியாதென்பதை அறிந்துகொள்ள வேண்டும்.

53. மாக்சிசம் புத்தகங்களில் மாத்திரமல்லாது சோவியத் நாட்டிலும் பூஞ்சனம் பிடித்திருக்கிறது.

54. கம்யூனிசம் எமது பிரச்சனைகளைத் தீர்க்கவல்லதெனவும், அது பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள வழி வகுப்பதென்றும், கட்சி ரீட்சியாக நாம் ஏற்றுக்கொள்ள மாட்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
Sponsored by: JANET HOU AH CHING

55. ஸ்ரீ.ல.சு. கட்சியைப் போன்று நாமும் சனநாயக சோசலிசத்தை ஆதரிப்பதனுலும் அதைப் பாதுகாப்பதற்கு எம்மை அர்ப்பணித்திருப்பதனுலும் நாம் ஒருபோதும் கம்யூனிஸ்ட்வாதிகள் செல்லும் பாதையில் செல்வதற்குத் தயாரில்லே.

56. புதுச் சமுதாயம் ஒன்றை உருவாக்கி இலங்கையில் பொருளாதார விருத்தியை முன்னேற்றுவதற்காக சனநாயகமும் சோசலிசமும், கைகோர்த்துச் செல்ல வேண்டும்.

57. சோஷலிசத்தைத் துறந்த சனநாயகமானது, சனநாயகச் சுரண்டுதலாகும்.

58. சனநாயகத்தைத் துறந்த சோஷலிசம் என்பது மனித சுதந்திரத்தைக் கைப்பற்றலும் மிதித்தலும் ஆகும்.

59. சனநாயக சோஷலிசத்தின் மூலம் புதுப் பொருளாதாரக் கோட்பாடுகளேச் செயற்படுத்தும்போது நாட்டு மக்களே உற்பத்தியில், விநியோகிக்கும் உரிமையாளராகவும் பங்காளிகளாகவும் சேர்த்துக்கொள்வோம்.

60. செந்நிறம், மாக்ஸிய அரசியல் கட்சியொன்றின் நிறமல்ல. அது தொழிலாளரின் நிறமாகும்.

61. அமைதியான மக்கள் போராட்டத்தின் மூலம் தற்போதுள்ள சமுதாயத்தில் மாற்றம் ஒன்றை ஏற்படுத்தி மக்களுக்குச் சௌபாக்கியத்தை பெற்றுக் கொடுப்பதே நோக்கமாகும்.

62. "லெனின்" போன்ற தலேவர்கள் மாக்சியக் கொள்கைகளின் அடிப்படையில் செயற்பட்ட போதிலும், நான் கருமமாற்றுவது எனது சொந்த சிந்தனேயில் மலரும் இந்நாட்டுக்கு உகந்த சுதந்திரக் கொள்கைகளினுலாகும்.

63. தேசத்தின் பொருள் வழங்கல் நியாயமான முறையில் மக்களிடத்தில் பகிர்ந்து செல்லும் விதத்தில் நாட்டை ஆள்வது எனது நோக்கமாகும்.

64. சோஷலிச அல்லது முதலாளித்துவ அரசின்கீழ் இயங்கும் கூட்டுத்தாபனங்களில் இலாபம் பெறக்கூடியதாயிருப்பது, அவை சரியான முறையில் நிருவகிக்கப்பட்டால் மாத்திரமே.

65. அபிவிருத்தியடைய முயற்சி செய்யும் எந்த ஒரு நாடும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு தனது வாழ்க்கைத் தரத்தைக் குறைத்துக் கொள்ளல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sponsored by: JANET HOU AH CHING

66. வெளிநாட்டு உதவி கிடைப்பது சில நிபந்தனைகளின் பேரில் மாத்திரமே, ஆகையினால் சுய உதவி அதைவிடப் பல்லாயிரம் மடங்கு சிறந்ததாகும்.

67. தமது தரம், கல்வியறிவு, திறமையாற்றல் போன்றவற்றிற்கேற்ப உயர் நிலையை அடைய எண்ணுபவருக்கு கை கொடுத்து உதவுவது எமது கடமையாகும்.

68. பொறாமை, பகை, குரோதம், பழிவாங்கல் போன்றவற்றை விட்டு அஹிம்சை போன்றவற்றை மேற்கொண்டு கருமமாற்றுவதற்கு நாம் யாவரும் சித்தம் கொள்ள வேண்டும்.

69. நாம் ஒருபோதும் ஒருவரையும் தனிப்பட்ட முறையில் தாக்கமாட்டோம்.

70. நாம் எந்த ஒருவரையும் விமர்சிப்போம். அப்படிச் செய்வதும் தகுந்த காரணங்களை அடிப்படையாக வைத்தே ஆகும்.

71. கேட்டுக்கொண்டிருப்பவருக்கு முன்மாதிரியாக அமையும் முறையில் நாம் கதைத்தல் வேண்டும்.

72. மக்கள் வாழ்க்கையைச் சுபீட்சமாக்குவதற்கும் நாட்டை அபிவிருத்தி செய்வதற்கும் ஐ.தே. கட்சியின் தலைவன் என்ற முறையில் நான் தைரியத்துடனும், திடசங்கற்பத்துடனும் கருமமாற்றுவேன் என நேர்மையாக உறுதிகூறுவேன்.

73. நாட்டின் எதிர்காலத்தைப் பொறுப்பேற்கவுள்ள வாலிபர்களுக்கு உரிய பாதையைக் காட்டுவது, அனுபவமுள்ள அரசியல்வாதிகளின் கடமையாக இருத்தல் வேண்டும்.

74. இளைஞர் பரம்பரையின் அரசியல் அறிவை விருத்தி செய்வதற்காக சிறந்த சேவையை இளைஞர் கருத்தரங்குகள் மூலம் ஆற்றலாம்.

75. இளைஞர் கருத்தரங்குகள் மூலம் நாம் எதிர்பார்ப்பது விசேடமாக எமது கட்சியின் அரசியல், பொருளாதார, சமூக நடவடிக்கைகள் பற்றிய பிழையற்ற விளக்கத்தை இளஞ்சந்ததியினருக்கு பெற்றுக் கொடுப்பதாகும்.

76. இன்று ஐ.தே.க.யின் தலைவனாக விளங்கும் நான், ஓர் அஹிம்சாவாதி.

77. அரசியல் அரங்கிற்கு நான் கொண்டுவரும் ஆயுதங்கள் கருணையும், இரக்கமும் ஆகும். உறிஞ்சப்படுவதைத் தவிர்த்து, வறுமையைப் போக்குவதற்கு அவன் முயற்சியெடுத்தால் மாத்திரமே அவன் சோஷலிச வாதியாகலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
Sponsored by: JANET HOU AH CHING

78. எனதும், கட்சியினதும் ஒரே குறிக்கோள் மக்களைக் கட்டி வைத்துள்ள சங்கிலிப் பிடியிலிருந்து அவர்களை விடுதலை செய்து, அவர்களுக்குச் சந்தேகமின்றி, பயமின்றி வாழும் உரிமையைப் பெற்றுக் கொடுப்பதாகும்.

79. இன, மத, குல பேதமின்றி நசுக்கப்பட்டவர்களின் ஒத்துழைப்புடன், நாட்டில் அபிவிருத்தியை ஏற்படுத்துவதே எமது கடமையாகும்.

80. எனது நிர்வாகத்தின் கீழ் அமைக்கப்படவிருக்கும் அரசு, ஊழல், திறமையின்மை என்பனவற்றிலிருந்து நீங்கி ஒரு பொற்காலத்தை ஏற்படுத்தும்.

81. எதிர்காலத்தில் இந்நாட்டுப் பிரசை என்ற முறையில் பொறுப்புகளை ஏற்கவுள்ள இளம் சந்ததியினரை நல்ல வழியில் திருப்பி, அவர்களைப் புத்தியுள்ள அறிவாளிகளாக ஆக்கும் சக்தியும், பொறுப்பும் ஆசிரியர்களையே சாரும்.

82. நேர்மையோடு திறமையாக வேலை செய்பவர்களுக்கு மாத்திரமே எனது தலைமையின்கீழ் இடமளிப்பேன்.

83. இந்நாட்டில் நாம் அரசாங்கம் ஒன்றை அமைத்த பின்னர் பழிவாங்கும் மனப்பான்மையை விட்டு நற்சமுதாயத்தை உருவாக்கி எமக்கு வாக்களித்த, வாக்களிக்காத எல்லோரையும் சமநிலையில் கவனிப்பேன்.

84. ஊழல், லஞ்சம், மதுபானம் என்பனவற்றிலிருந்து விடுதலை பெற்ற சுதந்திர அரசாங்கத்தை நிறுவுவதே எனது நோக்கமாகும்.

85. நாம் யாருக்கும் அநீதி செய்யமாட்டோம். எமது அரசாங்கத்தின் கீழ் சிறிமா பண்டாரநாயக்காவுக்கும் இடமளிப்போம்.

86. இலங்கை மக்கள் அச்சமின்றி, சந்தேகமின்றி, சந்தோஷமாக வாழக்கூடிய. கடமையுணர்வுள்ள சமுதாயத்தை உருவாக்குவது எமது குறிக்கோளாகும்.

87. சனநாயக ஆட்சிமுறை செயற்படும் சமுதாயத்தில் வாழும் மனிதன் அரசாங்கமொன்றை அமைக்கும் பாரதூரமான கைங்கரியத்தில் பங்காளியாவது தனது பொருளாதார, சமூக தேவைகளைப் பூர்த்தி செய்யும் கருமங்களை அந்த அரசாங்கத்தினுல் நிர்வாகம் செய்துகொள்வதற்காகும்.

88. ஒவ்வொரு மனிதனும் சுதந்திரமாக வாழும் உரிமையை அவன் பிறப்பிலேயே பெற்றுக்கொள்கிருன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
Sponsored by: JANET HOU AH CHING

89. சனநாயக அரசாங்கத்தின் முக்கிய குறிக்கோளும், பொறுப்பும், தனிநபரின் சமூக உரிமையைப் பாதுகாத்துக் கொடுப்பதாக இருத்தல் வேண்டும்.

90. ஒரு தேசத்தின் பிரசை ஒருவரின் சமூக, பொருளாதார குறிக்கோள்களையும், கோட்பாடுகளையும் நிறைவுறச் செய்துக்கொவதற்குச் சங்கம் அமைக்கும் உரிமையைப் பெற்றுக்கொடுத்தல் உண்மையான சனநாயக அரசின் நோக்கமாக இருத்தல் வேண்டும்.

91. ஒரு சனநாயக அரசை ஒரு சங்கம் எனக் குறிப்பிடலாம்; எனினும் அது ஏனைய தொண்டர் சங்கங்களை விட வேறுபடும் என்பதை எமது அரசியல்வாதிகள் உணர்ந்து கொள்வது அவசியமாகும்.

92. ஒவ்வொரு பிரசைக்கும் தொழில் புரியும் வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பது சனநாயக அரசின் கடமையாகும்.

93. சனநாயகச் சூழல் நிலவும் அரசின்கீழ் சகல பிரசைகளுக்கும் கல்வி வசதி வழங்க கட்டாயமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

94. பழைய அரச பரம்பரை முறைக்கேற்ப இந்நாட்டில் அரசாங்கம் நடத்துவதற்கு இடமளிக்க முடியாது.

95. இன்றைய நிலைமையையும் எதிர்கால நிலைமையையும் எமது விருப்பப்படி அமைப்பதோ அல்லது மேம்படுத்துவதோ எம்மில் தங்கியுள்ள கருமமாகும்.

96. அதிகாரமுள்ள பதவிகளுக்கு எம்மைத் தேர்ந்தெடுத்த நாட்டுப் பிரசைகள்தாம் தற்போதுள்ள கஷ்ட நிலையிலிருந்து விடுபட்டு ஸ்திரமான நிலைக்கு வருவதனை எதிர்பார்க்கிறார்கள் என்பதை அரசியல்வாதிகள் கருத்திற் கொள்ளவேண்டும்.

97. கீழைத்தேச பண்பாடு, கலாசாரம் போன்றவற்றிற்கு முந்திய காலத்திலிருந்தே எமது மக்களின் பழைய பண்புகள் இன்னும் உள்ளன என்பதை மறந்துவிடக்கூடாது.

98. பொதுமக்களின் சுதந்திரத்தை இல்லாமற் செய்து அரசாங்க மொன்றை நிறுவுவதை நாம் எதிர்பார்க்கவில்லை.

99. இந்நாட்டின் சகல அரசாங்கங்களினாலும், பூரண மனித சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும்.



Sponsored by: JANET HOU AH CHING
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

100. கொடூர சர்வாதிகாரத்திலிருந்து நாட்டைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவும், ஏற்றுக்கொள்ளப்பட்ட சோஷலிச மனித சமுதாயத்தை உருவாக்குவதற்காகவும் நாம் நடத்துவது வீரப் போராட்டமாகும்.

101. தான்தோன்றித்தனமாக நாட்டின் சனநாயகத்தை குழிதோண்டிப் புதைக்க யார் முற்பட்டாலும் நாம் சத்தியச் செயற்பாடுகள் மூலம் அவர்களுக்குச் சரியான பாடம் கற்பித்தல் வேண்டும்.

UNIVERSITY OF PERADENIYA
24-2-1996
LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sponsored by JANET HOU AH CHING

# உள்நாட்டு வெளிநாட்டு விவகாரங்கள் சம்பந்தமான சிந்தனைகள்

## ஆறும் அத்தியாயம்

1. ஒரு நாட்டின் பிரதமருக்கு மக்களை எதிர்நோக்க முடியாத நிலைமை ஏற்படின் அப்பதவியில் ஒரு கணமேனும் இருக்கக் கூடாது.

2. மாக்ஸிய அரசாங்கமொன்று ஏற்பட்டால் இன்றுள்ள சுதந்திரம் எமக்கு இல்லாமற் போய்விடும்.

3. மாக்ஸிய அரசாங்கம் அமுலில் இருக்கும் நாடுகளில் அதிகாரத்திலுள்ள கம்யூனிஸ்ட் கட்சிக்கு மாத்திரமே வாக்களிக்கலாம்.

4. அரசியல் பிரசார நடவடிக்கைகளின்போது ஏசுதல், மானபங்கப்படுத்தல் போன்ற கீழ்த்தரமான செயல்களில் ஈடுபடுவது எமது கொள்கையல்ல.

5. சட்டத்துக்கு புறம்பாக செயற்படுகின்ற எந்த ஒரு அரசையும் கவிழ்க்கும் உரிமை பொது மக்களுக்குண்டு.

6. தேசிய அரசுப் பேரவையின் பொறுப்பு யாதெனில் பொது மக்களின் நீதித்துறை அதிகாரத்தை நீதிமன்றங்கள் மூலம் செயற்படுத்துவதாகும்.

7. இன்று என்னுடனுள்ள எனது கோஷ்டி பற்றி நான் உண்மையிலே பெருமையடைகிறேன். இந்நாட்களில் நடை பெறும் அரசியல் கிரிக்கட் பந்தாட்டத்தில் இப்போது அம்மணியின் கோஷ்டியினர் பந்தை அடித்துக் கொண்டிருந் தாலும், எனது கோஷ்டி பந்தை அடிக்கும் காலம் அதிக தூரத்தில் இல்லை.

8. நாம் கடந்த காலத்தையோ, நிகழ்காலத்தையோ சிந்திக்காமல், எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டியவர் களாக உள்ளோம்.

9. மக்கள் பிரதிநிதிகள் சபையை யுத்தப் பாசறையாக்குவதற்கு இடமளிக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
Sponsored by: JANET HOU AH CHING

10. நாம் கொண்டு செல்லும் சனநாயக முறையை மக்கள் நன்கு உணர்ந்து கொண்டுள்ளார்கள்.

11. காணிகளை தேசியமயமாக்குதல் சிறந்ததாயினும், அதைப் பகிர்ந்தளிக்க உள்ளவர்கள் தம்மிடையே பகிர்ந்து கொண்டால் அதனால் பெரும் அழிவு ஏற்படும்.

12. அரசியற் கட்சிகளில் உரிய முறையில் கருமமாற்றுவதற்கு பொதுமக்களின் இறைமை இருத்தல் வேண்டும்.

13. தலைவர்கள் மக்களிடம் செல்வதும் சகோதரத்துவ முறையில் கருமமாற்றுவதும், பொதுமக்களிடமுள்ள இறைமை யினாலாகும்.

14. மக்கள் பிரதிநிதிகளுக்கு மக்கள் அதிகாரத்தை அளிப்பது தற்காலிக ரீதியிலாகும். எனவே, அதை நீடிப்பது முறையற்றதாகும்.

15. தேர்தல் தொகுதியில் வெற்றிபெற முடியாத அமைப்பாளர்கள் கட்சியின் நலனுக்காக அப்பதவியிலிருந்து ராஜினமாச் செய்ய வேண்டும்.

16. எமது கட்சியின் கோட்பாடுகளுக்கு எதிரானவர்கள் கட்சியில் வைத்துக்கொள்ள மாட்டோம். அதைப்பற்றி கண்டுபிடித்து நீதிக்கும் ஒழுக்கத்துக்கும் ஏற்ப கட்சியின் பாதுகாப்புக்காக நடவடிக்கை மேற்கொள்வோம்.

17. நாட்டின் தலைவர்களையும், ஆட்சியிலுள்ளவர்களையும் நியமிட்டதற்கான மக்களின் சுதந்திர வாக்குப் பலம் மிகப் பெறுமதி வாய்ந்தது.

18. 440 ஆண்டுகளுக்கும் மேலாக சுதந்திரமற்ற அடிமைகளாக இருந்தமையால் சுதந்திரத்தின் பெறுமதியையும் மதிப்பையும் நாம் அறிவோம். ஆகையினால் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக நாம் விழிப்போடு செயற்பட வேண்டும்.

19. மக்கள் பிரதிநிதிகள் வாக்காளர்களின் எசமானர்கள் அல்ல. அவர்களின் ஊழியர்கள் என்பதை அறிந்துகொள்ள வேண்டும்.

20. அதிகாரத்தில் உள்ளவர்கள் மக்களின் அடிப்படை உரிமைகளை மறுக்க முற்பட்டால் அந்த சனநாயக விரோத செயல்முறைக்கு எதிராக பலம் வாய்ந்த மக்கள் கருத்தொன்றை ஏற்படுத்த வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
Sponsored by: JANET HOU AH CHING

21. சிறு கூட்டத்தினரைப் பாதுகாக்க நாம் ஆயத்தம் இல்லை.

22. திரு. டட்லி சேனநாயக்கா அவர்களின் அரசியல் பொருளாதாரக் கொள்கைகளை நான் ஒருபோதும் எதிர்த்து நிற்கவில்லை.

23. ஒழுக்காறு இன்றி ஒரு கட்சியை நடத்திச்செல்ல முடியாது.

24. மக்கள் ஆணையும், இறைமையும் எமது பரம செல்வங்களாகும்.

25. சனநாயக ஆட்சிமுறை இலங்கை மக்களின் அன்றாட வாழ்க்கையின் ஓர் அங்கமாக அமைந்துவிட்டது.

26. சனநாயக பாராளுமன்ற முறை உலகிலுள்ள சிறந்த முற்போக்கு அரசுமுறை என்பதை இன்று முழு உலகமும் ஏற்றுளள்ளது.

27. வாக்குப் பலத்தைப் பாதுகாப்பதற்கும் சுதந்திரக் கருத்துக்களை வெளியிடுவதற்கும் அதிகாரத்திலுள்ள அரசை விமர்சிப்பதற்ககும் அரசாங்கத்தை மாற்றி அமைக்கும் உரிமையைப் பாதுகாப்பதற்கும் நாம் உயிர்த்தியாகம் செய்யுமளவிற்குச் செயல்பட வேண்டியுள்ளோம்.

28. நாம் ஒரு தேசியம் என்ற முறையில் வாக்குப்பலத்தின் பெறுமதியை உணர்ந்துகொள்ள வேண்டும். அவ்வாறு செய்யாவிடின் இராசகாரிய முறை நிலவிய காலத்தைப் போன்று நாட்டின் அதிகாரத்தை பிரபுக்கள் கைப்பற்றிக் கொள்வர் என்பதில் சந்தேகம் இல்லை.

29. பொதுத்தேர்தல் ஒன்றை நடத்தாமல் ஒருவர் அல்லது இருவர் தனி விருப்பத்தின் மேல் சொந்த நலன் கருதி ஆட்சி அதிகாரத்தை மக்களிடமிருந்து அபகரித்துக் கொள்வதற்கு எத்தனிப்பது தன் கையால் தனது கழுத்தை நெரித்துக் கொள்வதாகும்.

30. மக்களின் வாக்குப் பலத்தால் அதிகாரத்துக்கு வருவதேயன்றி அவர்களின் தனித்துவத்தை அழித்து அதிகாரத்ததுக்கு வரும் உத்தேசம் எம்மிடமில்லை.

31. அரசாங்கத்தில் இருக்கும் யாவரும் அரச சங்கத்தின் அங்கத்தினர்களாகக் கட்டாயமாக நியமனம் பெறுவர்.

32. தொலைநோக்கும் புத்தியுள்ள அரசியல் சித்தாந்தங்கள் ஒரு நாட்டையும், தேசத்தையும் கட்டியெழுப்புவதற்குப் பெரிதும் உதவியாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
Sponsored by: JANET HOU AH CHING

33. எமது நாட்டின் சகல அரசியல் இயக்கங்களினதும் பின்னணி சத்தியத்தின் மீது கட்டியெழுப்பப்பட வேண்டியதுடன், அதை நாட்டினதும் மக்களினதும் முன்னேற்றத்துக்காகப் பயனபடுத்துவதன்றி, குறிப்பிட்ட சில சுயநலவாதிகளின் சொந்தக்கருத்தை நிறைவேற்றக்கூடிய பிரசார ஆயுதமாகப் பாவிப்பதற்கு இடமளிக்கக்கூடாது.

34. அரசின் எல்லா செயல்களுக்கும் எதிர்ப்புக் காட்டுவது சனநாயக எதிர்க்கட்சியின் கொள்கையல்ல.

35. பாராட்டப்பட வேண்டிய அரசாங்கக் கட்சியின் சிற்சில செயல்களை மதிப்பிடும் சக்தியும், தைரியமும் எதிர்க்கட்சிக்கு இருத்தல் வேண்டும்.

36. ஒரு கட்சியிலிருந்து ராஜினாமாச் செய்வது, எவ்வளவு வேதனைக்குரிய செயலாக இருந்தபோதிலும், இந்நாட்டின் எதிர்கால அரசியல் மரபின் முன்னேற்றங்கருதி அதற்கு இடமளித்தல் வேண்டும்.

37. பேதங்களைக் கருத்திற்கொண்டு அரசியலுக்கு வருவது இன்னும் ஒரு அடி பின் வைப்பதாக அமையும்.

38. எந்த ஒரு நாட்டு மக்களுக்கும் அந்நாட்டு அரசியல் முறையை ஆக்கிக் கொள்ளும் அதிகாரமும் உரிமையும் பிறப்பிலே கிடைத்திருக்கின்றன.

39. பல்வேறு நாடுகள் தமது சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொண்டு தமது நாடுகளில் அபிவிருத்தியை ஏற்படுத்திக் கொள்வதற்கு முயற்சி எடுப்பதுடன், நிலையான ஒன்றிணைந்த மனித வர்க்கத்திற்கு கலாசாரத்தின் தாக்கத்தையும் பெற்றுக் கொடுக்கும்.

40. அன்று ஆசிய மக்கள் உலக நாகரிகத்தின் முன்னணியில் திகழ்ந்தபோது, இலங்கையும் அவ்வெற்றியில் பங்கு கொண்டது. மீண்டும் சுதந்திர இலங்கை சுதந்திர ஆசியாவின் முன்னேற்றப்பாதைக்கு அடிகோலும் என்பதில் சந்தேகம் எதுவுமில்லை.

41. அரசை சிறந்த முறையில் அமைத்து மக்கள் சுகபோகங்களை அனுபவிப்பதற்கு அரசியல்வாதிகள் உதவிபுரிவோம்.

42. சிறந்த அரசு, சிறந்த மக்களால் நிறைந்து காண்பதற்கும், சிறந்த மனிதர்களையும், சிறந்த அரசையும் ஏற்படுத்துவதற்கு ஏதுவான ஒழுங்குகளைச் செய்வதற்கும் ஆட்சியாளர் முயற்சியுடையோராய் இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Sponsored by: JANET HOU AH CHING

43. அதிகார பலமுள்ள அரசியல்வாதிக்கு சூழ்நிலையை மாற்றியமைக்கலாம்.

44. அரசு சம்பந்தமான அதி உன்னத பதவியை தமது நாட்டுக்குப் பெற்றுக் கொள்வதற்காக எத்தனிக்கும் அரசியல்வாதிகளிடம் சிறந்த கொள்கைகள் அடங்கியிருத்தல் வேண்டும்.

45. சமுதாய அமைப்பின் தீயகுணங்கள் காரணமாக மனிதனிடம் எழக்கூடிய துர்க்குணங்களினுல் சமுதாயத்துக்கு இடையூறு வராவண்ணம் அவருடைய சுபாவத்தை மாற்றுவதற்கு கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் அரசியல்வாதி தகுதியுடையவராவார்.

46. மாக்ஸியவாதிகள், வர்க்கபேதத்துக்கு அனுசரணை அளித்து வர்க்கமற்ற சமுதாயத்தை அமைப்பதற்காக உயிரையும் சொத்துக்களையும் அழிக்க வேண்டுமென்ற பகிரங்கமாக கூறுகின்றனர்.

47. நோக்கங்களை அடைவதற்காக மக்களைக் கொலை செய்யவும், பொய்யுரைக்கவும் மாக்ஸியவாதிகள் அஞ்சமாட்டார்கள்.

48. அபிவிருத்தியடையும் நாடுகள் பயத்துடன் எதிர்காலத்தை நோக்குகின்றன.

49. ஒற்றுமையையும், அரச அதிகாரத்தையும் ஏற்பதும் அதற்குப் பக்கபலமாய் இருப்பதும் முன்னேற்றமடைந்து வரும் நாடுகளிடையே சிறந்த பண்பாகும்.

50. கட்சி மறுசீரமைப்பால் அரசியல் முறை மாறுபடும்.

51. மாற்றமடையும் உலகில் மாற்றமடையும் அரசியல் முறையினுல் நாட்டின் அபிவிருத்தியை எதிர்பார்க்கலாம். அதனுல் நாட்டுக்கு ஒரு சிறந்த சேவை ஏற்படும்.

52. பல நூற்ருண்டுகாலமாக வெளிநாட்டவரின் ஆக்கிரமிப்புக்கும், வெளிநாட்டவரின் ஆதிக்கத்திற்கும் சுரண்டல்களுக்கும் பாத்திரமாயிருந்த இலங்கை தனது மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு முயற்சியெடுக்கும் காலம் இப்போது உதயமாகியுள்ளது.

53. அபிவிருத்தியடைந்த நாடுகளிடையே இல்லாத, ஆனுல் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிடையேயுள்ள, பிரச்சினைகளுக்கான தீர்வு உடன் காணப்பட வேண்டும்.



Sponsored by: JANET HOU AH CHING
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

54. அபிவிருத்தி அடைந்துவரும் நூற்றுக்கணக்கான நாடுகளில் இன்னும் சனநாயக அமைப்பினுள் தனது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு இலங்கையும் இந்தியாவும் மாத்திரமே முயலுகின்றன.

55. அபிவிருத்தியடையும் தேசம் எப்பொழுதும் அடிக்கடி மாறுதல்களுக்கு உட்படும் தன்மையில் இருக்கின்றமையினால் பிறநாடுகளிலிருந்து சுமத்தப்படும் சனநாயகத்தை விட அதற்குப் பொருந்துவது தேசத்திலே வேரூன்றியிருக்கும் சனநாயகமாகும்.

56. தனிநபர் வேறுபட்ட கருத்துக்களைக் கொள்வதற்கும், எதிர்ப்பதற்கும் அரசாங்கத்தை நீக்குவதற்கும், ஏற்படுத்துவதற்கும் மக்களுக்கிருக்கும் உரிமையை புரிந்து கொள்வது கடினமான காரியமல்ல.

57. அதிகாரத்திலிருக்கும் எந்த அரசாங்கமும், வாக்காளர்களை தமது கட்சியில் வைத்துக் கொள்வதற்காக நீண்டகால பொருளாதாரத் திட்டம், அபிவிருத்தி ஆலோசனைத்திட்டம் போன்றவற்றிற்குப் பதிலாக அவசர ஆறுதல் அளிக்கும் திட்டங்களையும் அறிமுகப்படுத்த புத்தியுடைய அரசாங்கத்துக்கு நேரிடும்.

58. சனநாயகத்தைத் தொடர்ந்தும் பாதுகாக்கும்பொழுது அதிமுக்கியமானவையும் முதலிடம் அளிக்கப்பட வேண்டியவையும் தேவையானவையும், தேவையற்றவையும், கைவிடக்கூடியனவையும் போராட்டம் மூலம் பெறக்கூடியவையும் பற்றி பல பிரச்சனைகள் தோன்றலாம்.

59. வெளிநாட்டுச் செலாவணிப் பிரச்சினை இளைஞர் யுவதிகளின் பிரச்சினை ஆகிய இரண்டும் சர்வதேச பிரச்சினைகளாக தோன்றுவதனாலும், அவற்றையாவது கட்சி அரசியலுக்கப்பால் தேசிய மட்டத்தில் தீர்த்து வைக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org
Sponsored by: JANET HOU AH CHING

# சமய வளர்ச்சி பற்றிய சிந்தனைகள்

## ஏழாம் அத்தியாயம்

1. புத்த பெருமான் போதித்தருளிய உயர்ந்த அட்டாங்க மார்க்கத்தைத் தவிர, வேறு எத்தகைய புற மார்க்கங்களாலும் நிப்பாணத்தை அடைய முடியாது.

2. உண்மையைப் பேசிய அளவிலே, நற்பண்பின் அம்சங்கள் நிறைவெய்துவதில்லை.

3. சகல பண்புக்கும் அடி அத்திவாரமாக அமைபவை உள, உடல், சொல் தூய்மை என்பதைப் பௌத்த சமயத்தின் மூலம் நாம் நன்கு உணர்ந்துள்ளோம்.

4. இரண்டாயிரத்தி ஐநூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட நீண்டகால வரலாற்றுப் பெருமைமிக்க பௌத்த கலாசாரப் பண்புகளுடன் அமைந்த ஒரு நாடு என்ற வகையில், மனித சுதந்திரத்தைப் பாதுகாத்துக்கொள்ளும் வகையிலும், சனநாய கத்தை மிகவும் சிறப்பாக கருதுவதால், அது நன்கு பேணப்படும் வகையிலும் புத்தரின் சாந்தமான தர்ம முறைகளின்படி, இந்நாட்டிலே ஒளி நிறைந்த பொற்காலமொன்று உதயமாக வேண்டும்.

5. நான் ஆட்சிக்கு வந்தால், விகாரைகளில் இருந்து அரசாங்கம் பொறுப்பேற்ற, விகாரகம் (விகாரைக்குரிய நிலங்கள்) தேவாலகம் (தேவாலய நிலங்கள்) என்பவற்றைத் திருப்பி ஒப்படைப்பேன்.

6. பாதைகளை அகலமாக்க வேண்டும் எனக் கூறிக்கொண்டு, பல நூற்றாண்டுகள் பழமை கொண்டனவும், ஆயிரக்கணக்கான பௌத்தர்களால் பூஜிக்கப்பட்டனவுமான அரசமரங்களை வெட்டிச் சரித்தல், நகரங்கள், கிராமங்கள் முழுவதும் மதுச் சாலைகளை ஏற்படுத்துதல், கொலை, கற்பழித்தல் போன்ற பஞ்சமா பாதகங்களில் ஈடுபடல், மக்கள் தலைவர்கள் எனக் கூறிக்கொண்டு, வயிறு முட்ட மது அருந்தி, நாட்டின் உயர் நிலையத்துக்கு வருகை தந்து, பண்பற்ற முறையில் பழகும் பௌத்தத்துக்கு ஒவ்வாத அலுவல்களில் ஈடுபடுதல் என்பன போன்ற தீய செயல்களையும் இவற்றில் ஈடுபடுவோரையும் நாம் எதிர்த்தொதுக்க வேண்டும்.



Sponsored by: JANET HOU AH CHING
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. கிறிஸ்தவ தேவாலயமொன்றிற்கு முன்னுல், ஒரு சிலுவையை நிறுவுவதனுல் பௌத்த சமயத்துக்கு ஒரு தீங்கும் ஏற்படப் போவதில்லே.

8. பல்வேறு சமயங்களே அனுட்டிக்கும் மக்கள் வாழும் நாட்டில் அவரவரின் சமயத்தை அனுட்டிக்கும் சுதந்திரத்தைப் பறிக்கக் கூடாது என்பது எனதும், என் கட்சியாளர்களினதும் நோக்கமாகும்.

9. பகை - பொருமை, குரோதம் என்பன மனிதனேக் கெடுப்பவை. அவற்றை நீக்கி சாந்தமான பௌத்த சிந்தனேகளிற் பயிற்சி பெறுதல் பௌத்தர்களாகிய நாம் மேற்கொள்ள வேண்டிய உயர் பண்பாகும்.

10. உண்மையான பௌத்தர்களேத் தோற்றுவிக்கும் மூலஸ்தானமாக கிராமத்து பௌத்த ஆலயம் அமைய வேண்டும்.

11. மிகப் புராதன காலத்திலிருந்து பௌத்த பிக்குமாரின் அறிவுரைகளும், வழிநடத்துதல்களும் பெற்று பௌத்த ஆலயச் சூழலில் வளர்ந்த படியினுல் பௌத்த பெருமக்களுக்கு பண்பான, ஒழுக்கமுள்ள தூய வாழ்க்கை வாழும் பாக்கியம் கிடைத்துள்ளது.

12. பௌத்த ஆலயம் புனிதமான ஓர் இடமாக மட்டுமன்றி, சகல வாத பேதங்களிலிருந்து விலகி, ஒற்றுமையாக சமாதானமாக வாழ்க்கையைச் செலுத்த மிகவும் துணேயாக அமையும் மத்திய தர்மநிலேயமாக அமைய வேண்டும்.

13. மனசாட்சிக்கு ஏற்ப, தாம் விரும்பும் சமயத்தை அனுட்டிக்கும் சுதந்திரத்தை சகல மக்களுக்கும் பெற்றுக் கொடுப்பது, சனநாயக அரசாங்கத்தின் கடமையாகும்.

14. தாம் அனுட்டிக்கும் சமயத்தைப் பரப்புவதற்கு தொண்டர்களே அமைத்துக் கொள்ளவும், சமய கூட்டுதாபனங்கள், நிலேயங்கள் என்பவற்றை விருத்தி செய்துகொள்ளவும் மேற்கொள்ளும் முயற்சியைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமாயின் அது சர்வாதிகார பாதையில் முதற்படியாக அமையும் என்பதை மக்கள் மறந்துவிடக் கூடாது.

15. சிங்கள மக்களின் உயர் பண்பும், சிறந்த குணமும் பௌத்த சமயத்தினுல் மெருகூட்டப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. நான் பதவிக்கு வந்தவுடன் பௌத்த சாசனம் பற்றி எழுந்துள்ள தற்போதைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பேன்.

17. அந்நியரின் ஆதிபத்தியத்தின் கீழ் வீழ்ச்சியுற்றிருந்த பௌத்த சமயத்திற்குப் புத்துயிர் ஊட்டியது 1948ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஐ.தே.கட்சியாகும்.

18. பௌத்த சாசனத்தின் பிரச்சினைகளுக்கு பிக்கு சங்கத்தினருடன் பேச்சுவார்த்தை நடத்துவதால் அவர்களின் ஆலோசனைப்படியே தீர்த்து வைக்கலாம்.

19. புத்தபிரானைப் பின்பற்றுபவர்களாகிய பிக்கு சங்கத்தினர் அரசியல் கட்சிகளில் அங்கத்துவம் பெற்று செயற்படுவதனால் அவர்கள் இல்லத்தவர்களுக்குக் கட்டுப்பட வேண்டிய நிலை உருவாகும்.

20. பிக்கு சங்கத்தினர் தேசிய பேச்சாளர்களாகத் தோன்றி எனக்குத் தரும் ஆலோசனைகளை நான் சிரமேற்கொள்வதற்கு ஆயத்தமாக இருக்கிறேன்.

21. நாங்கள் லௌக்க சம்பத்துக்களில் மட்டும் பேராசை கொள்ளல் ஆகாது.

22. லௌக்க சம்பத்துக்களை விட உளத்தூய்மையை மதிக்க வேண்டுமென்பதை புத்தரின் தருமம் எமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

23. இரம்மியமான எமது இந்த இலங்கைத் தீவில் பலம் பொருந்தியுள்ள ஏனைய சமயங்களைப் புத்தபிரானின் தூய சமயத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது அவை வயதில் குறைந்தவை எனக் கூறலாம்.

24. பௌத்த சமயம் சுதந்திர எண்ணக்கரு உள்ளவர்களின் மனதைக் கவர்ந்துள்ளது. மேலும் அதை நவீனமய கருத்துகளால் வீழ்ச்சியுறச் செய்ய முடியாது.

25. புத்தபிரானின் போதனைகளுக்கு மட்டும், உலகின் புதிய நோக்கங்களுக்கு அமைய விளக்கம் தரவோ, புதிய கருத்துக்களை வெளியிடவோ அவசியமேற்படாது.

26. புத்தபிரான் வெளிப்பூசைகள், சடங்குகளுக்கு மட்டும் அதிக முக்கியத்துவம் கொடுக்கவில்லை. எனினும், ஆசிய மக்கள் பக்தியும் நன்றியும் பெருகிய உள்ளம் கொண்டவர்களாதலின் அவர்கள் புத்தபிரானின் திருப்பாதக் கமலங்களைப்



Sponsored by: JANET HOU AH CHING
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு மணம் நிறைந்த பூக்களால் நிறைத்து "நான் புத்தன் சரணம் அடைகிறேன்" என்னும் வாக்கியத்தை நாள்தோறும் செபித்து வழிபடுகின்றனர்.

27. சிங்களவர்களின் வரலாறு, மொழி, பழக்க வழக்கங்கள் எனும் வாழ்க்கையின் எல்லா ஒளி அம்சங்களும் மூலகாரணமாக அமைந்த பௌத்த சமயத்துக்கு நான் நன்றிக் கடனுடையேன்.

28. இலங்கை மக்களாகிய நாம் புத்தபிரானின் தருமத்தை எமது நாட்டு மக்களின் வாழ்க்கைக்கு இயைபான ஒரு சமயமாக அமைத்துக்கொள்வோம்.

29. எமது பண்பையும், கலாசாரத்தையும் பல நூற்றுண்டுகளாகப் பாதுகாத்து வரும் பெருமை பௌத்த பிக்குமாரையே சார்கின்றது.

30. பௌத்த சமயம் தவிர்த்த ஏனைய சமயங்களை அனுட்டிக்கும் எமது நாட்டு மக்களுக்கு அவரவரின் சமயப்படி ஆன்மீக தேவைகளைப் பெறுவதில் இடையூருக இருப்பது எமது கொள்கை அல்ல. இனிமேலும் அந்த நோக்கத்தை மாற்றிக் கொள்ள மாட்டோம்.

31. பௌத்த சாசனத்தைத் திருத்தியமைப்பதற்குரிய அதிகாரங்களை பௌத்த பிக்குகளுக்கு அளிக்க வேண்டு மென்பதையும்; அவ்வாறு திருத்தம் பெற்று பௌத்த பிக்குமார் உலக நாடுகளில் சந்தித்து பௌத்த சமயத்தைப் பரப்பும் வரலாற்றுமிக்க பணியில் ஈடுபடுத்துவதற்கு அரசாங்கம் எனும் வகையில் உதவி அளிக்க வேண்டும் என்பதையும் நாம் ஏற்றுக் கொள்வோம்.

32. ஒரு சமயத்தை ஏற்றுக்கொள்வதோ அல்லது ஏற்றுக் கொள்ளாது விடுவதோ தனிமனிதனின் விருப்பமாகும்.

33. ஏனைய சமயங்களை அனுட்டிக்கும் எமது நாட்டு மக்களுக்குத் தமது சமயத்தை அனுட்டிக்கும் சுதந்திரம் இருத்தல் வேண்டும் என்பதை புத்தபிரானின் புத்த தருமத்தை அனுட்டிக்கும் மக்கள் மறந்துவிடக் கூடாது.

34. பௌத்த கோட்பாடுகளுக்கு அமைய அரசாங்கம் பௌத்த சாசனத்திற்கு உதவி வழங்கியும் அரசாங்க கோட்பாடுகளை பௌத்த தருமத்துக்கு இயையாகவும் வகுத்துக் கொள்ளலும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org
Sponsored by: JANET HOU AH CHING

35. பண்புள்ள ஒரு நல்ல அரசாங்கத்தை நடத்துவோர் பேராசை, துவேசம், அறியாமை இல்லாத மனிதர்களாய் அமைய வேண்டும்.

36. மனிதனின் பேராசை காரணமாக எம் முன் தோன்றியுள்ள பிரச்சினைகளை, மேற்கத்திய விஞ்ஞான அறிவால் மட்டும் தீர்த்துக்கொள்ள முடியாது என்பது எனது உறுதியான நம்பிக்கை.

37. மனிதன் சுகபோகங்களைப் பெறுவதற்காக செய்யும் முயற்சிகளின் நோக்கத்தை மாற்றி, பேராசை, துவேசம் என்பவற்றை மனதிலிருந்து அகற்ற முயற்சி செய்யவேண்டும்.

38. புத்தபிரானின் கருத்துப்படி சுகபோகங்களை பெறுவது வெளி அலுவல்களால் அல்ல, தனது மனத்தினுலாகும்.

39. துக்கம் மனிதன் ஏற்படுத்திக்கொண்டவொன்ருகும். அது வெளியுலகின் இயல்புகளாலோ அன்றேல் புற ஏதுக்களாலோ மனிதனுக்கு ஏற்பட்டதொன்றல்ல.

40. சூழலை எம்மால் மாற்றியமைக்க முடியாது. எனினும், எமது உலகை நாம் மாற்றியமைத்துக் கொள்ளலாம்.

41. மாக்ஸியவாதிகட்கு பௌதிக தத்துவங்களையும், மனிதனின் விதியை அமைப்பதில் சூழலுக்குள்ள முக்கியத்துவத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டியிருப்பதனுல் அவனுக்கு அவற்ருேடு ஒரு பௌத்தனுக இருக்க முடியாது.

42. ஒரு பௌத்தனுக்கு பொதுவுடமைவாதியாக இருக்க முடியும்.

43. கருணையும், இரக்கமும், அகிம்சையும் கொண்டுள்ள பௌத்த தருமத்தின் நடுநிலைக் கோட்பாடுகளுக்கும் கிறிஸ்துவின் மலைமேற் பிரசங்கத்துக்கும், கால் மாக்ஸின் இரத்தம் சிந்தும் பயங்கர மார்க்கத்துக்கும் நிறைய வேறுபாடுகளுண்டு என்பதில் சந்தேகம் இல்லை.

44. பௌத்தனுக்கோ அல்லது ஒரு கிறிஸ்தவனுக்கோ நோக்கத்தின் அளவுக்கு அதைப் பெறுவதில் உள்ள மார்க்கமும் சம அளவு முக்கியமுடையன.

45. கொலை செய்வதால், ஒருவனுக்கு மோட்சத்தையோ அல்லது பரிசுத்த நிர்வாணத்தையோ பெற முடியாத போதிலும், மாக்ஸியவாதிகளின் வெற்றிக் கம்பத்தை அடைந்துவிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sponsored by: JANET HOU AH CHING

46. திரிபிடகத்தில் உள்ள பல விடயங்களிலிருந்து மனிதனுடைய மூல அடிப்படைகள் சிறந்த குணங்கள் பற்றி எமக்கு ஒரு விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

47. திரிபிடகம் என்பது புராண உலகிற்கும், நவீன உலகிற்கும் பண்பு, கலாசாரம், இறுதி விடுதலை என்பன தொடர்பில் பரம தூய்மையோடு, முன்னோடியாக செயலாற்றிய ஓர் இயக்கத்தின் பிரதிபிம்பத்தைத் தெளிவாகக் காட்டும் சாதனமாகும்.

48. திரிபிடகத்தை வாசிப்பதன் மூலம் பௌத்த சாசனத்தையும் தர்மத்தையும் மாத்திரமல்லாமல், கௌதம புத்தரின் கருணாசாகரத்தையும் தெளிந்த அறிவையும் பற்றிய அவரது வாழ்க்கையைப் புரிந்துகொள்ள முடியும்.

49. உலகுக்கு உதவிய பரம உத்தமரான புத்தபிரானின் உயர்ந்த சரிதையை மெருகிட்டுக் காட்டும் கண்ணாடியே திரிபிடமாகும்.

50. இலங்கை மக்களாகிய நாம் பௌத்த சமயம் என்னும் சிறந்த தார்மீக திறைச்சேரியின் பொறுப்பாளர்கள் ஆவோம்.

51. இந்திய பௌத்த தருமத்தின் உயரிய சுய தன்மையை அறிந்துகொள்வதற்கு மிகவும் துணையாக அமைந்த "ஹீன - யான" பௌத்த தருமத்தின் பலமண்டலம் ஆகிய தர்மத்தின் இயல்புகள் நிறைந்த "தர்ம தீபம்" என்ற பெயர் கொண்ட இந்நாடு புராதான காலத்திலே இருந்து அபரிமித நற்பண்புக் கடலிலே மூழ்கி தர்மத்தின் சேம பூமியாக பரிணமித்ததெவ்வாறோ, அவ்வாறே வருங்காலத்திலும் அகில உலகின் தருமக்களஞ்சியமாகவும் வெளிநாட்டுப் பண்டிதர்களை இங்கு அழைக்கும் தகைமையுடையதாயும் இலங்கை திகழும்.

52. சாந்தமான அருள் தலைவராகிய புத்தபிரான் அருளிய "பகையால் பகையை அழிக்க முடியாது", "பகை கருணையாலேயே அழியும்" என்னும் போதனைகள் அடங்கிய பகுதி, ஆசியாவின் எண்ணிறந்த மக்களின் வாழ்க்கையை உயர்த்தும் பண்புகள் கொண்டதாக நாம் கருதுகிறோம்.

53. விஞ்ஞானிகளின் தத்துவங்கள் வெறும் இலௌக்கத்தையே அடிப்படையாகக் கொண்டவை. அதன் மூலம் மனிதனுக்கு அழியாத சுகபோகங்களை ஒருநாளும் பெற்றுக்கொள்ள முடியாது. அங்ஙனம் முடியாதபோது, அவன் புத்தபிரானைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org Sponsored by: JANET HOU AH CHING

போல ஆரம்பத்திலிருந்தே வழியைத் தேடுவான். இலங்கை மக்களாகிய நாம் உலக மக்களுக்கு வழங்கக்கூடிய சிறந்த மார்க்கம் அதுவாகும்.

54. மனிதனின் துன்பமும், இன்பமும் அவனுடைய ஆசைகளின் அளவிற்கேற்ப அமைகின்றன.

55. புவியில் வாழ்ந்தாலும், சந்திரமண்டலத்தில் வாழ்ந்தாலும் மனிதனிடத்து ஆசைகள் இருப்பின் துக்கம் அவனை ஆட்கொள்ளும்.

56. மனிதனின் நோக்கம் இன்பத்தைப் பெறுவதாயின் அவன் அதன் பொருட்டு சந்திரனுக்கு போகத் தேவையில்லை.

57. புத்த சமயத்தோடு ஒன்றித்துக் கருமமாற்றும் ஒரே ஒரு அரசியல்வாதி சனநாயகவாதியாவான்.

58. புத்தரின் தருமம் எமக்கு பொறுமைக் குணநலன்களில் பயிற்சி அளிக்கின்றது.

59. இனம் அல்லது குல பேதங்களைக் கவனியாது எல்லோருக்கும் சம அளவாக உரிமமைகளை சனநாயக நிலையங்களின் மூலம் பெற்றுக் கொடுப்பதற்கு எமக்குப் போதனை அளிப்பது புத்த சமயமாகும்.

60. சனநாயக உத்தம குண தர்மங்கள், எமது சமூகத்திலும், பண்பிலும், கலாசாரத்திலும் பௌத்த தர்மக் கோட்பாடுகளுக்கு அமைய ஊறிக்கிடக்கின்றன.

61. ஆசியாவில் மட்டுமல்ல முழு உலகிலுமுள்ள கோடிக்கணக்கான மக்களைவிட நல்ல ஒரு வாழ்க்கை வாழ்ந்து உயரிய சாந்தி நிலையை அடைய பௌத்த தருமம் துணையாகின்றது.

62. புத்தரின் தருமத்திலுள்ள உயர்ந்த ஆரிய அஷ்டாங்க மார்க்கங்கள் கிறிஸ்துநாதரின் மலைமேற் பிரசங்கமும் வேறுபட்டவையன்று.

63. பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் வட இந்தியாவிலும் ஜெருசலேமிலும், உயர்ந்த பணியாகக் கருதப்பட்டது, தர்மங்களை வெளியிடல் ஆகும். அந்தத் தூய்மையாளர்களைப் பின்பற்றிய மக்கள் பரம்பரையின் வாழ்க்கை மேற்கூறிய அறங்களினால் ஒளிமயமாயிற்று.

64. சமயப் போதகர்களின் வழிநடத்துதல்களுக்கமைய வாழும் மக்கள்மீது நான் அளவுகடந்த நம்பிக்கை கொண்டுள்ளேன். அவ்வாறு வசிப்பவர்களின் மத்தியில் இருப்பதால் ஒருவித கேடும் ஏற்படமாட்டாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
Sponsored by: JANET HOU AH CHING

64. சமயப் போதகர்களின் வழிநடத்துதல்களுக்கமைய வாழும் மக்கள்மீது நான் அளவுகடந்த நம்பிக்கை கொண்டுள்ளேன். அவ்வாறு வசிப்பவர்களின் மத்தியில் இருப்பதால் ஒருவித கேடும் ஏற்படமாட்டாது.

65. உயர்ந்த ஆரிய அஷ்டாங்க மார்க்கங்களுக்குப் புறம்பாக புத்தர்பிரான் வேறு எதையும் எமக்குப் போதித்தருளவில்லை. மனித இனம் பின்பற்றி ஒழுக வேண்டிய அறத்திட்டங்கள் முழுவதும் அடங்கிய தொகுதி இதில் விளங்கக் காண்கிறோம்.

66. பரிசுத்த நிர்வாண பாதையில் அடியெடுத்து வைக்கத் தயாராகும்போது, சீலம் முக்கியத்துவம் பெறுகின்றது.

67. தனது நலனுக்காகவோ, அல்லது தனது தாயாரின் நலனுக்காகவோ ஓர் உண்மைப் பௌத்தனுக்கு, மனசறியப் பொய் பேச முடியாது.

68. பேச்சில் அல்லது செயலில் மட்டுமன்றி எண்ணத்திலும் சத்தியத்தை கடைப்பிடிக்க வேண்டும்.

69. இன்று சில பௌத்தர்கள் செய்யுமாப்போல பஞ்சசீலப் பதங்கள் ஐந்தினையும் பாளி மொழியில் உச்சரித்து, உதட்டை அசைத்து சும்மா இருத்தல் சீலம் காப்பதல்ல. அது வெறுமனே இருப்பதாகும். இப்பஞ்சசீல பதங்களுக்கு அமைய தினசரி கடமைகளை நிறைவேற்ற வேண்டும். அப்பொழுதுதான் அவனை ஒரு பௌத்தன் எனலாம்.

70. பௌத்த கோட்பாடுகள் வெறும் தத்துவங்கள் மட்டுமல்ல, அவை மார்க்கங்களுமாகும். முதலில் தான் அடியெடுத்து வைத்தபின்னர் ஏனையோர் அடியெடுத்து வைத்த மார்க்கங் களாகும்.

71. தியானத்தில் மூழ்கி மனதை அடக்கி சமாதி நிலையை அடைந்த ஒருவனுக்கு மன அலைகளின் வேகத்தை மாற்றியமைத்தல் கடினமான காரியமன்று.

72. உலகில் தோன்றிய சிந்தனையாளர்களுள் முதல் இடத்தை வகிக்கும் புத்தபிரானின் தர்மத்தின்படி அரசியலில் இறங்கிய எமது அரசியல்வாதிகள் அப்போதனைகளால் பயன் பெறுவார்களா.

73. கருமபலம், மறுபிறப்பு என்பன பற்றிய மிகவும் நுணுக்கமான தர்மங்களை தவருகப் புரிந்துகொள்வதால் உண்மைக் கோட்பாடுகளுக்குப் பெரிய பங்கம் ஏற்படுகிறது. இன்று



Sponsored by: JANET HOU AH CHING
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் காணப்படும் குற்றங்களும், வன்செயல்களும், பூசைகள், ஊர்வலங்கள் ஆகியனவும் இப்பிழையான அபிப்பிராயங்களின் விளைவுகளாகும்.

74. உலகில் தோன்றிய சகல தத்துவ ஞானிகள், தார்மீகவாதிகள், விமுத்தியாளர்கள் இடையே புத்தபிரான் ஒப்புயர்வு இல்லாத உயர் இடத்தைப் பெறுகிறார்.

75. பௌத்த தருமத்தின் பொருளை விளங்கிக் கொள்ளக்கூடிய அறிவாளர்கள் மூலம் புனித திரிபிடகத்தின் கருத்துக்களை விளங்கிக் கொள்ளல் வேண்டும். அவை ஆழமானவை, உத்தமமானவை, சாந்தமானவை, அதிக அழகானவை,

76. பௌத்த தருமம் சகல துக்கங்களையும் இல்லாமற் செய்யும் மார்க்கம் எனப் பொருள்படும். சகல துக்கங்களையும் ஒழித்து, பரிநிர்வாணத்தை எய்தும் மார்க்கத்தைப் போதிக்கும் உத்தமமான தர்மமாகும்.

77. புத்தபிரானின் சுய அறிவினால் தேடிக்கொண்ட விடுதலை மார்க்கத்தில் அல்லாமல், வேறு முன்னோடி ஞானிகளால் தேடிக்கொள்ளப்பட்ட மார்க்கங்களில் புனித பரிநிர்வாணம் இல்லை.

78. ஏதாவது ஒரு வழியில் உயர்ந்த ஆரிய அஷ்டாங்க மார்க்கம் வெளிப்படுமாயின் அங்கே புனித நிர்வாணம் உண்டு.

79. திரிபிடக பௌத்த தருமத்தை பூரணமாக அல்லவெனினும், மேலதிகமாக சேர்க்கப் பெற்ற பாளி இலக்கியத்தை மிகுந்த அர்ப்பணிப்புடன் பாதுகாத்து, தற்கால மக்கள் முன்னிலையில் வைத்த பெருமை இலங்கையைச் சார்கின்றது.

80. இந்தியாவிலே பல தத்துவ ஞானிகளும், பெரும் முனிவர்களும் பரம்பரை பரம்பரையாக பயிற்சியும் அனுபவமும் பெற்று விடுதலை நிலைக்குக் கொண்டுவந்த அறிவு ஞானத்தின் உச்சநிலை புத்தர்பிரானின் தர்மத்திலே காணக் கிடைக்கின்றது.

81. மனிதனின்அடிப்படையானவும் சிறந்தனவுமான எண்ணக் கருத்துக்கள் சார்ந்த விளக்கத்தை எமக்கு அளிக்கவல்லது திரிபிடகம் ஆகும். இது புராதன உலகத்திற்கு ஏற்புடையவாறே, தற்கால நவீன உலகத்திற்கும் ஏற்ற பண்புகள், கலாசாரம் இறுதி விடுதலை என்பன பற்றி சரியான உத்தமமான, அழகான அறிவுரைகளை வழங்கிய முன்னோடி இயக்கமொன்றின் பிம்பத்தை சித்தரித்து நிற்கின்றது.



Sponsored by: JANET HOU AH CHING
Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

82. அபிலாசையும், விருப்பும் இருந்தால், உமக்கும் - எமக்கும் - நம் எல்லோருக்கும், 'சம்மா சம்போதி' என்னும் உண்மையான பௌத்த அறிவொளி மாணிக்கத்தைக் கைப்பற்றிக் கொள்ளலாம்.

83. புத்ததருமத்தில் கூறப்படாத தொன்று, வேறு எந்த சமயத்திலாவது வேறு எந்த ஒரு கோட்பாட்டிலாவது எந்த ஒரு விஞ்ஞானத்திலாவது கூறப்படவில்லை.

84. விடுதலையை விரும்பும் நபர், புத்தர்பிரான் அனுபவத்தின் வாயிலாகத் தெரிந்து போதித்தருளிய தர்மங்களைக் கடைப்பிடித்தது, அவரைப் பின்பற்ற வேண்டும்.

85. புத்தபெருமான் பரிநிர்வாணத்தைத் தமது அனுபவ மூலமே பெற்றுக்கொண்டார்.

86. பௌத்த தர்மத்தை அறியாது, புத்த சமயத்தின் குறை பாடுகளைத் தேடச் செல்பவர் ஒருவர் அனுபவமூலமாக தெளிவாக விளக்கத்தைப் பெற்ற ஒன்றினை, அனுபவப்படாமல் அதில் தெளிவாக விளக்கம் பெறுமல் கூறுவதைப் போன்றதாகும்.

87. சமாதானமும், நீதியும் கொண்ட ஓர் அரசியல் முறை எம்மிடையே தோன்ற வேண்டுமெனில், எமது மக்கள் மன ஆசைகளை அகற்றுவதற்கு உத்தமரான புத்தபிரான் வழங்கியருளிய போதனைகளில் ஈடுபடல் வேண்டும்.

88. புத்தபெருமானின் பௌத்த தருமம், காரண காரீய தருமமாகும். அவர் போதித்த ஒவ்வொரு தர்மத்துக்கும் ஒரு காரணம் உண்டு. ஒரு நீதியுண்டு; ஒரு சத்தியம் உண்டு.

89. உலக நிலையாமையைப் போலவே உலக மக்களின் நிலையாமையும், உலக மக்களின் நிலையைமையைப் போலவே உலக இயற்கையின் நிலையாமையும் அமைந்துள்ளது என்பது "அனிச்சங்" - துனித்தியம் என்னும் கருத்தாழம் கொண்ட ஒரே ஒரு சொல்லினுல் புலப்படுகிறது. இதனைப் போதித்தருளிய புத்தபிரான் 'அனித்தியம்' என வெறுமனே கூறவில்லை. ஆறு வருடங்களாக விண்ணும் மண்ணும் மோதுவது போன்ற கடுந்தவம் செய்து பெற்ற ஞானத்தினுலும் அனுபவத்தினுலும் அவர் உண்மையையே போதித்தருளினுர்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Sponsored by: JANET HOU AH CHING

90. புத்தபெருமானின், தருமத்தில் உள்ளடக்கியுள்ள நுணுக்கமான தத்துவங்கள் பற்றிய அறிவொளி மேற்கத்திய விஞ்ஞானிகளின் மனத்துள் ஏற்றப்படுமாயின், அதனுல் புதிய விஞ்ஞானம் மேலும் விருத்தியடையும் என்பதற்குச் சந்தேகமே இல்லை.

91. புனித நிப்பாணம் சொல்லை மட்டுமன்றி, அது மனத்தையும் ஒருமைப்படுத்திக் கொள்வதால் அது எய்தப் பெறப்பட வேண்டியதொன்ருகும்.

92. சுகமும், துக்கமும் மனதிலே தோன்றி அழிவுறுவன.

93. உலகம் ஒரே மாதிரியான துக்கத்தினுலோ, சுகத்தினுலோ நன்மையினுலோ அல்லது தீமையினுலோ நிறைந்த தொன்றல்ல.

94. ஒருவரின் செயல்கள் அல்லது எண்ணங்களுக்கேற்ப உலகம் அவருக்கு துக்கமயமாகத் தோன்றுகிறது. மற்ருெருவருக்கு அது மகிழ்ச்சிமிக்க இடமாக விளங்குகின்றது. வேறு ஒருவருக்கு பொருமை மிக்க பழிவாங்குதல் இடமாகத் தெரிகிறது.

95. பௌத்த மார்க்கம் குணநலன்களை விருத்தி செய்யும் மார்க்கமாகும். அதன் கருத்துக்கள், செல்வந்தர்களைத் தரும பாதையில் நடாத்தி, எமது சூழலில் உள்ள செல்வத்தைச் சேகரிக்கும் சமூகத்தில் இருந்து பிரித்து, புதிய சமுதாய நிலைக்கு அவர்களைக் கொண்டு செல்லும் ஆசைக்கு அவர்களை வழி நடத்தாது, தர்ம புத்தியை வளர்ப்பதற்குரிய பாதையில் இட்டுச் செல்லும்.

96. பௌத்த தரும மக்களை நற்பண்புள்ளவர்களாக்குவதற்குரிய உபாயம், அவர்களின் சூழலை மாற்றிய பின்னர் இடம்பெறுவது அன்றி, சூழல் எத்தகைய தாயினும், அவர்களை நற்பண்புள்ள வர்களாக்கி, அதன் மூலம் சூழலை மாற்றியமைப்பதன் மூலம் இடம்பெறுதல் வேண்டும்.

97. பௌத்த தருமத்தை அறிந்தவர்களுக்கு உயர்ந்த சிந்தனைவாதிகளுக்கும் பௌத்தவாதிகளுக்கும் இடைப்பட்ட வேற்றுமை மிகவும் சிறியதாகும்.

98. சிறந்த முறையில், பண்பு பெற்றவரின் ஆசைகள் அகலுவதனுலே ஆழமான தருமக் கருத்துக்களைப் புரிந்துகொள்ள வழி பிறக்கும்.



Sponsored by: JANET HOU AH CHING

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

99. உலக ஞானிகள் இடையே புத்தர் பெருமான், அதி உயர்ந்த ஸ்தானத்தைப் பெற்றுள்ளார். அவருக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை.

100. புத்த தருமத்தின் பெருமை உலகெங்கும் வியாபித்துள்ளது.

101. களங்கம் இல்லாத ஒரு வாழ்க்கையை வாழ்ந்த புத்தபிரான் அறிவுரைகளள் தற்காலத்தில் விஞ்ஞான ரீதியாக தகர்த்தெறியக் கூடியவை அல்ல.

102. புத்தர் பெருமான் பல தடவைகளில் தமது சீடர்களுக்குப் போதித்த தருமம் யாதெனில், ஒருவர் தருமத்தைக் கடைப்பிடித்தால், அதுவே புத்தருக்குச் செய்யும் உத்தம பூசையாகின்றது.

103. புத்தர் பெருமான் போதிதத்தருளிய உயர்ந்த அரிய அஷ்டாங்க மார்க்கங்களுக்கேற்றபடி எல்லோரும் நீதியின் படி வாழக்கூடிய முறையில் அரசாட்சி செய்ய வேண்டுமென்பதே எனது நோக்கமாகும்.

104. ஒரு நாட்டு மக்களை நல்வழிப்படுத்தும் பொருட்டு, சமயச் சூழல் ஒன்று கட்டாயம் தேவைப்படும் என்ற உணர்வு பௌத்த சமயத்தில் மட்டுமல்ல, வேறு எந்த சமயங்களிலும் காணக்கூடிய அடிப்படைத் தத்துவமாகும்.

105. புத்தர்பிரான் தருமத்தைப் போல், உத்தமமான ஒரு சிரேஷ்ட தருமத்தை நான் கேட்டதும் இல்லை, வாசித்ததுமில்லை.

106. உலகின் சிறந்த ஒருமைப்பாட்டையும் மனித சுதந்திரத்தையும், பற்றிய தருமங்களை புத்தபிரானே போதித்துள்ளார்.

107. நான் மதிக்கும் முக்கியமான உத்தமர் புத்தர் பெருமானே.

108. ஒரு நாட்டை ஆளும்போது, பௌத்த தருமத்திற் கூறப் பட்டுள்ள பஞ்சசீலத்தின் அடிப்படையில் ஆட்சி செய்யவேண்டும்.

109. 2,500 ஆண்டுகளுக்கு மேலாக பௌத்த தருமத்தின்படியும், பௌத்த கலாசார பண்புகளுக்கு அமையவும் வாழ்ந்து பழகிய இந்த நாட்டில் , இரத்தம், சிந்தாது, தார்மீக அரசியலொன்றைக் கட்டி எழுப்பலாம் என்பது எனது நம்பிக்கையாகும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Sponsored by: JANET HOU AH CHING

110. இலங்கையின் அரசியல் அதிகாரம், மாக்ஸ்வாதிகளிடம் போனல், புத்த தருமம் போன்ற ஏனைய எல்லா சமயங்களும் அழிந்து, இவ்வுலகமும், மறு உலகமும் கலாசாரமும் பண்பும் இல்லாத ஓர் இழிவான ஆட்சிமுறையொன்று தோன்றுவது நிச்சயம்.

111. இலங்கையில் உயரிய பௌத்த அரசாங்கம் ஒன்றை நிறுவுவதே எனது ஒரே நோக்கம்.

112. நான் கற்ற பௌத்த தருமத்தை எனது வாழ்க்கையை நிறைவு செய்துகொள்வதற்குரிய வழிகாட்டியாக அமைத்துக் கொள்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sponsored by: JANET HOU AH CHING

# வீரச் சிந்தனைகள்

## எட்டாம் அத்தியாயம்

1. பிரபுக்களினதும், செல்வந்தர்களினதும் அதிகாரத்தைத் தகர்த்து, சுரண்டலை ஒழித்த பொதுமக்களின் உதவியுடன் புதுச் சமுதாயம் ஒன்றை உருவாக்குவதே எனது நோக்கமாகும்.

2. கட்சியின் கொள்கைகளைப் பின்பற்ருத எவரும் எமக்குத் தேவையில்லை.

3. இதுகாலவரை பொதுமக்களை அடிமையாக்கிக் கொண்டிருந்த பிரதானிகளின், பணக்காரரின் அதிகாரம் போன்ற இணைப்புக்களைத் தகர்த்தெறிந்து, இந்நாட்டில் என்றும் இராத முறையில் சௌபாக்கிய யுகம் ஒன்றைத் தோற்றுவிப்பதற்கு நாம் செயல்படுவோம்.

4. 1942ஆம் ஆண்டில் வெளிநாட்டு ஆட்சியாளருடன் நாம் போராடியது, ஒளிந்து பின்னுல் இருந்து கொண்டல்ல; பொதுமக்களின் மேடைகளிலிருந்து கொண்டேயாகும்.

5. எத்தகைய மிரட்டல், புரட்டல் எதிர்ப்படினும் பொதுமக்களின் விமோசனத்துக்காக நான் ஆரம்பித்த வேலைத்திட்டங்களைக் கைவிடமாட்டேன்.

6. எந்த நேரத்திலும் பொதுமக்களிடையே செல்ல நான் பயப்பட மாட்டேன்.

7. எனது போராட்டம் போசாக்குக் குறைவால் வாடும் மக்களின் உரிமைகளைப் பாதுகாத்துக் கொடுப்பதற்காகும்.

8. ஒரு நாட்டின் மக்களுக்கு நலம்புரிவதற்கு முதலில் ஆட்சியாளர் தார்மீகமுடையவர்களாகத் திகழவேண்டும். அவர்கள் அதார்மீகமுடையவர்களானுல் நாடும் மக்களும் அழிந்து போவதைத் தடுக்க முடியாது.

9. நான் பொருளைப் பாதுகாக்க ஆயத்தம் இல்லை. எனது ஒரே குறிக்கோள் துன்பப்படும் மக்களுக்குச் சேவை செய்வதாகும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org
Sponsored by: JANET HOU AH CHING

10. பிரபுத்துவ முறைக்கும் (நிந்தகம்) தோட்ட அதிகாரத்துக்கும் இடைப்பட்டிருந்த கிராமிய மக்களின் துன்பங்களைப் பற்றிய சிறந்த அறிவு, எனக்கு இன்றுபோல் அன்றும் இருந்தது.

11. ஊழல்களுக்கும், உறவினர் உபசரிப்புக்கும், குடிவெறிக்கும் எனது தலைமையின்கீழ் இடம் அளிக்க மாட்டேன்.

12. மூன்றில் இரண்டு வாக்குப்பலமின்றி 1977 மே மாதம் 22ஆம் திகதியின் பின்னரும் அதிகாரத்தில் இருப்பதற்கு இவ்வரசாங்கம் முயற்சியெடுத்தால் இறைமையின் உரிமையாளர்களான பொதுமக்களுக்கு இந்த அரசாங்கத்தை இழுத்து வெளியிற் தள்ளுவதற்கும் அதிகாரம் இருக்கின்றது.

13. எமக்கு எத்தகைய தடைகள் இட்டாலும், கொடூரங்களைச் செய்தாலும், அஹிம்சையாக நாம் இப்பயணத்தை வெற்றி கிட்டும் வரை செல்வோம்.

14. நாம் பொருளுக்கோ, அதிகாரத்துக்கோ, பெயருக்கோ மதிப்பளிக்க மாட்டோம்.

15. 1956இல் இறந்துவிட்டதென காலஞ்சென்ற பண்டாரநாயக்கா அவர்கள் கூறிய ஐக்கிய தேசியக் கட்சியைக் குழியிலிருந்து கரையேற்றி அதற்கு உயிரூட்டியவன் நானே.

16. மக்களின் கல்லடிகளையும் பூச்செண்டுகளையும் ஒரே விதத்தில் கௌரவமாக ஏற்பதற்கு நாம் ஆயத்தமாய் இருத்தல் வேண்டும்.

17. 1956ல் தோல்வியடைந்து நான் வீடு செல்லவில்லை. வழக்கம் போல் ஒவ்வொருநாளும் சிறிகொத்தாவுக்கு சென்று அடுத்த வெற்றிக்காக ஆயத்தமானேன்.

18. ஐ.தே.கட்சி முன்னேறுவதைத் தடைசெய்ய பலம் பெற்றவர் இவ்வுலகில் இல்லை.

19. கட்சியில் இருக்கும் வயது குறைந்தவர்களும், புதுமுகங்களும், பிழை செய்வாராயின், அவர்களுக்குப்பெரும் தண்டனை வழங்கியாவது அவர்களைத் திருத்த வேண்டும்.

20. சிங்கள மொழி அரசகரும் மொழியாக வேண்டுமென்று முதலில் பிரேரித்தவன் நானே.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org
Sponsored by: JANET HOU AH CHING

21. எமக்குத் தேவையாயுள்ள ஒரே புரட்சி, பொதுத்தேர்தல் மூலம் அரசாங்கத்தைத் தேர்ந்தெடுக்கும் புரட்சியாகும்.

22. இலங்கை மக்களின் அடிப்படை உரிமைகளான எழுத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் போன்றவற்றைப் பாதுகாத்துக் கொள்வதற்காக உயிர்த்தியாகம் புரிதல் எதிர்கால பரம்பரையினருக்குச் செய்யும் உயர்ந்த சேவை ஆகும்.

23. தேர்தல் நடத்தாமல் தொடர்ந்தும் அதிகாரத்தில் இருப்பதற்கு எந்த ஓர் அரசாங்கமாவது எத்தனிக்குமாயின், அந்த அரசாங்கத்தைப் புரட்சி மூலம் கவிழ்க்கும் உரிமை மக்களுக்குண்டு.

24. எந்த ஓர் அதிகாரம் பொருந்தியவனுக்கும் 1977 மே 22ஆம் திகதியின் பின் கூட்டு அரசாங்கத்தின் காலத்தை நீட்டுவதற்ககு நாம் இடமளிக்க மாட்டோம்.

25. பிறந்த ஒவ்வொருவரும் சுதந்திரமாக வாழும் உரிமையும், சுதந்திர அதிகாரமும் பிறப்பிலேயே பெற்றுள்ளார்கள்.

26. நாட்டினதும், மக்களினதும் வளர்ச்சிக்காக எனது கருத்துக்களை, பகிரங்கமாகவும், உண்மையாகவும் கூறுவது சனநாயக உரிமையென நான் கருதுகிறேன்.

27. எமது அபிவிருத்திப் பாதைக்கு இடைஞ்சல் விளைவிக்க வல்லவர் ஒருவர் இப்புவியின் மேல் தோன்றமாட்டார்.

28. ஒரு தேசம் முன்னேறிச் செல்லும் பயணத்துக்குக் கட்டுப்பாடு விதிக்கக்கூடிய ஒருவர் உலகில் இல்லை.

29. நான் கண்டி செல்லும் பயணத்தை ஆரம்பித்தது திரும்பியும் வீடு செல்லும் நோக்கத்துடன் அல்ல. மனித உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கத்துடனுகும்.

30. நான் ஒருநாளும் எனது தலைவர்களைச் சந்தேகிக்கவேயில்லை.நான் சகல தலைவர்களுக்கும் ஒரே மாதிரிச் சேவை செய்ததுடன், எப்பொழுதும் உண்மையாகவும், நேர்மையாகவும், நீதியாகவும் அச்சேவையைச் செய்தேன்.

31. நண்பர்களையும் உறவினர்களையும் முன்னேற்றுவதற்காக மாத்திரம் நான் பிரதமராக எதிர்பார்க்க மாட்டேன்.

32. நான் வாழும் வரையில் நாட்டுக்கும் மக்களுக்கும் சேவை செய்வது எனது நோக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
Sponsored by: JANET HOU AH CHING

33. 1977ல் பொதுத்தேர்தல் ஒன்றை நடத்தாவிடின் இறப்பதற்கோ, அல்லது சிறை செல்வதற்கோ ஆயத்தமாக வேண்டும்.

34. சுகததாச செய்தாலும், பிரேமதாச செய்தாலும், ஈரிய கொல்லே செய்தாலும் ஜயவர்த்தன செய்தாலும், குற்றம் குற்றமே.

35. அரசாங்கத்துக்கு எவ்வளவு ஆதரவு அளித்தாலும், அரசாங்கத்தின் சகல பிழைகளேயும் பற்றி மக்களுக்கு எடுத்துக் கூருமல் இருக்க முடியாது.

36. எமது கருத்துக்களேப் பயமின்றி வெளியிட முடியாவிடின் பாராளுமன்ற அங்கத்தவர் என்ற முறையில் நாம் தேசிய பேரவையில் இருக்கத் தேவையில்லே.

37. மக்களுக்கு வாக்குரிமையைப் பெற்றுக் கொடுப்பதற்கு போராட்டம் நடத்திய நாம் அதை இதுவரை பாதுகாத்துக் கொடுத்தது போன்று, மக்களிடமிருந்து அதை அபகரிக்க எத்தனிக்கும் எந்தச் சக்தியுடனும் போராடவும் ஆயத்தமாக இருக்கிரேம்.

38. தேசிய அபிவிருத்தியின் பலனே குறிப்பிட்ட சிலருக்கின்றி. சகல மக்களிடையேயும் பகிர்ந்தளிப்பது எனது கடமையாகும்.

39. நாட்டின் பிரதமர் பதவியை விடச் சிறந்தது ஒழுக்கப் பண்புடன் வாழ்வதாகும்.

40. நீதிக்கு விரோதமாக மக்கள் உரிமைகளேஅழிக்க எத்தனிக்கும் எந்த ஒரு சக்தியுடனுயினும் அஹிம்சை வழியிற் போராடுவதற்கு நாம் ஆயத்தமாக வேண்டும்.

41. டீ. எஸ். சேனநாயக்கா அவர்கள் தேசிய வீரர்களுள் ஒரு சிறந்த வீரர் ஆவார்.

42. பணக்காரர்களினதும், தோட்டச் சொந்தக்காரர்களினதும் உரிமைகளேப் பாதுகாக்க நான் ஆயத்தம் இல்லே.

43. தம்மை அதிகாரத்தில் அமர்த்திய வாக்காளர்களுக்கு அவதூறு ஏற்படும் வகையில் வேலே செய்வது இனத்துக்கே செய்யும் அவமானமாகும்.

44. நாட்டை ஆளும் பிரதமர் உட்பட ஏனேய அமைச்சர்கள் எதையாவது ஒன்றைக் கூறி தவறிலிருந்து தப்புவதற்கு இடமளிக்கக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
Sponsored by: JANET HOU AH CHING

45. எந்த ஒரு பலவானுயிருந்தாலும், மக்களின் உரிமைகளே அபகரிக்க எத்தனிக்கும்போது நான் மௌனம் சாதிக்க மாட்டேன்.

46. அரசாங்க அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொண்டு பிரதமராகி குடும்ப அதிகாரம் அல்லது நண்பர்களேக் கவனித்தல் எனது நோக்கம் அல்ல.

47. நாம் அன்றும் இன்றும் நம்பியிருப்பது குண்டை அல்ல; வாக்குப் பலத்தையே.

48. புரட்சி மூலம் அதிகாரத்துக்கு வரும் ஆட்சியாளர்களுக்கும், ஸ்தாபனங்களுக்கும் பொதுமக்களுக்குகந்த ஆட்சி முறையைகக் கொண்டு செல்வது கடினமாகும்.

49. வாக்குகளின் மூலம் ஒரு அரசாங்கத்தைத் தேர்ந்தெடுக்கும் மக்கள் உரிமையை, பயங்கரவாதத்திஞல் அழிப்பதற்கு நாம் இடமளிக்க மாட்டோம்.

50. நான் போராடுவது பணக்காரர்களேப் பாதுகாப்பதற்கல்ல, பொதுமக்கள் உரிமையைப் பாதுகாப்பதற்காகும்.

51. முதலாளித்துவ இயக்கம், சொத்துடைமையாளர்கள் உட்பட சில குடும்பங்களின்அங்கத்தவர்களுக்கு, தமது விருப்பப்படி கட்சியை அடிமைப்படுத்த நான் இடமளிக்க மாட்டேன்.

52. சென்ற காலத்தில் வன்செயல்கள் மூலமும், பயமுறுத்தல்களிஞலும், முறையற்ற செயல்களிஞலும் எம்மைப் பயமுறுத்த முடியாது போயிற்று, எதிர்காலத்திலும் எம்மைப் பயமுறுத்த முடியாது.

53. சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், இந்நாட்டில் பொதுமக்களின் கருத்தை நிறைவேற்ற புரட்சியை நான் ஆரம்பித்துள்ளேன்.

54. இந்நாட்டில் பொதுமக்களுடைய இன்னல்களுக்காக நாம் மறியலுக்கு மட்டுமல்ல, தூக்குமரத்துக்குப் போகவும் ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

55. ஐ.தே.க. பலமுறை தோல்வியடைந்திருந்த போதிலும், மக்களிடமுள்ள அசையாத நம்பிக்கையிஞலேயே, கட்சிக் கொள்கைகளே சமுதாயத்துக்கு உகந்த முறையில் மாற்றி யமைத்து மக்களிடம் செல்வோம். அதற்குத் தயங்க மாட்டோம்.



Sponsored by: JANET HOU AH CHING
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

56. நியாயமற்ற முறையில் நடந்துகொள்ளும் எந்த அரசையும் கவிழ்ப்பதற்கு நாம் உறுதியுடன் செயல்பட வேண்டும்.

57. எவ்வளவு அன்புடன் கட்சிக்காக தம்மை அர்ப்பணித்து வேலை செய்தாலும் இழிய செயல்களில் ஈடுபடின் அவர்களுக்கு ஒரு மன்னிப்பும் கிடையாது.

58. எனது தலைமையில் உருவாக்கப்படும் அரசாங்கத்தின் அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும், பாராளுமன்றத்தின் கௌரவத்தைப் பாதிக்கும் விதத்தில் நடந்துகொண்டால், அவர்களை அப்பதவியிலிருந்தும் கட்சியிலிருந்தும் அகற்றுவதற்கு நான் ஒருபோதும் பின் நிற்க மாட்டேன்.

59. எவ்வளவு அதிகாரமோ, கீர்த்தியோ உள்ள ஒருவனுக்கும் உள்ளது ஒரே வாக்காகும். அதன்மூலம் எத்தகைய பலம் வாய்ந்த அரசையும் தோல்வியுறச் செய்யலாம்.

60. எமது அரசின் கீழ் பயங்கரவாதிகளுக்குக்கூட கூட்டம் நடத்தும் சுதந்திரமும் அரசை விமர்சிக்கும் சுதந்திரமும் வழங்குகிறோம். எனினும், ஆயுதம் தாங்கிய கைகலப்பால் மக்கள் இறைமையை அழிப்பதற்கு எவ்வகையிலும் இடமளிக்க மாட்டேன்.

61. குடிகாரர்களுடன் சேர்ந்து அரசை நிறுவுவதற்கு நான் ஒருபோதும் ஆயத்தம் இல்லை.

62. ஏதேனுமொரு சமூகத்தில் சுரண்டல் வேலைத்திட்டம் இருப்பின் அரசாங்கம் அதை மாற்றியமைக்காது விடுவது அந்நாட்டை அழிப்பதற்கு இடமளிப்பதாகும்.

63 இலங்கையின் பிரதமர் பதவிக்கு தேர்ந்தெடுக்கபடுபவர் ஒரு குலத்துக்கோ, இனத்துக்கோ, ஒரு கட்சிக்கோ மாத்திரமின்றி, நாட்டிலும் சகல மக்களுக்கும் தலைவர் ஆவார்.

64. பொதுமக்கள் கருத்துக்கு நாம் யாவரும் பயப்பட வேண்டும்.

65. எமது போராட்டம் இரத்தம் சிந்துவதைத் தவிர்த்து சனநாயகப் புரட்சி மூலம் புதிய சமுதாயத்தை உருவாக்குவதாயிருத்தல் வேண்டும்.

66. ஒரு நாட்டின் பொதுத்தேர்தலின் பின் சகல மக்களும் வாத பேதங்களை மறந்து தேசிய அபிவிருத்திக்காக ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும்.



Sponsored by: JANET HOU AH CHING
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

67. எனது அரசாங்கத்தின் கீழ் அமைக்கவிருக்கும் அமைச்சர் குழுவில் ஒரு அமைச்சராயினும் பொது இடங்களில் மதுபானம் அருந்துதல் போன்ற கீழ்த்தரமான செயல்களைச் செய்வாராயின் அவரை அப்பதவியிலிருந்து நீக்குவதற்கு நான் பின் நிற்க மாட்டேன்.

68. மக்கள் வாக்குகளால் அதிகாரத்திலமர்ந்த அரசை வன்செயல்களால் கவிழ்ப்பதற்கு முயலும் எந்தக் கூட்டத்துக்கும் பொதுமக்களிடமிருந்து தகுந்த தண்டனை கிடைக்கும்.

69. அதிகாரத்துக்கு வரும் அரசாங்கம் எதுவாயினும், எதிர்க்கட்சியின் கருத்துக்களைச் சுதந்திரமாக வெளியிடும் பூரண சுதந்திரத்தை அளித்தல் வேண்டும்.

70. நாட்டின் தலைமைப் பதவியை வகிப்பதற்குரிய தகுதி, அவரின் வயது அல்ல, உயர்ந்த கருத்துக்களும் வேலைத்திறனுமாகும்.

71. இன்று உலகின் அதிக நாடுகள், பலவிதமான மாற்றங்களினுல் முன்னேறியுள்ளமை இரத்தம் சிந்தும் புரட்சிகளினுல் அல்ல.

72. நாம் அதிகாரத்துக்கு வந்து சரியாக ஆறு வருடங்கள் பூர்த்தியானவுடன் சிறிது நேரமாவது அதிகாரத்தில் இருக்காமல் பொதுத்தேர்தலை நடாத்துவோம்.

73. எனது தலைமைத்துவம் உள்ள அரசாங்கத்தில் அமைச்சரோ, பிரதிநிதியோ, கட்சி அங்கத்தவரோ, பொதுத்தேர்தல் நடத்துவதை நீடிப்பதற்கு ஆலோசனை கூறினுல், அவர் தேசத்துரோகி எனக் கருதப்பட்டு வகிக்கும் பதவியிலிருந்தும் கட்சியிலிருந்தும் நீக்கப்படுவார்.

74. நாட்டில் முறையான ஆட்சியை நடாத்துவதாயின், அனுபவமும் திறமையுமுள்ள ஆட்சியாளர் குழுவொன்றை மக்கள் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

75. தோல்வியடைந்த அரசினுல் மக்களின் நலன் கருதி அத்திவாரமிட்டு செயற்படுத்திய வேலைத்திட்டங்களை மாற்றியமைப்பது புத்தியுள்ள ஆட்சியாளர்களின் பழக்கம் அல்ல.

76. சத்தியாக்கிரக இயக்கத்தை தார்மீக முறையில் நடத்துவதாயின் அது எந்த ஒரு நபருக்கோ ஆயுதத்துக்கோ கட்டுப்படுத்தவியலாத புதுமையான சக்தியாகத் திகழும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org
Sponsored by: JANET HOU AH CHING

77. அரசியல்வாதிகளிடமிருக்க வேண்டிய சிறந்த பண்புகள் எவையெனில், லஞ்சம் பெருமை, பண்புடைமை, அஹிம்சை, துர்நடத்தையில் ஈடுபடாமல், தன் அதிகாரத்தால் முறையற்ற பயன் பெருமை என்பனவாகும்.

78. முன்மாதிரியான உண்மையுள்ள, திறமைசாலிகளான தலைவர்கள் ஒரு நாட்டில் இருப்பது அந்நாட்டுக்கு ஆசீர்வாதமாகும்.

79. எனது குறிக்கோள், பிரதமராகி, பணக்கார வர்க்கத்தினரைப் பாதுகாப்பதன்று; வறிய மக்களுடன் கைகோர்த்து நின்று அவர்களுக்கு சேவை செய்வதே ஆகும்.

80. எனது அரசாங்கத்தின் அமைச்சர்களும், உறுப்பினர்களும் இழிசெயல்களிலோ, ஏமாற்றுக் கருமங்களிலோ ஈடுபட முயற்சித்தால், நான் அவர்களைத் தேசியப் பேரவையிலிருந்து வெளியேற்றுவேன்.

81. எனது உயிருள்ள வரை நாட்டை இரண்டு, மூன்றாக பிரிக்க இடமளிக்க மாட்டேன்.

82. இலங்கையின் முன்னேற்றத்துக்காக சமூக, பொருளாதார புரட்சி மூலம் மக்களை நலம் கொள்ளச் செய்தல்.

83. தார்மீக சமுதாயத்தை உருவாக்குவதில் முன்மாதிரியான தலைவர்கள் நமது இனத்துக்கு அவசியம்.

84. நான் இலங்கையின் தலைமைப் பதவிக்கு வந்தால், பிரதமர் பதவி இல்லாது போனாலும் லஞ்ச ஊழலை நிறுத்துவதற்கு கடுமையான நடவடிக்கை எடுப்பேன்.

85. ஒரு நாட்டின் தலைமைத்துவத்தை அளிக்க வேண்டியது கள்வருக்கோ, குடிகாரனுக்கோ லஞ்சம் வாங்குபவனுக்கோ, அல்ல. நாட்டுக்குச் சேவை செய்வதற்குத் தம்மை அர்ப்பணம் செய்யும் தூய்மையான நடத்தையுள்ளவர்களுக்காகும்.



Sponsored by: JANET HOU AH CHING
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர் பிரச்சனை, பொருளாதாரப் பிரச்சனைகள் பற்றிய சிந்தனைகள்

## ஒன்பதாம் அத்தியாயம்

1. நாட்டு அபிவிருத்தியின் தேவைக்கேற்ப வாலிபர்களின் உழைப்பு கிரமமாக இந்நாட்டின் முன்னேற்றத்துக்காகச் சேர்த்துக்கொள்ளப்படல் வேண்டும்.

2. அதிகார வாஞ்சையுள்ள அரசியல், இப்போது வாலிபர்களுக்குக் கசப்பளிக்கின்றது.

3. தேசத்தைக் கரைசேர்க்கும் பணியில் வாலிபர்களை ஒழுங்காகச் சேர்த்துக் கொள்ளாவிடின், கட்டுப்பாடற்ற பரிபாலிக்க முடியாத வாலிபர் கூட்டம் ஏதோ விதத்தில் அரசாங்கத்தின் ஸ்திரத்தன்மைக்குச் சவாலாக இருப்பர்.

4. தேசத்தைக் கரைசேர்க்கும் கைங்கரியத்தில் பங்குகொள்வதற்காக வாலிபர்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும்.

5. இந்நாட்டு வாலிபர்கள் எதிர்காலத்தைப் பற்றி கனவு கண்டுகொண்டு தற்போது வாழ்கிறார்கள்.

6. ஐக்கிய தேசியக் கட்சி எப்பொழுதும் சனநாயகக் கட்டுக் கோப்புக்குள் செயல்படுகின்றது.

7. எமது கட்சியின் புது மனப்பாங்கு அமைய உண்மையான வேலைத்திறனும் தைரியமும், ஒழுக்கமும் உள்ள வாலிபர்களுக்கு நாமும் எப்போதும் கைகொடுக்க ஆயத்தமாக உள்ளோம்.

8. நாட்டின் ஜீவநாடி வாலிபர்களாவர்.

9. புது யுகம் ஒன்றையும், புது சமுதாயத்தையும் உருவாக்குவதற்காக ஐ.தே.க. நடத்தும் தேசியப் போராட்டத்துக்கு வாலிபர்களின் பூரண ஒத்துழைப்பு அவசியம்.



*Sponsored by: JANET HOU AH CHING*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. இன்று எமது கட்சியின் முக்கியமான பிரிவினர் வாலிபர்கள் ஆவர். இன்று நாம் பாராளுமன்ற உறுப்பினர்களாவதற்கு வாய்ப்பளிப்பது, வறியவர்களுடன் தோளோடு தோள் சேர்ந்து நின்று தைரியமுள்ள சமூக சேவைகளுக்குத் தகுந்த சிறந்த வாலிபர்களுக்கேயாகும்.

11. ஐ.தே.கட்சியின் அதிகாரத்தையும் சக்தியையும் கிராமங்கள், பெரிய கிராமங்கள், குக்கிராமங்கள், நகரங்கள் போன்ற இடங்களுக்குக் கொண்டு செல்லும் சக்தி வாய்ந்தவர்கள் வாலிபர்கள் ஆவர்.

12. பணம் சம்பாதிப்பதை விட முன்மாதிரியான மக்களாக ஆகுவதை மதிக்கும் வண்ணம், வாலிபர்களை முன்மாதிரியான மக்களைப்போல் வழி நடத்துவதற்கு சக்தியும் பலமும் உள்ள கல்வியை நாட்டில் பரப்புவதற்கு அரசியல்வாதியால் முடியும்.

13. நாட்டின் அபிவிருத்தியில் பங்குகொள்ள முடியாமல் நிற்கும் இளம் பரம்பரையினருக்கு சுயகௌரவத்துடன் வாழ்வதற்குத் தேவையான ஒரு சூழலை நாம் உருவாக்கியுள்ளோம்.

14. பொதுமக்களின் எண்ணங்களும் கருத்துக்களும் கடினமாக மாறியுள்ளதென்பதை ஐக்கிய தேசியக்கட்சி உணர்ந்து கொள்ளல் வேண்டும். அந்த எண்ணங்களுக்கும் பிரச்சனைகளுக்கும் ஏற்ப கட்சியின் நோக்கங்களையும் இலட்சியங்களையும் மாற்றிக்கொள்ளாது விடின் இக்கட்சி மக்களிடமிருந்து ஒதுங்கிவிட வேண்டும்.

15. சனநாயகத்துக்காகவும் - சுதந்திரத்துக்காகவும் தம்மை அர்ப்பணிப்பதற்கு எமது இளம் பரம்பரையினர் மேலும் மேலும் முயற்சி எடுத்தல் வேண்டும்.

16. தம்மைத் திருப்திப்படுத்தும் தொழிலில் ஈடுபட வசதிகள் கிடைக்காதவிடத்து இளம்பரம்பரையினரிடையே விரக்தி ஏற்படும்.

17. குடியேற்ற நாட்டு ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து நாம் வெற்றிகொண்ட சுதந்திரத்தைக் காப்பாற்றும் பணியில் இளம் பரம்பரையினரையும் சேர்த்துக்கொள்வது எனது நோக்கமாகும்.

18. தமது நாட்டினதும், மக்களினதும் முன்னேற்றத்திற்காக சேவை செய்ய இளம் பரம்பரையினரிடையேயும் விருப்பும், ஆசையும் உண்டு.



Sponsored by: JANET HOU AH CHING
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. இந்நாட்டின் முன்னேற்றத்திற்காக இளம் பரம்பரையினரைச் சேர்த்துக் கொள்வதைப் பேச்சளவில் மாத்திரம் நிறுத்திக்கொள்வது எமது கருத்தல்ல.

20. தொழில் கிடைத்த மாத்திரத்திலோ அல்லது வாழ்வதற்குத் தேவையான பணம் கிடைத்த மாத்திரத்திலோ இளம் பரம்பரையினர் திருப்தியடைய மாட்டார்கள். தாம் செய்யும் தொழிலில் மனத்திருப்தி அடைந்தால் மாத்திரமே அவர்கள் பூரண திருப்தியடைகிறுர்கள்.

21. தேசிய திட்டங்கள் அமைப்பதில் இளம்பரம்பரையினரையும் சேர்த்துக்கொண்டால் எமது நாட்டு இளம்பரம்பரையினர் தாம் செய்யும் வேலைகளினுல் ஆத்ம திருப்தி அடைவார்கள்.

22. இந்நாட்டு இளம்பரம்பரையினருக்கு சனநாயக வாழ்க்கை முறையின் மதிப்பை உணர்த்தி அவர்களை நாட்டுக்கு உசிதமான, நாட்டுக்குப் பயனளிக்கும் பிரசைகளாக்குவது எமது முயற்சியாகும்.

23. இலங்கையின் மாபெரும் சொத்து இந்நாட்டின் இளம் பரம்பரையினர் என்பதை விவாதமின்றி ஏற்றுக்கொள்ள வேண்டும்.

24. எமது எதிர்கால சௌபாக்கியம், அதிர்ஷ்டம், அபிவிருத்தி, முன்னேற்றம் என்பன இளம் பரம்பரையினரிலேயே தங்கியுள்ளன.

25. இலங்கை மக்களின் வாழ்க்கையில் இளம்பரம்பரையினர் ஏற்படுத்தவல்ல தாக்கம் அதிவிசாலமானது.

26. பொருளாதார ரீதியிலும், சமூகரீதியிலும் இந்நாட்டை முன்னேற்றப்பாதையில் இட்டுச்செல்வதில் இளம் பரம்பரையினரின் மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்பு பாரியது என்பதை இளம்பரம்பரையினர் உணர்ந்துகொள்ளல் வேண்டும்.

27. எமது தாய்நாட்டை முன்னேற்றப்பாதையில் இட்டுச்செல்லும் வீரர்களாக ஆகுவதா? இல்லாவிடின் தேசம் படுகுழியில் விழும்வரை உதாசீனமாய்ப் பார்த்திருப்பதா என்று தீர்மானிக்க வேண்டியவர்கள் இளம் பரம்பரையினரே.

28. ஐ.தே. கட்சி ஆரம்பித்த பயிர் விளைச்சல் இயக்கத்தை தொடர்ந்து செயற்படுத்தியிருந்தால், இன்று இந்நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்க வேண்டியிருக்காது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Sponsored by: JANET HOU AH CHING

29. இன்றைக்கு முப்பது அல்லது நாற்பது ஆண்டுகளுக்கு முன் திரு. டீ. எஸ். சேனநாயக்கா அவர்கள் சமர்ப்பித்த காணிச் சீர்திருத்தமசோதாவுக்கேற்ப ஆயிரம் ஏக்கர் கணக்கிலான காடுகளைச் சுத்திகரித்தல், குளங்கள், நீர்ப்பாசனத் திட்டங்கள் போன்றவற்றைத் திருத்தியமைத்தல், பாரிய குடியேற்றத்திட்டங்களை ஆரம்பித்தல் என்பனவற்றைக் கருத்திற் கொண்டு பாக்குமிடத்து, அவர் இந்நாட்டில் ஈன்றெடுக்கப்பட்ட சிறந்த தலைவர் என ஒப்புக்கொள்ள வேண்டி ஏற்படும்.

30. இராசரட்டையின் நீர் பற்ருக்குறையை நீக்கி விவசாயப் பெருங்குடிமக்களுக்கு சௌபாக்கியத்தைப் பெற்றுக் கொடுப்பதற்காக மகாவலித்திட்டத்தை ஆரம்பித்தது தேசியக் கட்சியே.

31. இலங்கையில் உணவு, தொழில் வாய்ப்பு, ஏனைய பொருளாதாரப் பிரச்சினைகள் போன்றவற்றைத் தீர்ப்பதற்காக விவசாயத்தை விருத்தி செய்யும் நோக்குடனேயே நாம் விவசாயப் படையை அமைத்தோம்.

32. வெள்ளையரிடமிருந்து பெற்றுக்கொண்ட நிலங்களை இலங்கையரின் உபயோகத்திற்காக பகிர்ந்தளிக்க வேண்டும் என்ற கொள்கையுடனேயே தற்போதைய அரசாங்கத்தின் காணிச் சட்ட மசோதாவுக்கு நாம் ஆதரவு அளித்தோம்.

33. பொது மனிதனுக்கு வாழ்வதற்கான வசதிகளைச் செய்து, நாட்டை அபிவிருத்தி செய்வது சகல பிரசைகளினதும் கடமையாகும்.

34. ஆண், பெண் இருபாலரும் அதிக அளவிலான முன்னேற்றத்தை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் இலங்கையில் பொருளாதார முறையொன்றை உருவாக்கக் கூடிய விதத்தில் எமது கட்சியின் கொள்கைகளை செயற்படுத்துவதே எமது நோக்கமாகும்.

35. தொழில் வாய்ப்பின்மை உயர்ந்த வாழ்க்கைச் செலவு அத்தியாவசியப் பொருட்களின் பற்ருக்குறை என்னும் பிரச்சனைகளினுல் எழுந்துள்ள பொருளாதார நெருக்கடியி லிருந்து நாட்டைக் காப்பாற்றிக் கொள்வதற்கு நாம் எல்லோரும் முன்னின்று செயற்பட வேண்டியுள்ளோம்.



Sponsored by: JANET HOU AH CHING
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. நாட்டுச் சனத்தொகையின் அரைவாசிக்கும் அதிகமானோர் பட்டினியால் வாடும்பொழுது தேசிய பணத்தை கசுக்கொட்டை, பலாக்கொட்டை போல் எரித்து செலவு செய்யும் போலிச் செலவினங்களை நாம் எதிர்க்கிறோம்.

37. சனநாயக அடிப்படையில் எமக்களிக்கப்பட்ட சட்டமூல அதிகாரத்தால் எமது சமூகப் பொருளாதார சொரூபத்தை மாற்றி அமைக்கத் தீர்மானித்துள்ளோம்.

38. எமது பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு மேலைத்தேயப் பொருளாதார நிபுணர்களின் உதவியை மாத்திரம் நாம் எதிர்பார்க்க மாட்டோம்.

39. பொதுநலவாய நாடுகளின் அங்கத்துவம் பெற்ற அல்லது அங்கத்துவம் பெருத தென் ஆசியா, தென்கிழக்காசியா போன்ற அபிவிருத்தி அடையாத நாடுகளின் வாழ்க்கைத்தரத்தை உயர்மட்டத்திற்கு கொண்டு வருவதற்கும், தொழிலில் அமர்ந்துள்ளவர்களை உயர்மட்டத்தில் நிரந்தரமாக வைப்பதற்கும், இந்நாடுகளின் விவசாயப் பொருளாதார முறைகளை விருத்தி செய்வது அத்தியாவசியமாகும்.

40. நாட்டில் சமூக, பொருளாதாரத் தரத்தை உயர்த்தக்கூடிய கூட்டுறவு இயக்கத்தின் மேல் பூரண நம்பிக்கை வைத்திருக்கிறேன். அவ்வியக்கத்தை நேர்மையும் பரிசுத்தமும் கொண்டதாக ஆக்குவது எனது நோக்கமாகும்.

41. நாம் தன்னிறைவு பெறுவதற்காகச் செய்யக்கூடிய கருமங்கள் உள்ளன. தற்போது பயிர் செய்யப்படாமல் இருக்கும் வெற்று நிலங்களிலும் காடுகளிலும் புதிதாக விவசாயம் செய்வது அவற்றுளொன்ருகும். மற்றது தற்போது விவசாயம் செய்யப்படும் வயல்களில் அறுவடையைப் பெருக்குவதாகும்.

42. உழுதல் மூலம் வயல்களைப் பண்படுத்துதல், நாற்றுநடல், பசளையிடல் போன்ற கருமங்கள் எமது விவசாயத்தின்போது நடைபெறுமாயின் தற்போது நாம் பெறும் அறுவடையை இருமடங்காக்குவது அவ்வளவு கடினமான கருமமல்ல.

43. இலங்கையின் இளைஞர்கள், யுவதிகளின் பாரிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக நாம் சிரமமான முறையொன்றை வகுத்துள்ளோம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org
Sponsored by: JANET HOU AH CHING

44. விரக்தியுடன் வாழும் இளம் பரம்பரையினர்பால், வளர்ந்தோர் களின் கருணை நோக்கு படிதல் வேண்டும்.

45. இளம்பரம்பரையினரின் முக்கியத்துவத்தையும், அவர்களிட முள்ள தேசப்பற்றையும் நாம் உணர்ந்துள்ளோம்.

46. ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகளுக்கேற்ப இந்நாட்டின் வேலைத்திட்டங்களிலும் நிருவாகத்திலும் இளம் பரம்பரையினருக்கு ஒரு விசேட இடம் அளித்துள்ளோம்.

47. சனநாயகம் நடைமுறையில் இருப்பதற்கும் வளர்ச்சி அடைவதற்கும் பொருளாதார அபிவிருத்தி ஓர் அங்கமாக அமையும்.

48. வெளிநாட்டுச் செலாவணியின் பற்றுக்குறை பிரச்சினை எமது பொருளாதாரத்தின் கழுத்தில் கட்டப்பட்டுள்ள ஒரு பாறுங்கல்லாகும்.

49. சனநாயகக் கோட்பாடுகளுக்கிணங்க இந்நாட்டு மக்களுக்கு அரசியல் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கும் சனநாயக அரசியல் முறையொன்றைச் செயல்படுத்தும் நோக்கில் மேற்கூறிய அரசியல் முறையின்கீழ் கிராமிய மட்டத்திலிருந்து மாவட்ட மட்டம் வரையிலான திட்டம் ஒன்றின் மூலம் செயல்படும் அபிவிருத்தித் திட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்கும் நாம் எண்ணியுள்ளோம்.

50. நாம் இம்முறை அறிமுகப்படுத்தவிருக்கும் பொருளாதாரத் திட்டம் நாட்டின் அபிவிருத்தியில் அதிக பயனை அளிக்கும்.

51. அரச நிர்வாகத்திலும், எமது எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களுக்கேற்ப கிராமிய மட்டத்தில் செயற்படவுள்ள சகல நிர்வாகத்துறைகளிலும் திறமையுள்ள வாலிபர்களுக்கு முதலிடம் அளித்தல் வேண்டும்.

52. நன்னெறியிலிருந்து தவறிய சமுதாயத்தில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்ட போதிலும் அதை ஒரு வளர்ச்சி என நான் கருதமாட்டேன்.

53. இலவசக்கல்வி மூலம் கல்வியறிவைப் பெற்றுள்ள சகல வாலிபர்கட்கும் பொறுப்புக்களை ஒப்படைத்து, அவர்களின் உழைப்பைப் பயன்படுத்தி புதுச் சமுதாயமொன்றைத் தோற்று விக்கும் வரை ஒரு நாட்டில் அபிவிருத்தியை ஏற்படுத்த முடியாது.



Sponsored by: JANET HOU AH CHING
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

54. நாட்டில் நடைமுறையிலுள்ள பொருளாதாரத்தன்மை பற்றிய சிறந்த விளக்கத்தை பொதுமக்களுக்கு அளித்து, அவர்களின் விருப்பப்படி ஆட்சி அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வது நேர்மையான அரசியல்வாதிகளின் பொறுப்பாகும்.

55. எமது கொள்கைகள் எவ்வளவு சிறந்ததாயினும், அவற்றைச் செயற்படுத்துவதும் உரிய பலனைப் பெற்றுக்கொள்வதும் இளைஞர்கள் யுவதிகளின் கையிலேயே தங்கியுள்ளது.

56. இன்று வாழும் இளைஞர் - யுவதிகளே வருங்காலத்தில் தேசிய அரசுப் பேரவையையும் வேறு இயக்கங்களையும் நடாத்த வேண்டியுள்ளனர்.

57. தேசத்தைக் கட்டியெழுப்புவதிலும் தேசிய அபிவிருத்தியிலும் இளம் பரம்பரையினரின் கருத்துக்கள், வழிகாட்டல் உட்பட அவர்களின் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்வது எனது நோக்கமாகும்.

58. இலங்கையின் தேசியத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் தொழிலில்லாப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முதலிடம் அளித்தல் வேண்டுமென நாம் கருதுகிறோம்.

59. இலங்கையில் பொருளாதார அமைப்பைப் பலன் தரும் முறையில் மாற்றியமைப்பது எனது அபிலாஷையாகும்.

60. ஆட்சியாளர்களும், உத்தியோகத்தர்களும் நேர்மையாக செயற்பட்டால் வாழ்க்கைச் செலவைக் குறைப்பது கடினமான கருமமல்ல.

61. ஒரு நாட்டின் பொருளாதார அல்லது சமூகப் பிரச்சினைக்கு உரிய முறையில் தீர்வு காண்பதற்கு பலம்வாய்ந்த ஓர் அரசாங்கம் அவசியமாகும்.

62. எமது இளைஞர் - யுவதிகள் எப்பொழுதும் முற்போக்குக் கருத்துக்களுக்கேற்ப சிந்திக்கின்றனர்.

63. ஊழல், கபடம், குடி என்பனவற்றை நீக்கி இலங்கையில் ஒரு தார்மீக சமுதாயத்தை உருவாக்குவதற்காக இளம் பரம்பரையினர் முன்னோடியாகத் திகழ வேண்டும்.

64. ஒரு நாட்டின் சனத்தொகை அதிகரிப்பு, அரசாங்கத்தினால் எதிர்பார்க்கப்பட வேண்டிய முக்கிய பிரச்னையாகும்.

65. மக்களைக் கஷ்டமின்றி வாழ வைப்பது ஓர் அரசாங்கத்தின் முக்கிய கடமையாகும்.



Sponsored by: JANET HOU AH CHING
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

66. அத்தியாவசிய உணவுப்பொருள்களின் விலைகளைக் குறைக்க வேண்டுமெனில் போட்டி மனப்பான்மையுள்ள வியாபாரமுறை இருத்தல் வேண்டும்.

67. சுதந்திர வர்த்தக வலயமொன்றை ஆரம்பிப்பதனால் புதுத்தொழிலில்கள் ஆரம்பிக்கப்படுவதுடன், தொழிலின்மையைப் போக்குவதற்கும் ஏதுவாயிருக்கும்.

68. சனநாயக ஸ்தாபனங்களும், வாழ்க்கைமுறையும் ஒரே விதத்தில் இளம்பரம்பரையினரின் இதயத்தில் குடிகொண்டுள்ளன. அவற்றின் பிரதிபலனாக அவர்கள் எண்ணுவது தொழிலின்மை, வாழ்க்கைச் செலவுப் பிரச்சினை, விரக்தி மனப்பான்மை என்பனவாகும்.

69. சனநாயகம் நிலைப்பதற்கும், வளர்ச்சியடைவதற்கும் பொருளாதார அபிவிருத்தி அத்தியாவசியமான அங்கமாகும். தீர்மானித்து முடிவு செய்யப்பட்டபடி அரசாங்கம் எடுக்கும் பிரயதத்தனங்களில் மாத்திரமே, அது எய்தப் பெறலாம்.

UNIVERSITY OF PERADENIYA
24-2-1996
LIBRARY



Sponsored by: JANET HOU AH CHING
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய தேசியக் கட்சியைப் பற்றிய சிந்தனைகள்

## பத்தாம் அத்தியாயம்

1. நான் அறிந்தவரையில் ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொண்ட முக்கிய நடவடிக்கை எதுவெனில், 1956ஆம் ஆண்டு எமது கட்சியை அதிகாரத்திலிருந்து அகற்றுவதற்காகப் பொது மக்கள் காட்டிய விருப்பை ஏற்று எதிர்க்கட்சி என்ற முறையில் கருமமாற்றியதாகும்.

2. பணக்காரர்களைக் கொழுக்க வைப்பதும், சிறிய வியாபாரிகளை இல்லாமற் செய்வதும் எமது கட்சியின் நோக்கமல்ல.

3. நான் பதவிக்கு வந்தால் இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள முதலாளித்துவ முறையை ஒழித்து மக்களின் கருத்திற்கேற்ற அரசியலமைப்பு முறையொன்றைத் தோற்றுவித்து, நவ ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகளுக்கிணங்க நாட்டை ஆட்சி செய்வேன்.

4. எமது வேலைத்திட்டங்களைச் செயற்படுத்துவதில் பங்குதாரர் என்ற முறையில் குறிப்பாக இளம்பரம்பரையினரின் ஒத்துழைப்பை ஐக்கிய தேசீயக்கட்சி எதிர்பார்க்கின்றது.

5. ஐக்கிய தேசியக்கட்சி அஹிம்சையும், கருணையையும் முன்வைத்துப் பொதுமக்களின் வாக்குகளின் மூலம் புரட்சியை ஏற்படுத்தும் ஒரு கட்சியாகும்.

6. நவசோஷலிச சமுதாயமொன்றை உருவாக்குவதின் மூலம் நவயுகம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு ஓர் ஆயுதமாக எனது தலைமையின் கீழ் ஐக்கிய தேசீயக்கட்சியைப் பயன்படுத்தியுள்ளேன்.

7. எமது கட்சியில் பிற்போக்குவாதிகளோ செல்வந்தர்களோ இல்லை.

8. இன்று சாதாரண மனிதர்களுக்காக ஐக்கிய தேசீயக் கட்சியின் கதவுகள் திறந்துள்ளன.



Sponsored by: JANET HOU AH CHING
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. வேலை செய்யக்கூடிய புனிதமான இயந்திரமாக நாம் ஐக்கிய தேசீயக் கட்சியை அமைத்துள்ளோம்.

10. இளம் பரம்பரையினரில் வேலைத்திறன் உள்ளவர்கட்கு ஐக்கிய தேசியக் கட்சியின் உச்ச ஸ்தானத்தை அடைவதற்ககுதத் தேவையயான பாதையை நாம் திறந்து விட்டுள்ளோம்.

11. சனநாயக சோஷலிசத்துக்கேற்ப செயற்படுகின்ற ஐக்கிய தேசியக் கட்சி, மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், இறைமையையும், சுதந்திரத்தையும் உறுதிப்படுத்துவதற்கும், மக்களின் இறைமையைத் திரும்பவும் பெற்றுக் கொடுப்பதற்கும் தன்னை அர்ப்பணித்துள்ளது.

12. எனது தலைமையின்கீழ் ஐக்கிய தேசியக்கட்சி இயங்கும் வரை எந்த ஒரு சக்திக்கும் பொதுமக்களின் இறைமையை அழிப்பதற்கும் இடமளிக்க மாட்டேன். அவ்வாறு செய்வதற்கு முயற்சித்தால் உயிர்த்தியாகம் மூலமாவது அதைப் பாதுகாப்பேன்.

13. சகல அரசியற் கட்சிக்கும் காலத்திற்கேற்ற முறையில் அவற்றின் கொள்கைகளை மாற்றிக்கொள்ள வேண்டும். அதற்கேற்ப ஐக்கிய தேசியக்கட்சியின் கொள்கைகளில் மாற்றத்தை ஏற்படுத்தி சோஷலிச வடிவத்தைச் சேர்த்துள்ளேன்.

14. நாங்கள் இன்று குடும்பங்களின் பணபலத்தையொ செல்வாக்கையோ ஒரு சதத்துக்கேனும் மதிக்க மாட்டோம்.

15. ஐக்கிய தேசியக்கட்சி ஓர் இனத்துக்கு மாத்திரம் ஆதரவளிக்கும் கட்சியன்று.

16. எமது கட்சிக்கு உதவியளிக்கும், கட்சியின் வேலைகளில் தோளோடு தோள் நின்று உழைக்கும் திறமையும், நேர்மையும் உள்ளவர்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சி ஏணியின் உச்சப்படியை அடைய வழிவகுத்துள்ளது.

17. ஐக்கிய தேசியக் கட்சியின் புதுக்கொள்கைகளுக்கிணங்க குடும்ப அதிகாரத்துக்கோ, பண அதிகாரத்துக்கோ கட்சியில் இடமில்லை. எமது கட்சியில் இரு கரங்களின் பலத்தால் உழைக்கும் உண்மையும், வீரமும் உள்ள துன்புறும் மக்களுக்கே இடமுண்டு.



Sponsored by: JANET HOU AH CHING
Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

18. வறிய மக்களின் ஒரு ரூபாய் சந்தாப் பணத்தில் இயங்கும், அவர்களின் முன்னேற்றத்திற்காக உழைக்கும் இலக்கையிலுள்ள ஒரே அரசியற் கட்சி ஐக்கிய தேசியக் கட்சி.

19. ஐக்கிய தேசியக்கட்சியின் நற்பெயரைக் காப்பதற்கான நற்செயல்களில் ஈடுபடுதல் சகல அங்கத்தினர்களினதும் தலையாய கடமையாகும்.

20. ஐக்கிய தேசியக்கட்சியின் வேலைகளில் இரகசியம் ஏதும் இல்லை. அதற்கேற்ப நாம் கதவுகளை மூடிக்கொண்டு கூட்டங்கள் நடத்துபவர்கள் அல்ல.

21. தற்போது ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொள்ளும் முற்போக்குக் கொள்கை உலகத்தில் எந்த ஒரு நாட்டிலும் செயல்படும் முற்போக்குவாதக் கொள்கைகளுக்கும் இரண்டாம் தரமானதல்ல.

22. எமது கட்சியின் முற்போக்குக் கொள்கைகளை விட மேம்பட்ட கொள்கைகள் உலகத்தில் வேறுநாடுகளில் இருப்பின் அவற்றைப்பற்றி அறிந்து கொள்வதற்கு நாம் எப்போதும் ஆயத்தமாயுள்ளோம்.

23. நாம் பழைய முறைக்கேற்ப கருமமாற்ற ஆயத்தமில்லை. ஐக்கிய தேசியக்கட்சிக்கு அதிகாரம் கிடைத்த பின்னர் மக்களின் எண்ணங்களுக்கேற்ப வேலை செய்வோம்.

24. ஐக்கிய தேசியக்கட்சியின் அடிப்படை நோக்கம், இந்நாட்டில் சனநாயக சோஷலிச முறையை ஏற்படுத்தி நாட்டுக்கும் மக்களுக்கும் சுபீட்சத்தையும், வளமார்ந்த எதிர் காலத்தையும் வழங்குவதாகும்.

25. எமது கட்சியை இயங்கச் செய்வது நிலச் சொந்தக்காரரோ கம்பெனிக்காரரோ அல்ல; ஒரு ரூபாய் செலுத்தும் வறிய சந்தாதாரர்களே.

26. ஐக்கிய தேசியக் கட்சியின் அரசின்கீழ் நிலம் பற்றிய நிருவாகத்தில் முழுமையான புனரமைப்பொன்றை மேற்கொள்வோம்.

27. பொதுமக்களின் பொருளாதாரச் சுதந்திரத்தை உறுதிப் படுத்தும் சோஷலிசத்தை இந்நாட்டில் கட்டியெழுப்புவதே ஐக்கிய தேசியக்கட்சியின் நோக்கமாகும்.

28. எனது வாழ்வும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஒன்றுகும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org
Sponsored by: JANET HOU AH CHING

29. கட்சியின் கொள்கைகளுக்காக எனது ஆயுளில் இருபது வருட காலத்தை நான் அர்ப்பணித்துள்ளேன்.

30. வெற்றி தோல்வி இரண்டுக்கும் நன்கு பழக்கப்பட்ட ஒரு கட்சி இலங்கையில் இருப்பின் அது ஐக்கிய தேசியக் கட்சியே என்பேன்.

31. ஐக்கிய தேசியக் கட்சி மக்களை ஏமாற்றும் கட்சியல்ல.

32. 1972ல் வழி தவறிச் சென்ற வாலிபர்களுக்கு பிரஜைகள் என்ற முறையில் கிடைக்க வேண்டிய சகல உரிமைகளையும் எனது தலைமையில் அமைக்கும் ஐக்கிய தேசியக்கட்சி அரசின்கீழ் பெற்றுக் கொடுப்பேன்.

33. எவ்வாருன பெரும்பெயர் இருந்தபோதிலும் ஐக்கிய தேசியக் கட்சியில் ஸ்தானத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனில் கீழ்மட்டத்திலிருந்தே வரவேண்டும்.

34. மக்களின் இறைமையை நாம் கௌரவிப்பதனுல் ஐக்கிய தேசியக்கட்சி மக்களின் நன்மதிப்பைப் பெற்றுள்ளது.

35. எமது கொள்கைகளுக்கேற்ப ஆட்சியாளர்களை பொதுமக்களின் வாக்குகள் மூலம் தேர்ந்தெடுப்போம். மாக்சிய முறை அவ்வாறமைந்ததன்று. அவர்கள் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் கட்சியாகும்.

36. ஐக்கிய தேசியக்கட்சி எப்போதும் சனநாயகக் கோட்பாடுகளுக்கேற்பக் கருமமாற்றுகிறது.

37. சமசமாஜக் கட்சித்தலைவர் கலாநிதி என். எம். பெரேரா அவர்களும் கூட ஐக்கிய தேசியக்கட்சியின் நியாயமான தன்மையை ஏற்றுக்கொண்டமை எமது கட்சியில் முன்னேற்றப் பாதைக்கு நல்ல சகுனமாக அமைகின்றது.

38. இலவசக் கல்வியையும், இலவச வைத்திய வசதிகளையும் மக்களுக்காகப் பெற்றுக்கொடுத்தது ஐக்கிய தேசியக் கட்சியே.

39. பொதுமக்களின் கருத்துக்களுக்கும், வாக்குகளுக்கும் தலைபணிந்து மக்களின் விருப்பிற்கேற்ப மக்கள் இறைமையைக் கடைப்பிடிக்கும் கட்சி ஐக்கிய தேசியக் கட்சியே.

40. ஐக்கிய தேசியக் கட்சி பொதுமக்களின் சொத்தாகும்.



Sponsored by: JANET HOU AH CHING
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41. கட்சிப் பிரதிநிதிகளை ஆயிரக்கணக்கில் அழைத்து அரசியல் மாநாடுகளை நடத்தும் ஒரே கட்சி உலகிலே ஐக்கிய தேசியக் கட்சியாகும்.

42. ஐக்கிய தேசியக்கட்சி எவ்வளவு தூரம் விரிவாக சனநாயகத்தைப் பாதுகாக்கிறதென்பது எமது அரசியல் மாநாடுகளிலிருந்து புலனுகிறது.

43. திரு. டீ. என். சேனுநாயக்கா, திரு. சேர். ஜோன் கொத்தலாவலை, டட்லி, சேனநாயக்கா ஆகியோரின் காலங்களில் கட்சியின் கட்டுப்பாடு காக்கப்பட்டது. ஜயவர்த்தன யுகத்திலும் அது அவ்வாறே பாதுகாக்கப்படல் வேண்டும்.

44. பின்னுலிருந்து கத்தியால் தாக்கும் நண்பர்கள் இப்போதே கட்சியிலிருந்து வெளியேற வேண்டும்.

45. நானும், எனது கட்சியும் முதலாளித்துவத்தைப் பாதுகாக்க மாட்டோம்.

46. சமயம், குலம், அதிகாரம் என்பவற்றுக்கமைய மனிதர்களை ஆதரிப்பது ஐக்கிய தேசியக்கட்சியின் கொள்கையல்ல.

47. தகுதியுள்ளவர்கட்கு உரிய இடத்தைப் பெற்றுக் கொடுப்பது எமது நோக்கமாகும்.

48. பொதுமக்களுக்கு சனநாயகத்தைப் பற்றிய அறிவைப் பெற்றுக்கொடுப்பது எமது கட்சியின் கடமையாகும்.

49. சனநாயகம் அழிந்துபோகும் ஒரு சந்தர்ப்பம் ஏற்படின் அச்சந்தர்ப்பத்தில் அதற்கெதிராக பொதுமக்கள் கருத்தை ஏற்படுத்தி, அதன்மூலம் பொது உரிமைய்யப் பாதுகாக்கச் செயல்படுவது ஐக்கிய தேசியக் கட்சியின் இலட்சியமாகும்.

50. 1977ல் பொதுத்தேர்தல் நடைபெருவிடின், யார் வராமலிருந்தாலும், பொதுமக்களின் சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொடுக்க நான் தனியாக போராட்டம் நடத்துவேன்.

51. ஐக்கிய தேசியக்கட்சியின் கீழ் நாட்டுமக்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்தால் ஒரு கோடியே இருபது இலட்சத்தைக் கொண்ட ஆள்பலம் எமக்குண்டென்பதை அரசாங்கம் உணர்ந்துகொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
Sponsored by: JANET HOU AH CHING

52. பொருளாதாரக் குறைபாட்டினாலும், பல்வேறு கஷ்டங்களினாலும் துன்புறும் இந்நாட்டு மக்கள் விடுதலை பெறுவதற்காக ஐக்கிய தேசியக்கட்சி செயல்படும்.

53. ஐக்கிய தேசியக்கட்சியின் பழைய தன்மையை மாற்றி ஏழை மக்களின் கட்சிப் பிரதிநிதிகள் என்ற முறையில் நாம் இன்று முன்வந்துள்ளோம்.

54. இன்று ஐக்கிய தேசியக்கட்சி அதிகாரத்துக்கோ, பணத்துக்கோ அல்ல நீதிக்கும், நியாயத்துக்குமே இடமளிக்கிறது.

55. அரசியற் சுதந்திரம், சனநாயக தாபனங்களைப் பாதுகாத்தல், இலங்கை மக்களுக்காக பொருளாதார சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்தல் போன்றவையே ஐக்கிய தேசியக் கட்சியின் நோக்கங்களாகும்.

56. யார் விலகினாலும், இறந்தாலும், ஐக்கிய தேசியக் கட்சியைத் தொடர்ந்துகொண்டு நடத்த வேண்டும்.

57. ஐக்கிய தேசியக்கட்சி ஒருபோதும் இலங்கை மக்களுக்குப் புறமுதுகு காட்டவோ, பொய் வாக்குறுதிகளை அளிக்கவோ மாட்டாது.

58. ஐக்கிய தேசியக்கட்சியைப் போன்ற சனநாயகக் கட்சியொன்று உலகத்தில் வேறெந்த நாட்டிலும் இல்லை எனக் கூறலாம்.

59. ஐக்கிய தேசியக்கட்சி இல்லாதவர்களையல்ல உள்ளவர்களையே பிரதிநிதித்துவப்படுத்திய கட்சி என்று மக்கள் கருதியதனால் 1970ல் நாம் படுதோல்வி யடைந்தோம்.

60. நான் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின் ஐக்கிய தேசியக்கட்சியின் வடிவமைப்பையும், அதன் கொள்கைகளையும், செயற்றிட்டங்களையும் மாற்றியுள்ளோம்.

61. தூய்மையான எண்ணத்துடன் மக்களுக்காகச் சேவை செய்ய தன்னை அர்ப்பணம் செய்துள்ள அரசியற் கட்சியொன்று இலங்கையில் இருக்குமானால் அது ஐக்கிய தேசியக் கட்சியாகும்.

62. பொதுமக்களுக்கு இறைமையைப் பெற்றுக் கொடுத்தது ஐக்கிய தேசியக் கட்சியே.



Sponsored by: JANET HOU AH CHING
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

63. சுதந்திரம் பெற்றதிலிருந்து கடந்த இருபத்தொன்பது ஆண்டுகளின் அரைவாசிக் காலம் வரை நாட்டை ஆட்சி செய்யும் பாக்கியம் ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடைத்துள்ளமை, மக்கள் மனதில் எமது கட்சி உறுதியான இடத்தைப் பெற்றுள்ளமையினுலாகும்.

64. எனது நிறத்தை நான் ஒருபோதும் மாற்றமாட்டேன். நான் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியிலேயே இருப்பேன்.

65. நாம் பெற்ற தோல்வியினுல் நாம் பல பாடங்களைக் கற்றுக்கொண்டோம். மக்கள் விரும்பினுல், விவேகமுள்ள உறுதியான முற்போக்கு அரசாங்கமொன்றை தேசத்துக்காகப் பெற்றுக்கொடுக்க எத்தனிக்கும் நன்கு புனரமைக்கப்பட்ட கட்சி என்ற முறையில் நாம் முன்வந்துள்ளோம்.

66. இலங்கைக்கு சுதந்திரத்தைப் பெற்று சனநாயக ஸ்தாபனங்களை அமைத்து, அதன்மூலம் பொருளாதார சமுதாய முன்னேற்றத்தை அடைகின்ற முக்கிய நோக்குடனேயே நாம் எமது கட்சியை தாபித்தோம்.

67. பொதுத் தேர்தல்களில் நாம் அடைந்த தோல்விக்கேற்ப எமது குறைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு முயற்சிக்க வேண்டும்.

68. எமது நாட்டு மக்களின் முன்னேற்றம் கருதி ஐக்கிய தேசியக்கட்சி செய்யக்கூடிய ஏதேனும் இருப்பின் நாம் அறிமுகம் செய்து வைக்க சனநாயக நிறுவனங்களைக் காப்பதன் மூலம் மாத்திரமே அவற்றைச் செய்யலாம்.

69. 1956ஆம் ஆண்டு அடைந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தோல்வியை ஐக்கிய தேசியக் கட்சி ஏற்றுக்கொண்ட முன்மாதிரியான செயல் மூலம், இந்நாட்டில் சனநாயகத்தைச் சிறந்த முறையில் செயல்படுத்துவதற்கு தேவையான அடிப்படையொன்று உருவாகியதுடன் காலத்துக்குக் காலம் அதிகாரத்தில் உள்ளவர்களை மாற்றக்கூடிய அடித்தளமும் இடப்பட்டது.

70. 1970ல் நாம் தோல்வியடையக் குறிப்பாக காரணங்கள் இருந்தன. எமது ஆட்சிக் காலத்தில் வாழ்க்கைச் செலவைக் குறைக்க முடியாமற் போனதும், தொழிலில்லாப் பிரச்சினையைத் தீர்க்க முடியாமற் போனதும் அவ்விரு காரணங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
Sponsored by: JANET HOU AH CHING

71. இலங்கையருக்கு உகந்த வாழ்க்கைத் திட்டத்தை ஏற்படுத்துவதே ஐக்கிய தேசியக் கடசியின் நோக்கமாகும்.

72. எமது கட்சியில் வேரூன்றியுள்ள செயற்படாத முரட்டுத்தனமான உயிரற்ற எண்ணங்களும் குணங்களும் உடனடியாக அகற்றப்படல் வேண்டும்.

73. பொதுத்தேர்தலொன்று நடைபெறுமாயின் அதற்கும், இன்றேல் அதை ஏற்படுத்திக் கொள்வதற்கும் ஐக்கிய தேசியக் கட்சி ஆயத்தமாக உள்ளது.

74. நாம் தேர்ந்தெடுத்துள்ள அமைப்பாளர்கள் கட்சிக் கோட்பாடுகளை செயற்படுத்தாமல், ஒழுங்கு விதிகளுக்கு முரண்பாடான முறையில் செயல்படுபவர்களாயின், நாம் அவர்களை மாற்றுவோம்.

75. எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களை வைத்துக்கொண்டு மாத்திரம் இன்று ஐக்கிய தேசியக் கட்சி முன்வரவில்லை. திட்டத்தைச் செயல்படுத்தும் ஆற்றலும் திறமையுமுடைய வாலிபர்களுடனேயே முன்வந்துள்ளோம்.

76. தேசத்தினதும், மக்களினதும் சுதந்திரத்தை இல்லாமற் செய்வதற்கு அதிகார ஆசை பிடித்த சிலர் எத்தனித்த எல்லா சந்தர்ப்பங்களிலும் எமது கட்சி முன்வந்து சுதந்திரத்தைக் காப்பாற்றியுள்ளது.

77. பொதுமக்களின் விரக்தியை இல்லாமற்செய்து, அவர்களுக்ககு மன நிம்மதியை எமது அரசாங்கத்தின் மூலம் பெற்றுக் கொடுப்பது எனது நோக்கமாகும்.

78. எமது கட்சியிலிருந்த தலைவர்கள் சனநாயக மனித சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக முன் செல்கையில் மலர் மாலைகளைப் போன்று, கற்களையும், முட்களையும் எதிர்நோக்கினர் என்பதை நாம் மறக்கக்கூடாது.

79. 1970ல் நாம் தோல்வியடைந்தாலும் சுதந்திரத்தைக் கௌரவிக்கின்ற பத்தொன்பது இலட்சம் மக்கள் எம்மீது நம்பிக்கை வைத்து வாக்களித்துள்ளார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது.

80. சனநாயக முறையிலான புதுத்திட்டக் கோட்பாடுகள் என்பவற்றுடன் முன்செல்லும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சுற்றி ஒன்றுசேரும் துன்புறும் மக்களின் விருப்புக்களை சகல விதத்திலும் நிறைவேற்றிக் கொடுப்பது எனது ஒரே நோக்கமாகும்.



Sponsored by: JANET HOU AH CHING
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

81. ஐக்கிய தேசியக்கட்சி அடிப்படையாகவும் குறிப்பாகவும் இலங்கை மக்களின் பொதுசன உரிமையை ஸ்திரப்படுத்து வதற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுப்பதற்காகச் செயல்படுகின்றது.

82. எமது கட்சியின் அங்கத்தினர்களுக்கு எனது தலைமைத்துவத் துக்குப் பதிலாக வேறொரு தலைவரைத் தேர்ந்தெடுக்கத் தேவைப்படின், அதற்கான பூரண உரிமை ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதிகளுக்கு உண்டு.

83. பேச்சுச் சுதந்திரம், வாக்களிக்கும் அதிகாரம், பாராளுமன்ற இறைமையை சனநாயக உரிமைகள் போன்றவற்றைப் பாதுகாபப்பதற்காக முன்வரும் சகலருக்கும் ஒரே வகையில் உதவுவதற்காக ஐக்கிய தேசியக்கட்சி எப்பொழுதும் ஆயத்தமாக உள்ளது.

84. தேசியமய இயக்கங்களின் கட்டாய தேவையை உணர்ந்து, எல்லா மக்களினதும் உரிமைகளைப் பாதுகாப்பதுடன், கட்சிக் கொள்கைகளைச் செயற்படுத்துவதும் எமது ஒரே நோக்கமாகும்.

85. மக்கள் கருத்துக்குச் செவிசாய்க்கும் சனநாயக சோஷலிஸத்தின் மூலம் முன்னேற்றமும் சிறப்பும் வாய்ந்த மக்களுக்கு, நேர்மையான ஓர் அரசாங்கத்தைத் தோற்றுவிப்பது எமது ஒரே நோக்கமாகும்.

86. ஐக்கிய தேசியக்கட்சி முக்கோண அடிப்படையில் மனித, பொருளாதார, அரசியல் சுதந்திரத்தை மக்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்காக தன்னை அர்ப்பணித்துள்ள கட்சியாகும்.

87. முன்னைய ஐக்கிய தேசியக்கட்சியைச் சேர்ந்த நாம் பொதுமக்களின் எண்ணங்கள் கருத்துக்கள் போன்றவற்றின் அடிப்படை மீது செயல்படுகின்ற வேலைத்திட்டமொன்றைப் பின்பற்றுவோம்.

88. ஐக்கிய தேசியக் கட்சி பலமுறை தோல்வியடைந்தபோதிலும், மக்கள் மீதுள்ள அசையாத நம்பிக்கை காரணமாக, சமூகத்திற்கேற்றவாறு கட்சியின் கொள்கைகளை மாற்றிக்கொண்டு மக்களிடம் செல்ல நாம் அஞ்சமாட்டோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
Sponsored by: JANET HOU AH CHING

89. இலங்கையின் சனநாயக ஆட்சியைப் பற்றி வரலாறு எழுதுமிடத்து அதைப் பாதுகாக்க நாம் மேற்கொண்ட முயற்சி பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும்.

90. ஐக்கிய தேசியக் கட்சி சோஷலிஸக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டுள்ள சனநாயக அரசியற் கட்சியாகும்.

91. ஐக்கிய தேசியக் கட்சியின் வரலாற்றில் தலைவர் எவரும் பொதுமக்களின் உரிமைகளைப் பறிப்பதற்கு முயற்சி யெடுத்ததில்லை.

UNIVERSITY OF PERADENIYA
24-2-1996
LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
Sponsored by: JANET HOU AH CHING

# THE GIFT OF TRUTH EXCELS ALL OTHER GIFT



***We would like to express our special thanks to Dato Chan Fook of Kuala Kangsar for rendering his support and assistance in helping towards the Asokaramaya Child Welfare Society, Colombo.***

**SADHU; SADHU; SADHU;**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் பதிப்பு **1995**

UNIVERSITY OF PERADENIYA
24-2-1996
LIBRARY

ISBN............

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
24-2-1996
LIBRARY

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
24-2-1996
LIBRARY

471046

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF
24-2-1996
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ජයවර්ධන සංස්කෘතික කේන්ද්‍රය • ஜயவர்த்தன கலாச்சார நிலையம் • JAYEWARDENE CULTURAL CENTRE

Published by:-
Asokaramaya Child Welfare Socirty
Colombo
Sri Lanka

ISBN 955-9269-02-X

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org